In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வினை தீர்க்கும் விநாயகர்

கவிஞர் சித்தூர் பிச்சைராசு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வினைதீர்க்கும்

விநாயகர்

கவிஞர் சித்தூர் பிச்சைராசு

ஸ்ரீ ஆனந்த நிலையம்
54/2, ராஜாபாதர் தெரு, பாண்டி பஜார்,
தி.நகர், சென்னை - 600 017.
☎ 2815 3242, 94440 35667

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வினை தீர்க்கும் விநாயகர்

ஆசிரியர்

கவிஞர் சித்தூர் **பிச்சைராசு,**

M.A., B.L., P.G. Dip in Pers. Management, P.G.Dip in Labour Admin.

வெளியீடு : 2011

விலை : ரூ. 60.00

ஸ்ரீ ஆனந்த நிலையம்

29/5, ரங்கநாதன் தெரு (மாம்பலம் ரயில் நிலையம் எதிரில்),

தி.நகர், சென்னை - 600 017.

☎ 044 - 2434 6242

VINAI THEERKKUM VINAYAGAR

Edition : 2011

Author

Kavignar Sithur **Pitchairaju,**

M.A., B.L., P.G. Dip in Pers. Management, P.G.Dip in Labour Admin.

SRI ANANDHA NILAIYAM

54/2, Rajabather Street, Pondy Bazaar, T.Nagar,

Chennai - 600 017 ☎ : 2815 3242, 94440 35667

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உள்ளடக்கம்

தலைப்புகள்	பக்கம் எண்
முன்னுரை	
பாகம் ஒன்று (விநாயகர் வரலாறு முதலியன)	
1. விநாயகர் பிறப்பு	2
1. 1. விநாயகர் முகத்தோற்றம்	3
1. அ. பிள்ளையார் சுழி	5
ஆ. விநாயகர் பெயர்கள்	6
2. விநாயருக்கு படைக்க வேண்டிய உணவு வகைகளும், மற்ற வழிபாட்டுப் பொருள்களும்	10
3. (அ) விநாயகர் ஆயுதங்கள்	15
(ஆ) விநாயகர் அணிகலன்கள்	16
(இ) விநாயகரின் நிறங்கள்	18
(ஈ) விநாயருக்கு விருப்பமான மந்திரம்	19
(உ) விநாயகர் உருவச் சிறப்புகள்	20
(ஊ) விநாயகர் அலங்காரம்	22
3. 1. பலமுக விநாயகர்கள்	23
3. 2. பெண் தெய்வங்களுடன் விநாயகர்	25
4. விநாயகர் திருமணம்	26
5. விநாயகப் பெருமானின் முப்பத்தி இரண்டு வடிவங்கள்	28

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தலைப்புகள்	பக்கம் எண்
6. இலக்கியங்களில் விநாயகர் அல்லாத பிள்ளையார்கள்	29
7. சூரிய உதயத்துக்கு முன் கணபதி ஹோமம்	30
8. எந்தெந்த பொருள்களில் விநாயகர் சிலைகள் அமைந்துள்ளன	31
9. பெரிய வடிவில் விநாயகர் அமைந்த கோயில்கள்	34
10. பெரிய விநாயகர் கோயில்கள்	42
11. அதிசயப் பிள்ளையார்கள்	62
12. ஐம்பெரும் சக்தி விநாயகர்	75
13. விநாயகப் பெருமானின் அறுபடை வீடுகள்	76
14. ஐங்கரன் உணர்த்தும் அரிய உண்மைகள்	77
15. விநாயகர் விரதங்கள்	78
16. விக்னம் களையும் விநாயகர்	80
17. கரன்சி நோட்டில் கணபதி	81
18. வெளிநாடுகளில் விநாயகர் சிலைகள்	82
19. விநாயகர் பெயர்க் காரணங்கள்	84
20. விநாயகர் சதுர்த்தி விழா	86
21. வித்தியாசமான வழிபாட்டு முறைகள்	94
22. எலியின் மீது யானை தத்துவம் என்ன?	95
23. விநாயகர் வழிபாடும் பயனும்	96

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தலைப்புகள்	பக்கம் எண்

24. விநாயகர் திருக்கோலங்கள் 97

25. எண்களும், விநாயகரும் 101

பாகம் இரண்டு (புராணக் கதைகள்)

1. இராவணன், ஆத்ம லிங்கம், விநாயகர் 104
2. மகாபாரதம் எழுதிய விநாயகர் 106
3. காவிரி கடலில் கலந்த கதை 107
4. விநாயகர் சீற்றம் 108
5. உஜ்ஜையினியில் கணபதி வழிபாடு 108
6. குழந்தைகள் மணலில் விளையாடக் கூடாது, ஏன்? 109
7. விடம் தீர்த்த விநாயகர் - திருமருகல் - திருவாரூர் மாவட்டம் - மாணிக்க வண்ணர் திருக்கோயில் 110
8. விநாயகரை வணங்க மறந்த இந்திரன் பட்ட பாடு 110
9. திரௌபதி வழிபட்ட வலம்புரி விநாயகர் 111
10. குளம் வெட்டி விநாயகர் 111
11. காதலை நிறைவேற்றிய கணபதி 112
12. காவிரியை அகத்தியர் அடைத்ததும், விநாயகர் விடுவித்தலும் 113

பாகம் மூன்று

1. பிள்ளையார் எத்தனை பிள்ளையார் 115

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முன்னுரை

வாழ்க்கையில் எந்த நல்லகாரியம் செய்யத் தொடங்கும் போதும் பிள்ளையார் சுழிபோட்டுத் தொடங்குதலும், பிள்ளையாரப்பா! நான் தொடங்கும் இந்தக் காரியம் நல்லபடியாக நடக்க வேண்டும் நீயே துணை என்று கணபதியை கோயிலில் சென்று வணங்கி ஆரம்பித்தலும் தமிழகத்தில் எல்லோரும் அறிந்த உண்மை.

பிள்ளையாரைப் பற்றி எழுதப்போகும் இந்த நூலையும் நான் உச்சிப் பிள்ளையாரை வேண்டித்தான் துவங்குகிறேன்.... உச்சிப் பிள்ளையாரப்பா இந்நூலை நன்முறையில் எழுத எனக்கு தங்களின் அருளும் ஆசீர்வாதமும் வேண்டுகிறேன்.

கண என்பது மக்களைக் குறிக்கும். பதி என்பது தலைவர் என்ற பொருளுடையது. எனவே கணபதி என்பது மக்கள் தலைவன் எனப் பொருள்படும். எந்த ஒரு இந்து சமய விழாவும் கணபதியாரின் இறைவணக்கப் பாடலுடன் தான் தொடங்கும்.

பல்வேறு பெயர்களுடைய விநாயகர், ஞானம், கற்றல், பொது அறிவு, சக்தி ஆகியவற்றின் நிலைக்களமாகக் கருதப்படுவார். விநாயகப் பெருமான் ஓங்காரம் உணர்த்துவார். ஓங்காரத்தில் அகரம் உகரம் மகரம் இருக்கிறது. பிரம்மா, விஷ்ணு, சிவா என்பவற்றையும் ராசகுணம், தாமச குணம் ஆகியவற்றையும் உணர்த்துவதாகும்.

எனக்கு சரியாக நினைவில்லை: ஆனால் ஒரு பிள்ளையார் சதுர்த்தியின் போது எனக்கு ஒரு ஆசை

In Public domain. Digitization: Muthulakshmi Research Academy

தோன்றியது ... சேகரிக்க வேண்டும் என்பதுதான் அந்த ஆசை.போகும் இடத்தில் எல்லாம் திரும்புகின்ற திசைகள் எல்லாம் தெருக்கள் எல்லாம் காணுகின்ற ஒரே கோயில் பிள்ளையாரப்பன் கோயில்தான். எந்த ஒரு காரியம் தொடங்குமுன் பிள்ளையாரை வணங்கிச் சென்றால் தங்குதடையின்றி நடக்கும் என்ற அசையாத நம்பிக்கையும் அனுபவித்த பயன்களின் அனுபவங்களும்தான் அதன் காரணம். சிறிதும் பெரிதுமாய், பெயரிட்டும் பெயரிடாமலும் எத்தனை எத்தனை கோயில்கள்; வித விதமான பெயர்களுடன் எழுந்தருளியிருக்கும் விநாயகப் பெருமானைக் காணும் போதெல்லாம் அந்தப் பெயர்களை பட்டியலிட்டுப் பார்க்க வேண்டும் என்று ஒரு உன்னதமான ஆசை தோன்றியது. எனவே ஒரு டயரியில் விநாயகப் பெருமானின் பெயர்களை பட்டியலிட ஆரம்பித்தேன்,..... புதிதாக ஒரு பிள்ளையார் பெயர் கிடைத்தால் அளவிட முடியாத ஆனந்தத்தோடு அதை டயரியில் குறிப்பிடுவேன். இன்றுவரை அதைச் செய்து கொண்டிருக்கிறேன். தமிழகம் மட்டுமின்றி, நம் அருகில் உள்ள மாநிலங்களில் நான் பயணம் செய்த போதும், குறிப்பாக கர்நாடகா, ஆந்திரா மாநிலங்களிலும் எனக்குத் தெரியாத புதிய பெயர்களுடன் காட்சி தந்து அருள்புரியும் விநாயகப் பெருமானின் திருப்பெயர்களைக் கண்டு பெருமகிழ்ச்சி கொண்டேன்.

புதுப்புது விநாயகப் பெருமானின் பெயர்களை பட்டியலிட்டு மகிழ்ந்த எனக்கு விநாயகரைப் பற்றிய நிகழ்வுகள், செய்திகள், கோயில்கள் முதலியன அவ்வப்போது படிக்க படிக்க அவரைப் பற்றி ஒரு நூல் எழுத வேண்டும் என்ற பேரவா மனதில் தோன்றியது. எனவே அதற்குப் பிறகு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விநாயகரைப் பற்றி நான் படித்த, பார்த்த, கேள்விப்பட்ட அனைத்து செய்திகளையும் எழுதியுள்ளேன். இந்நூலைப் படித்து மகிழ்ச்சியும் விநாயகப் பெருமானின் அருளும் உங்களுக்கு கிடைக்க உச்சிப்பிள்ளையாரப்பனை வேண்டுகிறேன்.

எனக்கு இந்நூல் எழுத உதவிய தெற்கு இரயில்வே முதுநிலை பணியாளர் அலுவலர் திரு.ஏ. நாகையாசாமி, மற்றும் பணியாளர் ஆய்வாளர் திரு. ஆர்.மனோகர், இந்நூலை சிறப்புடன் அச்சிட்ட சார்ப் ஆப்செட் அச்சகத்தினருக்கு எனது உளங்கனிந்த நன்றி. ஆன்மீகச் செய்திகள் மற்றும் நிகழ்வுகளைச் சமுதாயத்திற்கு வழங்கி மக்களின் நல்வாழ்வுக்கு உறுதுணை புரியும் தினத்தந்தி, தினகரன் நாளிதழ்களுக்கும் ஆலயம் மாத இதழுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரயில்வே துறையில் இருபத்தி ஏழரை ஆண்டுகள் பணியாற்றி, தெற்கு இரயில்வேயில் தலைமை பணியாளர் அலுவலர் (நிர்வாகம்) பதவியிலிருந்து பணி ஓய்வு பெற்ற நான், இதுவரை **'உணர்வின் அலைகள்' 'குறள் நெறிப்பொன்னி'** என்ற இரு கவிதை நூல்களை வெளியிட்டுள்ளேன். இப்போது **'மனித நேயம் வளர்ப்போம்'** என்ற கவிதை நூலை வெளியிடுகிறேன். இவை தவிர இரயில்வே துறை சார்ந்த **'Discipline and appeal Rules'** புத்தகம் இரண்டு பதிப்புகள் (2004, 2006) வெளியிட்டுள்ளேன் என்பதை மகிழ்வுடன் வாசகப் பெருமக்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்

அன்பன்

கவிஞர் **சித்தூர் பிச்சைராசு**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாகம் ஒன்று

(விநாயகர் வரலாறு முதலியன)

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

1. விநாயகர் பிறப்பு

விநாயகர் பெருமான் பிறந்த மாதம் முதலியன கீழே காணலாம். ஒவ்வொரு கடவுளுக்கும் பிறப்பு, நட்சத்திரம் முதலியன புராணங்களில் குறிப்பிட்டுள்ளன என்பது பக்தர்கள் அனைவரும் அறிந்த உண்மையாகும்

விநாயகர் பிறந்த மாதம் - ஆவணி

விநாயகர் பிறந்த நட்சத்திரம் - விசாகம்

விநாயகர் பிறந்த திதி - பூர்வ பட்ச சதுர்த்தி

விநாயகர் பிறந்த நாளையே நாம் விநாயகர் சதுர்த்தியாகக் கொண்டாடி மகிழ்கிறோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

1.1 விநாயகரின் முகத்தோற்றம்

விநாயகரின் முகத்தோற்றம் முருகன் தோற்றம் போல் இயல்பான மனித முகம் இல்லை. யானை முகம் கொண்டவர் விநாயகர். இதற்கு புராணங்களில் கூறப்பட்ட காரணங்களை இப்போது காணலாம்.

பத்மாபுராணத்தில் கூறிய நிகழ்ச்சியை முதலில் காணலாம். சிவபெருமானுக்கும் பார்வதி தேவிக்கும் அழகான மகனாய்ப் பிறக்கிறார் விநாயகர். தேவர்கள் தேவியர்களும் பார்வதி தேவியாரின் அழைப்பை ஏற்று வந்து குழந்தையை வாழ்த்திச் சென்றார்கள். அழகான குழந்தையை ஈன்ற பார்வதி தேவியார் மிகக் கர்வம் கொண்டு, தன் தம்பி சனீஸ்வரன் பார்த்தால் பார்க்கும் யாரும் சாம்பலாகி விடுவார் என்று தெரிந்தும் தன் குழந்தையைக் காண அழைக்கிறார். சனீஸ்வரர் கொஞ்சமாக சாய்த்து தன் பார்வையை செலுத்தினாலும் குழந்தையின் தலை பறந்துவிடும் என்று உணர்ந்து, பிரம்ம தேவனும் சனிவந்து குழந்தையைக் கண்டு அவ்வாறு நிகழ்ந்தால் பிரம்ம தேவன் கண்ணில்படும் முதல் விலங்கின் தலையைப் பொறுத்தி குழந்தைக்கு வாழ்வளிப்பதாக பார்வதி தாயாருக்கு சத்தியம் செய்து கொடுத்தார். சனி வந்து பார்த்ததும் விநாயகரின் தலை எரிந்து போக, பிரம்மதேவன் தான் கண்ட முதல் விலங்கான யானை முகத்தைப் பொறுத்தி விநாயகருக்கு வாழ்வளித்தார். இதுவே பத்மா புராணத்தில் உள்ள கதையாகும்.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

இனி சிவபுராணத்தில் யானை முகம் விநாயகருக்கு வந்த கதையைக் காணலாம். பார்வதி தேவி ஒரு முறை குளிக்கச் செல்லும் போது, தன்னை யாரும் இடையூறு செய்யாதிருக்க, தன் உடலின் அழுக்கை உருட்டி குளியலறைக்கு ஒரு காவலாளி உருவாக்கி, குளியலறை முன்பக்கம் அமரச் செய்தார். சிவபெருமான் வேட்டையாடி வீடு திரும்பினார். அவர் நேரே பார்வதியைக் காணச் செல்லும் போது, குளித்துக் கொண்டிருந்த தேவியை யாரோ பார்க்க வருவதைத் தடுத்து நிறுத்தினார் குளியலறையை காவல் காத்தவர். அதனால் ஆத்திரமடைந்த சிவன் அவ்வாயில் காவலன் தலையை வெட்டி வீழ்த்தினார். அதைக்கண்ட பார்வதி தேவி மனம் வருந்தினார். பின்னர், சிவபெருமான் துணைவியர் வருத்தத்தைப் போக்க, முதன் முதலில் பார்த்த வடக்கு நோக்கிப்படுத்து உறங்கும் விலங்கின் தலையைக் கொய்து வர தன் காவலர்களை அனுப்பினார். அவர்கள் கொண்டு வந்த யானை முகத்தை தலை அறுக்கப்பட்ட உடலில் சிவபெருமான் பொறுத்த, கணேசர் உருவானார். இது சிவபுராணக் கதை.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

1. (அ) பிள்ளையார் சுழி

எந்த ஒரு நல்லகாரியத்தைச் செய்ய விழையும் போதும், விநாயகரைத் தரிசித்து அவர் அருள் வேண்டுகிறோம். காரணம், அந்த காரியத்தில் எந்த தடை வந்தாலும், விநாயகர் தடைகளை நீக்கி வெற்றிக்கு வழிவகுத்து பக்தர்களுக்கு அருள்புரிவார் என்ற அனுபவ அறிவும் விநாயகர் மீது பக்தர்கள் வைத்திருக்கும் அளவிடமுடியாத நம்பிக்கையும் தான்.

கல்வி, பயணம், திருமணம், வீடுகட்டுதல், புதிய தொழில் தொடங்குதல், வியாபாரம், புத்தகம் எழுதுதல், புதிய வேலைக்குச் சேர்தல் என வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் விநாயகரை வணங்கித்தான் தொடங்குவர். எனவே "பிள்ளையார் சுழி" என்ற தொடர் ஒரு நல்ல ஆரம்பத்தை குறிப்பதற்கான குறியீட்டுத் தொடர் என்பது உண்மை.

உருண்டு செல்லும் வாழ்க்கையை, தன் 'கோல்' சக்தியால் நிறுத்தி, நம்மை வாழ்நிலையில் உயர்த்தி, ஆனந்த மயமான வாழ்க்கையை அளிக்கும் கடவுளே விநாயகப் பெருமான். இத்தத்துவத்தை உணர்த்துவதே பிள்ளையார் சுழி.

இப்புத்தகத்தை எழுத உச்சிப்பிள்ளையாரைப்பனை வணங்கி, பிள்ளையார் சுழி போட்டுத் துவங்கியதை முன்னுரையில் குறிப்பிட்டதை, இங்கு அன்பர்களுக்கு பணிவோடு நினைவு கூற விரும்புகிறேன்.

ஓம் உச்சிப்பிள்ளையார் அப்பனே நமக:

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

1. (ஆ) விநாயகர் பெயர்கள்

விநாயகருக்கு பலபெயர்கள் இருக்கின்றன. இருந்தாலும் விநாயகர், பிள்ளையார் என்ற பெயர்களையே அதிக அளவில் மக்கள் உச்சரித்து வணங்குகிறோம். பிள்ளையாருக்கு என்னென்ன பெயர்கள் உள்ளன என்றும் அப்பெயர்களுக்கு என்ன காரணம் என்பதையும் கீழே காணலாம்.

1. **பிள்ளையார்** : சிவபெருமான் - பார்வதி தாயாரின் மூத்த பிள்ளைதான் விநாயகர், பிள்ளை என்ற பெயரில் ஆர் விகுதி சேர்ந்து பிள்ளையார் என்று அழைக்கப்படுகிறார். மூத்த பிள்ளையார் திருமும்மணிக்கோவை என்ற அகவலைப்பாடிய அதிராவடிகள் இதனையே கூறியிருப்பது அப்பெயரைத் தெளிவுபடுத்துகிறது எனலாம்.

2. **விநாயகர்** : "வி" என்றால் இல்லை என்று மற்றொரு பொருள் உண்டு. "நாயகர்" என்றால் தலைவர் - எனவே, தனக்குமேல் ஒரு தலைவன் இல்லை; தனக்கு நிகரான ஒருதலைவன் இல்லை, என்ற பொருளில் விநாயகர் என்கிறோம்.

   விநாயகனே - விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் என்கிறது கபிலதேவநாயனார் திருவிரட்டை மணிமாலை.

3. **கணேசன்** - கணங்களுக்கு எல்லாம் ஈசன் என்ற பொருளில் கணேசன் எனப்படுகிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

4. **விக்னேஷ்வரர்** (அல்லது) **விக்கினராசன்** - விக்கினம்-இடையூறு. இடையூறுகளைப் போக்க வல்லவர் எனவே விக்கினராசன் என்றும் விக்னேஷ்வரர் என்றும் அழைக்கப்படுகிறார்.

விநாயகனே வெல்வினையை வேரறுக்க வல்லான் என்று கபிலதேவ நாயனார் அருளிய திருவிரட்டை மணிமாலையில் கூறியுள்ளார்.

5. **யானைமுகத்தோன்** - வேழமுகத்தோன் - கஜாநனர் -கஜமுகன், கரிமுகன் - இவையனைத்திற்கும் யானையின் முகத்தை உடையவர் என்று பொருள்.

"யானை முகத்தான்", "வெண்டந்த வேழ முகத்தெம் பிரான்" என்று கபிலதேவ நாயனார் அருளிய திருஇரட்டை மணிமாலையில் கூறியுள்ளது குறிப்பிடத் தக்கது.

6. **பானைவயிற்றோன்** - பானை போன்ற பெரிய வயிற்றை உடையவர் என்று பொருள்.

மத்தள வயிறன் - மத்தளம் போன்ற பெரியவயிற்றை உடையவர்.

"ஸ்ரீ கணபதி காயத்ரீ மந்த்ரம் - மத்தள வயிறன் உத்தமி புதல்வனை" என்று குறிப்பிட்டப்பட்டது நினைவு கூறத்தக்கது.

7. **ஞானமுதல்வன்** - தம்பி முருகன் ஞானப்பழம் பெற உலகைச் சுற்ற, தன் மயில் வாகனம் ஏறி புறப்பட்ட சமயம், அன்னை - அப்பர் தான் உலகம் என்பதை தன்

In Public domain, Digitization Muthulakshmi Research Academy
தந்தை சிவபெருமான் கூற, உடனே ஒருநொடியில் தாய் தந்தையை சுற்றி ஞானப்பழம் பெற்றவர்.

8. **ஏகதந்தன்** - ஏகம் - ஒன்று என்றுபொருள். ஒரே ஒரு தந்தம் உடையவர் என்று பொருள். காரணம் மற்றுமொரு தந்தம் உடைந்து, ஒரு தந்தம் மட்டுமே முழுமையாக இருப்பதால் ஏகதந்தன்.

ஒரு தந்தம் உடைத்து மகாபாரதம் எழுதியது அனைவரும் அறிந்தது.

"ஏகதந்தத்தெந்தை செந்தாளிணை பணிந்தேத்துமினே" என்று திருஇரட்டை மணிமாலையில் கபிலதேவ நாயனார் கூறுகின்றார்.

9. **ஏரம்பர்** - இடையூறுகளை நீக்கி பலகீனமானவர்களைக் காப்பவர் என்று பொருள்.

10. **சம்போதரர்** - சகல உலகங்களுக்கும் இடையூறு ஏற்படாமல் பாதுகாக்கக் கூடிய சரிந்த தொந்தி உடையவர் என்பதால் இப்பெயர் பெற்றார்.

11. **கணாதிபன்** - கணபதி - கணங்களுக்கெல்லாம் தலைவன் என்பதால் இப்பெயர் பெற்றார்.

'க' என்பது ஞான நெறியில் ஆன்மா எழுதலைக் குறிக்கும்.

'ண' மோட்சம் பெறுவதைக் குறிக்கும்

'பதி' ஞான நெறியில் திகழ்ந்து பரம்பொருளை அடைவது என்பதாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy
கணேசன் என்ற சொல்லும் இதே பொருளைத்தரக் கூடியது.

12. **வக்கிரத்துண்டர்** - சுழி - வளைசல் - வக்கிரம் என்பன ஒரேபொருள் குறிக்கும் - அதாவது வளைந்து இருக்கிற துதிக்கையைக் குறிக்கும். எனவே வளைந்து இருக்கிற துதிக்கை உடையவர் என்று பொருள்.

13. **ஆகுவாகனன்** - 'ஆகு' என்றால் பெருச்சாளி என்று பெயர். எனவே ஆகுவாகனன் என்பது பெருச்சாளியை வாகனமாகக் கொண்ட மகாகணபதி என்பவரைக் குறிக்கும்.

14. **மூஷிகவாகனன்** - கஜமுகாசுரன் என்ற அசுரனை மகாகணபதி சம்ஹாரம் செய்கிற காலத்தில், அவ்வரசன், மூஷிகம் என்று சொல்லப்படுகிற பெருச்சாளி வடிவை எடுத்த போது, அவனை அழித்து அவனையே தனக்கு வாகனமாகக் கொண்டவர் மகாகணபதி - எனவே மூஷிகவாகனன் என்றும் ஆகுவாகனன் என்றும் அழைக்கப்படுகிறார்.

15. **ஐங்கரன்** - ஐந்து கரங்களை உடைய கணபதி என்று பொருள். அதாவது நான்கு கரங்களுடன் துதிக்கையும் சேர்த்து ஐந்து கரங்கள் ஆகும்.

16. **கஜானன்** - யானை முகத்தை உடையவன் என்று பொருள்

17. **கணேசினி, கஜானனி** பெண் உருவ விநாயகரை இப்பெயர்களிட்டு வணங்குகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

2. விநாயகருக்கு படைக்க வேண்டிய உணவு வகைகளும் மற்ற வழிபாட்டுப் பொருள்களும்

படைக்க வேண்டிய உணவு வகைகள் மற்றும் வழிபாட்டுப் பொருள்க;ள் என்றால் என்னென்ன? பொதுவாக இந்த இந்த உணவுப் பொருள்களை இந்த இந்த இறைவனுக்குப் படைக்க வேண்டும்: இந்த இந்த வழிபாட்டுப் பொருள்களைத்தான் இந்த இந்த இறைவனுக்குப் படைக்க உபயோகப்படுத்த வேண்டும் என்று வழிவழியாகவும், இலக்கியங்கள் வாயிலாகவும், மற்றவர்களைப் பார்த்தும் அறிந்து கொண்டு, அவை மாறாமல் கடைபிடித்து இன்றுவரை மக்கள் தெய்வங்களுக்கு படைத்து வழிபட்டு வருகிறார்கள்.

வாழை, பழவகைகள், தேங்காய், வெற்றிலை, பாக்கு சாம்பிராணி, ஊதுவத்தி, சூடம் முதலியன எல்லா தெய்வ வழிபாட்டிலும் பயன்படுத்துவதைப் பார்க்கிறோம். ஆனால் சில தெய்வங்களுக்கு அசைவ உணவு வகைகளும் சில தெய்வங்களுக்கு சைவ உணவு வகைகளும் வைத்துப் படைப்பதையும் பார்க்கிறோம்.

இவையெல்லாம் கூர்ந்து நோக்கும் போது, ஒரு உண்மை விளங்குகிறது. அந்த உண்மை என்னவென்றால், மனிதர்கள் தாங்கள் சுவைத்து, அனுபவித்து மகிழ்ந்த உணவு மற்றும் மணப்பொருள்கள், பழவகைகளையே தங்களுக்கு நன்மை புரிகின்ற, அருள்புரிகின்ற தாங்கள் வணங்கும் தெய்வங்களுக்கும் படைத்திருக்கிறார்கள். இறையன்பும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பக்தியும் அனைத்து பக்தர்களுக்கும் உண்டு எனினும், வழிபாட்டுப் பொருள்கள் மாறுபட்டிருப்பதற்குக் காரணம் அவர்களின் உணவுப் பழக்க வழக்கங்களும் அவர்கள் வாழ்ந்த சூழ்நிலைகளும்தான்.

சேக்கிழார் பாடிய பெரியபுராணத்தில் அறுபத்து மூன்று நாயன்மார்கள் சிவபெருமான் மீதும் சிவனடியார்கள் மீதும் அளவற்ற பக்திவைத்திருந்ததை அற்புதமாகக் காட்டியிருக்கிறார்கள். சைவத்திற்கு மதி ஆவார் இருவர் - அவர்களில் ஒருவர் மங்கையர்க்கரசியர்; மற்றொருவர் திலகவதியம்மையார் என்பர் சைவப்பெருமக்கள். அது போலவே சைவத்திற்கு கதி ஆவார் இருவர் - என்றும் கூறுவார்கள். அவர்கள், கண்ணப்பநாயனாரும், திருநாவுக்கரசரும் ஆவர். வேடர் குலத்தில் பிறந்தவர் ஆயினும் ஏன் கண்ணப்பநாயனார் சிறந்த நாயனார் என்று போற்றப்படுகிறார் என்றால், அவர் சிவபெருமான் மீது கொண்டிருந்த அளவிடற்கறிய பக்தி. ஆம் சிவபெருமானின் கண்ணில் இரத்தம் கொட்டியதைக் கண்டு, தன் ஒரு கண்ணை அம்பால் தோண்டி எடுத்து, இறைவனின் இரத்தம் சொட்டும் கண்ணில் பதித்தார். சோதிக்க நினைத்த இறைவன் மறு கண்ணிலும் இரத்தம் கொட்டச் செய்த போது, மற்றுமொரு கண்ணையும் அம்பினால் தோண்ட முற்பட்ட போது இறைவன் நில்லு கண்ணப்ப நில்லு கண்ணப்ப என்று தடுத்தாட் கொண்டார்.

ஏன் இந்தக்கடுமையான சோதனையை வைத்தார் என்பதுதான் இங்கு முக்கிய கேள்வி. நாள்தோறும் கண்ணப்பர் தான் வேட்டையாடி சுட்டுச்சமைத்து சுவைத்த அந்த மாமிச உணவை சிவபெருமானுக்கு படைத்தார்.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

ஆனால், அங்கே தினந்தோறும் சிவபெருமானுக்கு சைவ உணவுகள் படைத்து, மலர்களை வைத்து பூசை செய்யவரும் அந்தணர், அதைக்கண்டு அழுது அறற்றி, "இதென்ன கொடுமை" என்று கூறி மனம் வருந்தி சிவனிடம் முறையிட்டார். சிவபெருமான் மேற்சொன்ன சோதனையை நடத்தி, "படைக்கின்ற பொருள் எதுவாக இருந்தாலும் சிவபெருமான் ஏற்றுஅருள்வார் தன்மீது வைக்கும் பக்தியும், அன்பும் உண்மையாக, இருந்தால்" என்று அந்த அந்தணனுக்கு கண்ணப்பநாயனாரின் உண்மையான மிகச்சிறந்த பக்தியை உணர்த்த, கண்ணப்பர் உலகிற்கு தெய்வபக்தியின் எடுத்துக்காட்டாக விளங்குகிறார்.

அதனால்தான் "கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின் மை கண்ட பின் என்னப்பன் என்னையும் ஆட்கொண்டருளி" என்று கண்ணப்பரை திருநாவுக்கரசர் திருவாசகத்தில் பாராட்டுவதை இங்கு நினைவுகூற விழைகிறேன்.

இதிலிருந்து நாமறிய வேண்டியது, உண்மையான பக்தி கொண்டு பக்தன் எந்த வழிபாட்டுப் பொருளையும் இறைவனுக்கு படைத்து வழிபடலாம் என்பது தான்.

கர்நாடகாவில், கோப்பல் நகரின் புறநகர்ப்பகுதியில் வாழும் பாக்கியநகர் கிராமமக்கள், இங்க கஷ்திரியா என்கிற சமூகத்தினர். இவர்கள் விநாயக சதுர்த்தியின் போது, தாங்கள் உண்ணும் மாமிச வகைகளையும் பிராந்திப் பாட்டிலையும் நெய்வேத்தியமாக வைத்து விநாயகர் வழிபாடு இன்றுவரை நடத்திவருகிறார்கள். பாரம்பரியமாக, தங்கள் முன்னோர்கள் போல தாங்களும் இவ்வாறு விநாயகருக்கு படைப்பதாகவும் தாங்கள் சாப்பிடும் உணவை பிள்ளையாருக்குப் படைத்தால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அது நல்ல பலனைத்தரும் விநாயகர் அருள் புரிவார் என்று நம்புவதாகவும் கூறுகின்றனர். அன்பிற்கு உண்டோ அடைக்கும் தாழ்?

இனி இலக்கியம் வழியாகவும் பாரம்பரியமாகவும் பொதுவாக விநாயகருக்குப் படைக்கும் பொருள்களைக் காணலாம்.

மோதகம் (கொழுக்கட்டை): பெரும்பாலும் அரிசிமாவில் செய்கிறார்கள். இதன்வெளிப்புறம் வெள்ளையாகவும், உள்ளே மஞ்சள் நிற இனிப்பு பூரணம் இருக்கிறது.

மனதை வெள்ளையாக வைத்துக் கொண்டால் கண்ணிற்குத் தெரியாத விநாயகப் பெருமான் தங்களுக்கு அருள்புரிவார், என்ற தத்துவத்தின் அடிப்படையில் மோதகம் படைக்கப்படுவதாக சைவப்பெரியார்கள் கூறுகின்றனர்.

அருகம்புல் : விநாயகாருக்கு அருகம்புல் என்பது தொன்றுதொட்டு படைக்கப் பயன்படுத்தப்படும் முக்கியமான பொருள் ஆகும். எல்லோருக்கும் எல்லா இடத்திலும் எல்லாக் காலத்திலும் கிடைக்கும் பொருள். அருகம்புல் வழிபாடு, கணேசன் ஆடம்பரம் இல்லாத எளிமையை விரும்புவதை உணர்த்துகிறது என்பது சைவப் பெரியவர்கள் கூற்று. அருகம்புல் மாலை சுமார் அரையடிக்கு ஒரு கைப்பிடி அருகம்புல் வைத்து கட்டிய மாலை - சுமார் 12 அடிமாலை சாத்தி பிள்ளையார்பட்டி விநாயகரை வழிபட்டால் விசேஷம்.

சுண்டல் : வேக வைத்த சுண்டல் விநாயருக்கு படைக்கப்படுகிறது.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

அவல், பொரி : அவலும், பொரியும் ஊதினாலே பறக்கக் கூடியவை. வாழ்க்கையில் நாம் சந்திக்கும் துன்பங்களை ஊதித்தள்ளி விட வேண்டும் என்பதற்கு விநாயகரின் அருள் வேண்டி படைக்கப்படுகிறது.

பானகம் : வெல்லம், நீர், ஆகியன கலந்து செய்யப்படுவது பானகம் என்னும் சுவையான நீர் பிரசாதம்!

தேங்காய் : பொதுவாக தேங்காயை இரண்டாக உடைத்து, இறைவனுக்கு பக்தனின் வெள்ளை மனத்தைக் காட்டப்படுவதாக ஐதீகம்!

வாழைப்பழம்: வாழைப்பழம் இல்லாத சைவப் படையல் இல்லை எனலாம். வாழைப்பழத்தை மாலையாகக் கட்டி அணிவித்து மகிழ்கின்றனர் பக்தர்கள்.

மற்ற பழவகைகள் : கனிவான எண்ணங்களைக் கொடு என்று இறைவனிடம் வேண்ட படைக்கப்படுவது கனிகள். ஆப்பிள், ஆரஞ்சு, கொய்யா, மாதுளை, பேரி, மா என எல்லா வகை கனிகளும் படைக்கப் பயன்படுத்துகின்றனர்.

எள் : எள்ளுருண்டை இனிப்பான ஒரு படையல் பொருள்.

கரும்பு : கரும்பு போன்ற இனிப்பாக வாழ்க்கை அமைய வேண்டுதற்கு கரும்பு வைத்துப் படைக்கின்றனர்.

சர்க்கரைப்பொங்கல் : சர்க்கரைப் பொங்கல் போல் வாழ்க்கை இனிமையானதாக அமைய வேண்டும் என்று விநாயருக்குப் படையல் செய்கின்றோம்.

வெற்றிலை மாலை அணிவித்து விநாயகரை வணங்குகின்றனர் பக்தர்கள்.

In Public domain. Digitization: Muthulakshmi Research Academy

3. (அ) விநாயகர் ஆயுதங்கள்

விநாயகரின் ஆயுதங்கள் அதிகபட்சமாக 16 ஆயுதங்களாகக் காண்கிறோம். அந்த பதினாறு ஆயுதங்களும் பதினாறு கரங்களில், குறிப்பாக வீர விநாயகர் நின்ற கோலத்தில் காணலாம். அவை கீழ்வருமாறு :

1. வேதாளம்
2. வேல்
3. பாணம்
4. வில்
5. சபீராயுதம்
6. கத்தி
7. கேடயம்
8. சம்மட்டி
9. கதை
10. மாவெட்டி
11. நாகம்
12. கயிறு
13. சூலம்
14. குந்தம்
15. கோடாரி
16. கொடி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy.

3. (ஆ) விநாயகர் அணிகலன்கள்

ஆடை, அணிகலன்கள் இறைவன், இறைவிக்கு அணிவிப்பது என்பது மிக மிக முக்கியமான ஒரு செயல். ஒவ்வொரு தெய்வத்திருவுருவத்திற்கும் ஏற்ற, அனுமதிக்கப் பட்ட உடை மற்றும் அணிகலன்கள் திருக்கோயில்களில் அணிவித்து வழிபாடு செய்து வரும் நிகழ்ச்சியை அன்றாடம் காண்கிறோம். விநாயகர் பெருமானின் அணிகலன்கள் யாவை என்பதை இப்போது காண்போம்.

தலை: தலையில் அழகுமிகு கீரிடம் அணிந்திருப்பார். தங்கம், வெள்ளி முதலியவற்றில் முத்தாரம் கோத்த கிரீடங்கள், சாதாரண கிரீடம் என வகைவகையான கிரீடங்களைக் காணலாம்.

நெற்றி : நெற்றியில் மூன்று திருநீற்றுப் பட்டைகளுக்குப் பதிலாக அழகிய தங்கம், வெள்ளிப் பட்டைகள் பதித்து அழகு சேர்ப்பதைக் காணலாம்.

கழுத்து : ஆண்களும், பெண்களும் வகை வகையான தங்கத்திலான செயின்கள் அணிந்து மகிழ்தல் போல், விநாயகப் பெருமானுக்கு கழுத்துக்கு மட்டுமான செயின்கள், கழுத்திலிருந்து வயிறு / நாபி வரை தொங்குகிற அழகுமிளிரும் தங்கள், வெள்ளி, முத்து, பவளம், உத்தராட்சை என பலவகை விலையுயர்ந்த மாலைகள், கோயிலின் பொருளாதாரத்திற்கு ஏற்ப விநாயகருக்கு அணிவித்து அழகூட்டுகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy.

கைகள் : கைகளில் தங்கம், வெள்ளி, முத்து முதலிய விலையுயர்ந்த உலோகங்களில் செய்த காப்புகள் மணிக்கட்டருகில் அணிவித்திருப்பது காண்கிறோம். இதே போல, புஜங்களிலும் அணிவித்து அழகு சேர்க்கின்றனர். விரல்களில் அழகிய மோதிரங்கள் அழகுக்கு அழகூட்டு கின்றன.

இடுப்பு : இடுப்பில் வகைவகையான மாதிரிகளில் கலைநயத்துடன் கூடிய தங்கம், வெள்ளி, ஆபரணக்கற்கள் முதலியவற்றாலான ஒட்டியாணம் அணிவித்து இருப்பது விநாயகர் திருவுருவங்களில் காணமுடிகிறது.

கால் : காலில் சிலம்பு அல்லது காப்பு அணிவித்து இருப்பது குறிப்பிடத்தக்கது. 'சிலம்பணி விநாயகர்' என்ற பெயருடன் தேவகோட்டையில் ஒரு கோவிலில் சிலம்புடன் காட்சியளித்து அருள்பாலிக்கிறார். பெண்களே காலில் சிலம்பு அணிவது வழக்கு என்றும், வழக்கு மாறி, அன்பினால் இவ்வாறு சிலம்பணிவித்துள்ளனர் எனலாம்.

தும்பிக்கை : தும்பிக்கையில் அணிகலன்கள் அணிந்திருப்பதுடன் ரத்தினங்கள் நிரம்பிய பாத்திரம் தும்பிக்கையில் தாங்கிய விநாயகப் பெருமானைக் கண்டு பக்தியுடன் வியப்பும் சேர வணங்குகிறோம்.

நம்எல்லோர் வீட்டிலும் விநாயகர் திருவுருவம் அணிகலனாகட்டும் நம்எல்லோர் மனத்திலும் விநாயகர் வணங்குதல் பொங்கிவழியட்டும்; நாட்டில் வளம் பெருகட்டும். மக்களின் வளம் பெருகட்டும்.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

3. (இ) விநாயகரின் நிறங்கள்

1. பால கணபதி - செந்நிறம்
2. தருண கணபதி - செந்நிறம்
3. பக்த கணபதி - வெண்ணிறம்
4. வீர கணபதி - செந்நிறம்
5. சக்தி கணபதி - சிந்தூர நிறம்
6. த்விஜ கணபதி - சுப்ரவர்ணம்
7. ஸித்தி கணபதி - பிங்கள வர்ணம்
8. உச்சிஷ்ட கணபதி - நீலவர்ணம்
9. விக்நகணபதி - ஸ்வர்ண நிறம்
10. க்ஷிப்ர கணபதி - செந்நிறம்
11. ஹேரம்ப கணபதி - வெண்ணிறம்
12. லட்சுமி கணபதி - வெண்ணிறம்
13. மகா கணபதி - செந்நிறம்
14. விஜய கணபதி - செந்நிறம்
15. நிருத்த கணபதி - மஞ்சள் நிறம்
16. ஊர்த்துவ கணபதி - கனகவர்ணம்

குறிப்பு : கர்நாடக மாநிலத்தில் உள்ள கோப்பல் என்ற ஊரில் இங்ககஷ்திரியர் என்ற சமூகத்தினர் ஒவ்வொருவரும் வெவ்வேறு நிறத்தில் விநாயகரை வணங்குகின்றனர். எந்த நிற விநாயகரை வணங்கவேண்டும் என்பது அவரவர் குடும்பப் பட்டப்பெயரை பொறுத்தது என்கின்றனர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3. (ஈ) விநாயகருக்கு விருப்பமான மந்திரம்

"ஓம் வக்திரதுண்டாய ஹீம்" என்பதுவே விநாயகருக்கு உரிய சடாட்சர மந்திரம்.

திருமால் இம்மந்திரத்தை உச்சரித்து மது, கைடபர்களை மாய்த்தார்.

முருகப் பெருமான் இம்மந்திரத்தை உச்சரித்து தாராகாசுரனைக் கொன்றார்.

வாமன அவதாரத்தில், திருமால் தன் தந்தையான காசியபரிடம் இம்மந்திர உபதேசம் பெற்று மகாபலியின் மமதையை அடக்கினார்.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

3. (உ) விநாயகர் உருவச் சிறப்புகள்

விநாயகர் உடற்பாகம் ஒவ்வொன்றும் ஒரு உண்மை அல்லது ஒரு கருத்தைக் கூறுவதாக சைவ சமயப் பெரியார்கள் கூறுவதைக் காண்கிறேம். இதோ அச்சிறப்புகள்:-

1. **பெரிய தலை** -விநாயகரின் பெரிய தலை - மனிதன் ஒவ்வொருவரும் பெரியவற்றையும் சிறப்பானவற்றையும் சிந்திக்க வேண்டும், என்று உணர்த்துகிறது.

2. **சிறிய கண்கள்** - கண்கள் சிறியவை; ஆனால் அக்கண்கள் கூரிய, சீரிய பார்வையாக அமைய வேண்டும்; நன்றாக ஆராய்ந்து ஊடுருவிப் பார்க்க வேண்டும் என்று உணர்த்துகிறது.

3. **கயிறு** - விநாயகரை வணங்குவோர் - தங்கள் மிக உயர்ந்த இலக்கினை அடைய விநாயகர் இழுத்துச் சேர்ப்பார் என்ற கருத்தை உணர்த்துவது

4. **ஒரு தந்தம்** - உடல் உறுப்பைத் தியாகம் செய்தாவது சிறந்த செயலைச் செய்ய வேண்டும் என்பதை உணர்த்துகிறது. மகாபாரதம் எழுதுவதற்காகவே ஒரு தந்தத்தை உடைத்தார் என்பது புராண வரலாறு.

5. **துதிக்கை** - மிகுந்த திறன் மற்றும் சூழ்நிலைக்கு ஏற்றவாறு தன்னை மாற்றிக் கொள்ளுவதை உணர்த்துகிறது.

6. **மோதகம்/கொழுக்கட்டை**-சாதனைகளுக்குப் பரிசுப் பொருளாவதை உணர்த்துகிறது

7. **சுண்டெலி** - சுண்டெலி மீது கணபதி அமர்ந்திருப்பார். மக்கள் அதுபோல் ஆசையைக் கட்டுப்படுத்தி, அடக்கி ஆள வேண்டும் என்ற உண்மையை உணர்த்துவது, அப்படி அடக்கி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy
ஆளவில்லை என்றால் மிகப் பெரிய தீயவிளைவுகளைச் சந்திக்க நேரும் என்ற உண்மையும் உணர்த்துகிறது.

8. **பெரியகாதுகள்** - மக்கள் நன்றாகக் கேட்பவராக இருத்தல் வேண்டும். கூர்மையாகக் கேட்டல் வேண்டும் என்ற உண்மையை உணர்த்துகிறது.

9. **கோடாரி** - எல்லா பந்தங்களையும் நீக்கி, இறைவனை வழிபட்டு நன்மையடைய வேண்டும் என்ற உண்மை - அதாவது கோடாரி வெட்டுதல் போல் மக்கள் பந்தங்களை வெட்ட வேண்டும் என்ற உண்மையை உணர்த்துகிறது.

10. **சிறிய வாய்** - கொஞ்சமாகப் பேச வேண்டும் என்பதை உணர்த்துகிறது.

11. **பெரிய வயிறு** - வாழ்வில் எதிர்கொள்ளும் எல்லா கெட்டவைகளையும் நல்லவைகளையும் அமைதியாக புசித்துச் செறிக்கக் கற்றுகொள்ள வேண்டும் என்ற உண்மையும் உணர்த்துகிறது.

12. **வாழ்த்துக்கும் ஒரு கை** - பிள்ளையார், உண்மையாகத் தன்னை வழிபடும் பக்தர்களைக் காத்து அருள்புரிவார் என்பதை உணர்த்துகிறது அக்கை.

13. **பிரசாதம்** - உலகமே பிள்ளையார் பாதங்களில் கிடக்கிறது. பிள்ளையாரை வழிபட்டு நல்லவை நடக்க வேண்டுகிறது என்ற உண்மையை உணர்த்துகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3. (ஊ) விநாயகர் அலங்காரம்

கருப்பு நிறத்தில் அமைந்துள்ள எழில்மிகு விநாயகருக்கு சந்தனம், குங்குமப்பொட்டு வைத்து, மலர் மாலைகள் அணிவித்து அலங்காரம் செய்து, பருத்தியில் நெய்த அல்லது பட்டில் நெய்த வேட்டியும், மேலே துண்டும் போட்டு பூசை செய்வதைக் கண்ணுற்றோம். சந்தனக்காப்பு, வெள்ளி, தங்கம் ஆகிய கவசங்கள் அணிவித்து அதன் மீது மலர் மாலைகள் சாத்தி வணங்குவது காண்கிறோம். வெள்ளைநிற அலங்காரம் சிறப்பாக உள்ளது.

தற்போது மலர்மாலைகளுடன், பலவகையான மாலைகள் சாத்தி அலங்கரிப்பதைக் காணமுடிகிறது. ஆம் வாழைப்பழத்தில் மாலை, நெல்லிக்காய் மாலை, வெற்றிலை மாலை, கொழுக்கட்டை மாலை, தேங்காய் மாலை அணிவிப்பது போன்றவை நிகழ்கின்றன. மக்கள் அணியும் நகைகள் குறிப்பாக கழுத்தில் அணியும் பொன் மாலைகள் அணிவிக்கிறார்கள். திருப்பதி வெங்கடாசலபதி உருவ அலங்காரம் சமயப்பொறை உணர்த்துகிறது.

மற்றுமொரு புதிய அலங்காரம் என்னவென்றால் மினுமினுக்கிற பலவண்ணப் பொடிகள் தூவிய கவசம் அணிவித்து மலர்மாலை சூடி அலங்காரம் செய்வது, கண்ணிற்கு விருந்து படைப்பதோடு அலங்காரத்தில் மயங்கி அத்தகைய விநாயகரை மறுபடியும் மறுபடியும் சென்று வணங்கும் எண்ணத்தை தூண்டுகிறது என்பதில் ஐயமில்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3.1 பலமுக விநாயகர்கள்

பொதுவாக விநாயகர் ஒரு யானைமுகம், நான்கு கரங்கள், ஒரு தந்தம் (மற்றும் உடைந்த மற்றொரு தந்தம்), பானைவயிறு, ஒரு துதிக்கை என்று அமைந்து, ஒரு கால் தொங்க ஒரு கால் மடித்து உட்கார்ந்து இருப்பது போல காட்சியளிப்பார்.

ஆனால் ஒருமுகத்திற்கு அதிகமாகவும் ஆறுமுகம் வரையிலும் கொண்டு காட்சிதரும் விநாயகர்களும் உண்டு. பலமுகம் கொண்டு பலபெயர்களில் பக்தர்களுக்கு அருள்புரியும் அவ்விநாயகர்கள் பற்றிய விவரங்கள் கீழ்வருமாறு:-

இருமுக விநாயகர் -

த்துவிமுக கணபதி என்று அழைக்கப்படுபவர். (Dwimukha Ganapathi) இரண்டு முகங்களுடன் காட்சிதரும் விநாயகர் ஆவார்.

மூன்று முக கணபதி -

த்திரிமுக கணபதி எனப்படுபவர். (Trimukh Ganapathy) மூன்று முகங்களுடன் காட்சியளிப்பவர்.

நான்கு முக கணபதி -

த்விஜ கணபதி, சதுர்முக கணபதி என்ற பெயர்களில் அழைக்கப்படுகிறார். நான்கு முகங்களுடன் காட்சியளிக்கும் அவரை, வணங்குபவர் புண்ணியசாலி ஆவார் என்பது ஐதீகம். நான்கு கைகளில் புத்தகம், ருத்ராக்ஷ மாலை, தண்டம், கமண்டலம் ஆகியவை கொண்டவர். சென்னை வேளச்சேரியில்

In Public domain Digitization Muthulakshmi Research Academy

உள்ள [illegible] ஜீவசமாதி ஆலய விநாயகர் நான்கு திருமுகங்களுடன் அருள்பாலிக்கிறார். இவரை வழிபட்டால் மும்மூர்த்திகளின் அருள் கிட்டும் என்று பக்தர்கள் கூறுகின்றனர். சதுர்முக கணபதியை பாண்டி -மணக்குளவிநாயகர் கோயிலிலும் காணலாம்.

ஐந்துமுக கணபதி -

ஐந்து முகங்களுடன் காட்சியளிப்பவர், ஐந்துமுக கணபதி அல்லது ஹேரம்பர கணபதி (அல்லது) பஞ்சமுக கணபதி என்று அழைக்கப்படுபவர். நாகப்பட்டினம் காயாரோசணேஸ்வரர் கோயிலில் ஐந்துமுக கணபதியைத் தரிசிக்கலாம். திருவொற்றியூர் தியாகேஸ்வரர் கோயிலில் ஐந்து முக கணபதியைத் தரிசிக்கலாம். வடபழனி வலம்புரி சிந்தாமணி விநாயகர் கோயிலில் பஞ்சமுக விநாயகரை தரிசிக்கலாம். சேலம், ஏற்காடு மலையில் உள்ள, பட்டிப்பாடியில் அருள்மிகு ராஜராஜேஸ்வரி திருக்கோயில் வளாகத்தில், நின்றகோலத்தில் பத்துக்கரங்களுடன் பஞ்சமுக கணபதியைத் தரிசிக்கலாம். மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயில் தெற்கு ராஜ கோபுரவாயில் மேலே, அமர்ந்த நிலையில் பத்துக் கரங்களுடன் ஐந்துமுக கணபதியை தரிசிக்கலாம். ஹேரம்ப கணபதி, ஐந்து முகங்களுடனும், பத்து கரங்களுடனும், பெரிய சிம்ம வாகனத்தில் அமர்ந்த கோலத்தில் இருப்பவர் ஆவார்.

ஆறுமுக விநாயகர்

ஆறுமுகங்கள் கொண்ட விநாயகர், பாண்டி மணக்குளவிநாயகர் திருக்கோயில் வளாகத்தில் நுழைவாயில் இடப்புறச் சுவற்றில் காணலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3.2 பெண் தெய்வங்களுடன் விநாயகர்

விநாயகர் திருமணமாகாதவர், பிரம்மச்சாரி என்று ஒரு புராணக் கூற்றும், விநாயகர், பிரம்மனின் இரு புதல்விகள் கமலை, வல்லி ஆகியோரை சென்னை பாடியில் உள்ள திருவல்லீஸ்வரர் - ஜெகதாம்பிகை திருத்தலத்தில் மணந்து கொண்டார் என்ற புராணக் கூற்றும் உலவுகிறது.

மேலும் சித்தி, புத்தி என்ற இருவரையும் மணந்தார் என்ற புராணவழக்கும் நிலவுகிறது.

ஆக, விநாயகரை பெண் தெய்வங்களுடன் நாம் கோபுரங்களிலும் கோயில் உள்ளேயும் காணும் காட்சிகள் இதைக் காட்டுகின்றன.

மும்பையில் தாதர் அருகில் பிரபாதேவியில் உள்ள மிகமிகப் பிரசித்தி பெற்ற சித்தி விநாயகர் திருக்கோயிலில் விநாயகர் இரு பெண் தெய்வங்களுடன் காட்சியளிப்பதை இங்கு நினைவு கூற விரும்புகிறேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

4. விநாயகர் திருமணம்

விநாயகர் புத்தியும் சித்தியும் என்று இரு மனைவியரை மணந்து வாழ்ந்தார் என்று மற்றுமொரு புராணக் கதையும் உண்டு. புத்தி என்பது - ஞானமும், அறிவும் குறிக்கும். சித்தி-என்பது திறமை, முன்னேற்றம் மற்றும் வெற்றி ஆகியவற்றை குறிக்கும் என்பது சமயப் பெரியோர்கள் கூற்று.

அதாவது விநாயகர் எப்படி இந்த இருவரையும் மணந்தார் என்பதை இப்போது பார்க்கலாம். முருகன் மணக்க விரும்பிய இரண்டு பெண்களையே விநாயகரும் மணக்க விரும்பினார். அப்போது ஒரு போட்டியை வைத்துக் கொண்டனர். யார் முதலில் உலகைச் சுற்றி வருகிறாரோ அவருக்கு இரண்டு பேரும் மனைவியாவார் என்பது போட்டி முருகன் உடனே வெளியில் சென்று உலகைச் சுற்றி வரப் புறப்பட்டார். விநாயகர் வீட்டிலேயே இருந்து பலவற்றைப் படிக்க ஆரம்பித்து அதன் மூலமாக உலகைச் சுற்றி வந்ததாக முருகனிடம் கூறி அவரையும் ஒத்துக்கொள்ளச் செய்து இரு பெண்களையும் மணந்தார் என்பது புராணக்கதை.

புத்தி, சித்தி இருவரையும் இருதுடைகளில் அமர்த்தி இருப்பவர்தான் லட்சுமி கணபதி ஆவார். என்றும் பிறை சந்திரனுடன் தன் ஒரு மனையாளை துடையில் அமர்த்தி இருப்பவர் மகா கணபதி ஆவார். என்றும் சைவப் பெரியோர்கள் கூறுகின்றனர்.

இந்தப் பகுதியில், தேவியருடன் காட்சியளித்து பக்தர்களுக்கு அருள்புரியும் விநாயகர்களைக் காண்போம்.

In Public Domain. Digitization Muthulakshmi Research Academy

1) **மகா கணபதி** - மகாகணபதி தமது மடியில், கையில் தாமரை மலரைக் கொண்டு அமர்ந்துள்ள அன்புக்கு உரிய நாயகியினால் எப்பொழுதும் தழுவப் பெற்றவராக் காட்சி தருகிறார்.

2) **லட்சுமி கணபதி** - நீல வண்ண ஆம்பல் மலர்களைக் கையில் கொண்ட, இரண்டு தேவியரை அருகில் அமர்த்திக் கொண்டு காட்சியளிக்கிறார்.

3) **ஊர்த்தவ கணபதி** - பச்சைநிறத் திருமேனியுடன் விளங்கும் தேவியோடு, தழுவப்பெறுவதற்கு விழைவுடன் உயர்த்திய கையையுடையவர் ஊர்த்தவ கணபதி.

4) **சக்தி விநாயகர்** - பச்சைநிறம் தோய்ந்த திருமேனியை உடைய தேவியைத் தழுவிய வண்ணம் ஸந்த்யாகாலம் போன்ற செந்நிறம் தோயப் பெற்றவர்.

5) **உச்சிஷ்ட கணபதி** - மதுரை தாமிரபரணி ஆற்றின் கரையில் அமைந்துள்ள திருக்கோயிலில் கணபதி தன் துதிக்கையை பெண்ணின் உபஸ்தத்தில் வைத்து காமரூபமாகக் காட்சிதருகிறார். மேலும் புரசைவாக்கம் (சென்னை) கங்காதீஸ்வரர் திருக்கோயில் உட்பிரகார வலது மூலையில் உச்சிஷ்டகணபதி தேவியுடன் அருள் பாலிக்கிறார். வலது கரம் ஒன்றில் திரிசூலம் கொண்டு வித்தியாசமாகக் காட்சியளிக்கிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

5. விநாயகரின் முப்பத்திரெண்டு வடிவங்கள்

இந்தியாவின் எல்லா மாநிலங்களில் மட்டுமில்லாமல் உலகின் பல நாடுகளிலும் விநாயகர் பெருமானை மக்கள் பல ஆண்டுகள் அல்லது பல நூற்றாண்டுகள் வணங்கி வந்திருப்பது அகழ்வாராய்ச்சியின் மூலமாகத் தெரிந்து கொண்டிருக்கிறோம். இந்தியாவின் பல மாநிலங்களிலும் விநாயகர் சிறப்பான கோயில்களில், சிறப்பான வடிவங்களில் அற்புதமான கலைஉணர்வுகளுடன் கூடிய அலங்காரங்களில் அவரை வழிபட்டு நலம்பல பெற்று வருகிறோம். இருப்பினும் அவருக்கு முப்பத்தி இரண்டு வடிவங்கள் தான் மூலாதார வடிவங்களாக சமயப் பெரியார்கள் கூறுகின்றனர். அந்த முக்கிய முப்பத்தி இரண்டு மூல வடிவங்களின் பெயர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

1. பாலகணபதி
2. தருண கணபதி
3. பக்தி கணபதி
4. வீர கணபதி
5. சக்தி கணபதி
6. த்விஜ கணபதி
7. சித்தி கணபதி
8. உச்சிஷ்ட கணபதி
9. விக்ன கணபதி
10. சஷிப்ர கணபதி
11. ஹேரம்ப கணபதி
12. லட்சுமி கணபதி
13. மகா கணபதி
14. விஜய கணபதி
15. நிருத்ய கணபதி
16. ஊர்த்துவ கணபதி
17. ஏகாக்ஷர கணபதி
18. வரத கணபதி
19. த்ரயக்ஷர கணபதி
20. க்ஷிப்ரப் பிரசாத கணபதி
21. ஹரித்ரா கணபதி
22. ஏகதந்த கணபதி
23. ஸ்ருஷ்டி கணபதி
24. உத்தண்ட கணபதி
25. ருணவிமோசன கணபதி
26. துண்டி கணபதி
27. த்விமுக கணபதி
28. த்ரிமுக கணபதி
29. சிம்ம கணபதி
30. யோக கணபதி
31. துர்கா கணபதி
32. சங்கடஹர கணபதி

In Public domain, Digitization: Muthulakshmi Research Academy

6. இலக்கியத்தில் விநாயகர் அல்லாத பிள்ளையார்கள்

விநாயகர், சிவபெருமான் பார்வதிதாயார் மூத்த பிள்ளை ஆதலால், பிள்ளையார் என்று அழைக்கப்படுகிறார். சமய இலக்கியங்களில் விநாயகப் பெருமான் அல்லாத கடவுள்களையும் பிள்ளையார் என்று அழைத்தனர். யார் அந்தக் கடவுள்கள்?

இளைய பிள்ளையார்

சிவபெருமானின் இளைய புதல்வன் முருகப் பெருமானையும் இளைய பிள்ளையார் என்று கூறியுள்ளனர்.

காழிப்பிள்ளையார்

சீர்காழி சிவபெருமான் கோயில் குளக்கரையில் உமையின் ஞானப்பால் குடித்த ஞானசம்பந்தர் பெருமானை காழிப் பிள்ளையார் என அழைத்தார் சேக்கிழார் பெருமான். காழி என்பது சீர்காழியைக் குறிக்கும்.

சேய்ஞலூர்ப்பிள்ளையார்

சிவநிந்தனை செய்த தன் தந்தையின் கால்களை மழுவால் வெட்டிய சண்டிகேஸ்வரரை சேய்ஞலூர்ப் பிள்ளையார் என தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

7. சூரியன் உதயத்துக்குமுன் கணபதி ஹோமம்

கணபதிக்கும், அனுமனுக்கும் சூரியபகவான்தான் குரு. இருவரும் வேதங்களை சூரியதேவனிடம் கற்றவர்கள். கணபதி, காலையில் சூரிய உதயகாலத்தில் சூரியனை வணங்கி, குருபூசை செய்யும் சமயம் என்பதால், கணபதி ஹோமம் நடத்துபவர்கள் அதிகாலை பிரம்மமுகூர்த்தமான நாலரை மணிக்கே ஆரம்பித்து ஆறுமணிக்குள், அதாவது சூரியன் உதிக்கும் முன் முடிப்பது என்பது சம்பிரதாயம். எனவேதான், புதுமனை புகுவிழா நடத்துபவர்கள் சூரிய உதயத்திற்கு முன்னரே கணபதி ஹோமம் செய்து பூசை நடத்தி முடிக்கின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

8. எந்தெந்தப் பொருள்களில் விநாயகர் சிலைகள் அமைந்துள்ளன

பொதுவாக விநாயகர் சிலைகள் கருங்கல்லில் அமைத்து கோயில்களில் வைத்து வழிபாடு செய்து வருவதைக் காண்கிறேம். அதுபோலவே நல்ல மரங்களில், குறிப்பாக தேக்கு, போன்ற மரங்களிலிருந்து அழகான விநாயகர் உருவங்களை கலை நயம் மிளிர உருவாக்கி வீட்டில் வைத்து வணங்கி வருகிறோம்.

விநாயகர் சதுர்த்தியன்று களி மண்ணால் ஆன விநாயகர் சிலைகளை வீட்டிற்குக் கொண்டு வந்து பூஜை செய்து வணங்குகிறோம். சந்தனத்திலும் மஞ்சளிலும் மாட்டு சாணத்திலும் பிள்ளையாரைப் பிடித்து வணங்குவதை அறிகிறோம்.

வருடங்கள் செல்லச் செல்ல இப்பொழுது பல்வேறு பொருட்களில் விநாயகர் சிலைகள் அமைத்து வழிபடுவதைக் காணமுடிகிறது.

பிர்லாமந்திர்-செகந்தராபாத், இந்தத் திருக் கோயிலில் எல்லா சிலைகளும், கோயிலும் வெள்ளைப் பளிங்கால் ஆனவை. எனவே இங்குள்ள விநாயகர் சிலை வெள்ளைப் பளிங்கில் அமைக்கப்பட்டுள்ளது. வெள்ளைப் பளிங்கில் கம்பீரமாக குன்றில் மீது அமைந்துள்ள கோயில், ஹுசைன் சாகர் ஏரி அருகில் உள்ளது.

சலவைக்கல்லில் விநாயகர் சிலை வடித்துள்ளனர். ஆந்திர மாநிலம் குண்டூர் மாவட்டத்தில் 60 டன் எடையில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

19 அடி உயரத்தில் ஒரே சலவைக்கல்லில் (கருப்புநிறம்) - வரசித்தி விநாயகர் சிலை அமைத்துள்ளனர்.

வெள்ளை எருக்கு மரத்தில் விநாயகர் சிலை அமைத்து வழிபடுகின்றனர் பிளாஸ்டர் ஆப் பாரிஸில் விநாயகர் சிலை வடிக்கப்படுகின்றன. பெரும்பாலும் விநாயகர் சதுர்த்தி விழாவில் மிகப் பிரமாண்டமான விநாயகர் சிலைகள் இவ்விதம் அமைத்து வழிபடுவதை நாம் பார்த்து இருக்கிறோம்.

பீங்கானில் விநாயகர் சிலை வடிவமைக்கப்பட்டு வணங்கி வருகிறோம். ஸ்பெயின் நாட்டில் இவ்வாறு மிக விலையுயர்ந்த பீங்கானில் செய்யப்பட்ட ஒரு சிலையின் விலை ரூபாய் 98,500 ஆகும்.

பிளாஸ்டிக்கிலும், கண்ணாடியிலும், காகிதத்தில் மோல்டிங் எனப்படும் முறையிலும் விநாயகர் சிலைகள் செய்து வணங்கப்படுகின்றன. இதுதவிர விலையுயர்ந்த தங்கம், வெள்ளி, வெண்கலம் பஞ்சலோகம் போன்ற உலோக விநாயகர் சிலைகளும் அமைத்து வணங்குகிறோம்.

கோயில்களில் கோபுரங்களில் காரைசுண்ணாம்பு போன்ற பொருட்களின் கலவையில் விநாயகர் சிலைகள் நேர்த்தியாக வடிவமைத்து இருப்பது காலத்தை வென்று, கலையன்பன்பர் பக்தர்களுக்கு, கலையின்பம் படைத்து பக்தியில் மூழ்க வைக்கின்றன.

பிளாஸ்டர் ஆப் பாரிசில் செய்த விநாயகர் சிலைகளை விநாயகர் சதுர்த்தி விழா முடிவில் கடலில் கரைப்பதால் தீங்கு விளைவதை உணர்ந்து தற்போது,

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

காய்கறிகள், கனிகள், [illegible] போன்றவைகளால் விநாயகர் சிலைகளை அமைத்து, சுற்றுப்புறச் சூழலைக் காத்து, பக்தியுணர்வோடு சமுதாய நல்லுணர்வையும் சேர்த்து, அற்புதமாக விநாயகர் சதுர்த்தி விழாவைக் கொண்டாடி வருகிறோம்.

மேலும் கிழங்குமாவில் விநாயகரின் சிலைகள் சென்ற 11-9-2010 சதுர்த்தி விழாவிற்கு செய்தது குறிப்பிடத் தக்கது.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

9. பெரிய வடிவில் விநாயகர் அமைந்த திருக்கோயில்கள்

1) ஆதி விநாயகர் - ஸ்ரீ வில்லிப்புத்தூர்

பதினான்கு அடி உயரம் எட்டு அடி அகலம் என, பெரிய உருவத்தில் அமைந்து அருள்பாலிக்கும் ஆதிவிநாயகர், ஸ்ரீ வல்லிப்புத்தூரில் பெருமாள் கோயிலில் எழுந் தருளியுள்ளார். இத்திருக்கோயில் தென் திருப்பதி என்று வழங்குகிறார்கள்.

2) முந்தி விநாயகர் - புலியகுளம். (கோவை)

முந்தி விநாயகர் 19.10 அடி உயரம், 10 அடி அகலம் சிலையின் மொத்த எடை சுமார் 190 டன் என்றாலும் ஒரே கல்லில் அமைந்துள்ளது சிறப்புடையதாகும். ஒரே கல்லில் இத்தகைய பெரிய சிலையை செதுக்கியிருப்பது நம்முன்னோர்களின் சிற்பக்கலையின் திறனை பாரறிய பறைசாற்றுகிறது. ஆசியாவிலேயே மிகப்பெரிய பிள்ளையார் என்கின்றனர் கோயில் நிர்வாகிகள்.

வலம்புரி பிள்ளையாராகிய இவருக்கு மற்றுமொரு சிறப்பு உண்டு. அதாவது, சிவபெருமான் போல, இந்த விநாயகப் பெருமானுக்கும் மூன்று கண்கள் அமைந்துள்ளன. தலையில் மணிமகுடத்துடன் அழகாக காட்சியளிக்கிறார். வயிற்றை சுற்றி பெரிய பாம்பு உள்ளது. அமர்ந்த கோலத்தில் பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்.

மிக உயரமாக இருப்பதன் காரண-மாக, பிள்ளையாரப்பனின் இருபுறமும் ஏணி வைத்துள்ளனர். அபிஷேகம் செய்யும் போது இதைப் பயன்படுகிறார்கள்.

In Public domain Digitization Muthulakshmi Research Academy

இக்கோயிலில் விநாயகர் சதுர்த்தி மிகச் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். அப்போது விநாயகருக்கு மிகப் பிடித்தமான கொழுக்கட்டையை பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்குகிறார்கள்.

கோயில் பற்றிய சில முக்கிய தகவல்களைக் காண்போம்.

* 1982 ஆம் ஆண்டு அருள்மிகு முந்தி விநாயகர் திருக்கோயில் ஸ்தாபிதமானது.

* 1982 முதல் 1998 வரை 16 (பதினாறு) ஆண்டுகள் புலியகுளம் தேவேந்திரகுல அறக்கட்டளையின் அயராத உழைப்பால் உருவானது. 19.10 அடி உயரம் 10 அடி அகலம் 190 டன் எடை கொண்ட ஒரே கல்லில் உருவாக்கிய விநாயகர் அருள்மிகு முந்தி விநாயகர்.

* அவிநாசி லிங்கம் - குன்றிலுருந்து விநாயகர் சிலை அமைக்க பாறை எடுக்க இரண்டு ஆண்டுகள் ஆயின என்று கோயில் நிர்வாகிகளில் ஒருவர் தெரிவித்தார்.

* பின்னர் அக்கல்லை 1982ல் கோவை புலியகுளம் கொண்டு வந்து கோயிலில் ஸ்தாபிதம் செய்தனர்.

* அவிநாசிலிங்கம் - திரு.கிட்டுச்சாமி ஸ்தபதி பதினாறு ஆண்டுகளாக அருள்மிகு விநாயகர் சிலையை இரவுபகலாக வடித்து முடித்தார் என்கிறார் அந்தக் கோயில் நிர்வாகி.

* கல்லெடுத்த வருடங்களைச் சேர்த்தால் அருள்மிகு முந்தி விநாயகரை 18 ஆண்டுகளில் உருவாக்கியுள்ளார் திரு. கிட்டுச்சாமி ஸ்தபதி எனலாம்.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

* பீடம் அமைந்துள்ள கல் ஊத்துக்குளியிலிருந்து புலியகுளம் கொண்டு வந்தனர் என்கிறார் அவர்.

* மங்களகரமான ஈஸ்வர ஆண்டு தைத்திங்கள் 25.1.1998 ஞாயிறு காலை 7.30 மணி முதல் 9 மணிக்குள். காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கர ஜெகத்குரு ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் மற்றும் ஸ்ரீ சங்கர விஜயேந்திர சுவாமிகள் அருள்மிகு முந்தி விநாயகர் பெருமானை பிரதிஷ்டை செய்து திருக்குட நன்னீராட்டு செய்தனர். முன்னிலை திரு. து. முருகராசு இ.ஆ.ப. தலைவர், தமிழ்நாடு அரசு தேர்வாணைக் குழு சென்னை.

* தற்போது 31-10-2008ல் தொடங்கிய 84 அடி உயர கற்கோபுர திருப்பணி நடந்து வருகிறது. ஆலய வடிவமைப்பு பத்மஸ்ரீ முத்தையா ஸ்தபதி தமிழ்நாடு அரசு தலைமை ஸ்தபதி ஆவார்.

* 19-2-2006ல் மூஷிக வாஹன பிரதிஷ்டை மற்றும் சுற்றுச்சுவர் எழுப்பும் திருப்பணி நடைபெற்றது. மூசிக வாகனம் அருள்மிகு முந்தி விநாயகர் எதிரே கோயிலுக்கு முன்புறம் - எவ்வாறு சிவபெருமானுக்கு எழுப்பிய திருக்கோயில்களில் மூலவரான லிங்கம் அமைந்துள்ளதற்கு எதிரே தனியாக ரிஷப வாகனமான நந்திப்பெருமான் அமைந்துள்ளதோ, அதே போல் அமைந்துள்ளது. இங்கு பெரிய விநாயகர் எப்படியோ அவருக்கு ஏற்ற உருவில் மூசிகம் அமைந்துள்ளது. இத்திருக்கோயில் அமைப்பின் சிறப்பு எனலாம் ஆம் நீளம் 3 1/2 - 4 அடி, உயரம் 2 1/2 - 3 அடி ஆகும். கழுத்தில் நந்திக்கு உள்ளது போல் மணியுடன் கூடிய சலங்கை மாலை உள்ளது மூசிகத்தின் மற்றுமொரு சிறப்பு ஆகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3). **தொட்ட கணபதி - பசவன்குடி - பெங்களூர்**

பெங்களூரில் மிகப்பெரிய அளவிலான சிவ வைண திருத்தலங்கள் அமைந்து அந்நகருக்கு பெருமை சேர்க்கின்றன. பெரிய கண்ணன் கோயில், பெரிய பிரசன்ன வீர ஆஞ்சநேயர் கோயில், தொட்ட கணபதி கோயில் ஆகியன. சில முக்கிய பெரிய கோயில்களாகும்.

பெங்களூர் பசவன்குடியில், நந்திகோயிலுக்கு அருகில் தொட்ட கணபதி எழுந்தருளியுள்ளார். கன்னடத்தில் "தொட்ட" என்றால் பெரிய என்று பொருள். ஒரே பாறையில் பெரிய அளவில் செதுக்கப்பட்ட விநாயகர் திருவுருவம் மேற்கு திசை நோக்கி அமைந்துள்ளது. மூன்று நிலை ராச கோபுரத்தோடு மிகமிக அழகாக இந்த பெரிய விநாயகர் கோயில் அமைந்துள்ளது.

இந்த விநாயகப் பெருமான் விபத்துக்களை தவிர்க்க வல்லார் என்று பக்தர்கள் நம்புவதனால், புதிய கார்கள் இரு சக்கர வாகனங்கள் வாங்குவோர்கள், பெங்களூர் வாசிகள் தங்கள் வாகனங்களை வைத்து இக்கோயிலில் பூசை செய்த பிறகே ஓட்டத் தொடங்குகின்றனர்.

4) **வரசித்தி விநாயகர் கோயில்-குண்டூர்-ஆந்திர மாநிலம்**

கிரேன் பாக்குத்தூள் நிறுவனர் திருகிரந்தி அப்பாராவ் சிறந்த தொழிலதிபர் மட்டுமில்லாமல் ஒரு பெரிய பக்தரும் ஆவார். ஆன்மீகத் துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். பலகோயில்கள் கட்டி விழாக்கள் கண்டு மகிழ்ந்தவர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy
விநாயகர் பெருமானுக்கு மிகப் பெரிய கோயில் ஒன்று கட்ட வேண்டும் என்று அவருக்குத் தோன்றியது. அந்த ஆசை 2006 ஆம் ஆண்டில் நிறைவேறியது. ஆம் குண்டூரிலிருந்து 6 மைல் தொலைவில் நூறடி உயரக்கோபுரம் ஒன்று அமைத்து அக்கோபுரத்தில் 19அடி உயரமும் 60 டன் எடையும் கொண்ட ஒரே சலவைக்கல்லில் (கருப்பு நிறம்) விநாயகர் சிலையை வடிவமைக்கச் செய்து கும்பாபிஷேகம் நடத்தி மகிழ்ந்தார். பலகோடி பக்தர்கள் இப்பிரமாண்டமான விநாயகரை வணங்கி மகிழ்கின்றனர்.

5) முக்குறுணி விநாயகர் - சிதம்பரம் நடராசர் கோயில் மதுரை மீனாட்சியம்மன் கோயில்

மூன்று குறுணி - முக்குறுணி - அதாவது, ஒரு குறுணி என்பது ஆறு படி அளவு - எனவே முக்குறுணி என்பது பதினெட்டு படி அளவைக் குறிக்கும். சிதம்பரம் நடராசப் பெருமான் திருக்கோயிலிலும் மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயிலிலும் முக்குறுணி விநாயகர் மிகப் பெரிய அளவில் அமர்ந்து அருள்பாலிக்கிறார். இங்குள்ள இவ்விரு விநாயகர்களுக்கும் 18 படி அரிசியில் விநாயகருக்குப்பிடித்த மோதகம் என்கிற கொழுக்கட்டை செய்து படைப்பதால் முக்குறுணி விநாயகர் எனப் பெயர் பெற்றார். அவர் பெரிய உருவத்திற்கு 18 படி அரிசி மோதகம் தேவைதான்.

6. இந்தோர் (ம.பி) - மகாகணபதி

மத்தியப் பிரதேசம் - தலைநகர் இந்துாரில் சர்வாதே பேருந்து நிலையம் அருகில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் பெரிய விநாயகர் பெயர் மகாகணபதி ஆகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆசியாவிலேயே அமர்ந்த நிலையில் உள்ள இவ்வளவு பெரிய விநாயகர் சிலை வேறெங்கும் இல்லை என்கின்றனர். உயரம் சுமார் இருபத்தைந்து அடி இச்சிலையை உருவாக்க இரண்டரை ஆண்டு பிடித்ததென்கின்றனர். நாலடி உயரம், பதினான்கு அடி அகமுள்ள பீடத்தின் மீது இடது காலை மடக்கி வலது காலைத் தொங்கவிட்டு, வலது தந்தத்தில் பூமாலை தரித்து தலையில் தங்கக்கிரீடத்துடன் பிரத்யேக மாகத் தயாரிக்கப்பட்ட மேல் வஸ்திரத்தைத் தரித்தவாறு அமர்ந்துள்ளார்.

செங்கல், மணல், சுண்ணாம்பு, வெந்தய மசாலா ஐந்து புண்ணியத்தலங்களான காசி, காஞ்சி, அயோத்யா, அவந்திகா, மற்றும் மதுராவிலிருந்து எடுத்து வரப்பட்ட புனித மண், குதிரைலாயம், யானை கவுனி, கோசாலை இவற்றிலிருந்து சேகரிக்கப்பட்ட மண், புண்ணிய நதிகளின் நீர், வைடூரியங்கள், மாணிக்கக்கற்கள் முத்துக்கள் புஷ்பராகம் ஆகிய நவரத்தினங்களும் இச்சிலை வடிக்கப் பயன்படுத்தியதாக கூறுகின்றனர். இறைவன் சிலை உருவாக்க எடுத்த முயற்சியை என்னென்பது.

7. ஹம்பி - கடுகுப்பிள்ளையார்

ஹம்பி கடைத்தெரு அருகில் சுமார் 12 அடி உயரமுள்ள விநாயகர் அருள் பாலிக்கிறார். இவரை கடுகு பிள்ளையார் என்று அழைக்கின்றனர்.

8. மசின குடி விநாயகர் - மைசூர்

மைசூர் நகரில் உள்ள மசினகுடி விநாயகர் சுமார் 13.6 அடி உயரம் உள்ளவர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

9. ஈச்சனாரி பிள்ளையார் - கோவை

கோவை - பொள்ளாச்சி நெடுஞ்சாலையில் ஈச்சனாரி அமைந்துள்ளது. இங்கு அருள்பாலிக்கும் ஈச்சனாரி பிள்ளையார் மிகப்பெரிய அளவில் உள்ளார்.

சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் மாட்டு வண்டி மூலம் இப்பெருஞ்சிலையை எடுத்துவரும் போது, ஈச்சனாரி அருகில் வண்டியின் அச்சு முறிந்து விட்டது. வேறு ஒரு வண்டியில் ஏற்றிக்கொண்டு வர இயலாது தவித்தனர். எனவே எந்த இடத்தில் அச்சு முறிந்ததோ, அதே இடத்தில் சிலையை பிரதிஷ்டை செய்து கோயில் கட்டினர். அப்படி உருவானவர் அருள்மிகு ஈச்சனாரி விநாயகர்.

இங்குள்ள தேர் $7\frac{1}{2}$ கிலோ தங்கம், 18 கிலோ வெள்ளி முதலியவற்றால் உருவாக்கப்பட்டுள்ளது என்கின்றனர்.

10. லிங்கராஜ் திருக்கோயில் - புவனேஸ்வர் (ஒரிஸ்ஸா மாநிலம்)

ஒரிஸ்ஸாவின் தலைநகரான புவனேஸ்வரில் பதினோராம் நூற்றாண்டில் வாலாதேண்டு கேசரி என்ற மன்னரால் சுமார் 180 அடி உயரமுள்ள லிங்கராஜ் திருக்கோயில் கட்டப்பட்டது.

இக்கோயில் பத்துப்பதினைந்து ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. சுமார் நூற்றி ஐம்பது சிறிய மண்டபங்களுடன் சிறப்பான சிற்பங்களை கொண்டு, கலிங்க சிற்பக் கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இங்கு சுமார் 9-10அடி உயரமுள்ள நின்ற கோலத்தில் அமைந்துள்ள விநாயகர் திருவுருவம் காண்போரை வியப்பிலும் மகிழ்ச்சியிலும் ஆழ்த்துகிறது. கருங்கல்லில் நின்ற கோலத்தில் அமைந்து கலைநயச் சிறப்புமிக்க விநாயகராக அருள்பாலிக்கிறார்.

நேர்த்தியாக, அழகாக அமைந்த விநாயகரைக் காண கண்கோடி வேண்டும்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

10. பெரிய வடிவில் அமைந்த விநாயகர் திருக்கோயில்கள்

1. உச்சிப்பிள்ளையார் கோயில் - திருச்சிராப்பள்ளி

திருச்சிராப்பள்ளி என்றால் அனைவர் கண்களிலும் தெரிவது ஓங்கி உயர்ந்த மலைக்கோட்டையின் உச்சியில் தெரிகின்ற உச்சிப்பிள்ளையார் சந்நிதிதான். ஆம் மிக நேர்த்தியான கலை அமைப்புடன் இயற்கையாக அமைந்த குன்றின் மீது அற்புதமாக அமைந்துள்ளது தான் மலைக் கோட்டையும் அதில் அமைந்துள்ள பிள்ளையார் கோயிலும் பிள்ளையார் கோயில் இதைவிட உயரமான இடத்தில் எங்கும் அமையவில்லை என்ற சிறப்பினைப் பெறுகிறார் உச்சிப்பிள்ளையார். சுமார் 273 அடி உயரத்தில் இருக்கிறார் உச்சிப்பிள்ளையார். கணங்களுக்கெல்லாம் தலைவராக விளங்கும் பிள்ளையார் மற்ற எல்லா பிள்ளையார் கோயில்களுக்கும் உச்சத்தில் அமைந்து விளங்குவதால் உச்சிப்பிள்ளையார் என்று பெயரிடப்பட்டார் என்றால் அதுவே உண்மையாகும்.

இனி இக்கோயில் அமைப்பையும் சிறப்பையும் காண்போம். மலைக்கோட்டைக்குச் செல்ல தெப்பக்குளம் அமைந்த சாலையில் வடக்குப்புற நுழைவாயிலில் நுழைந்தால், இருபுறமும் தெய்வழிபாட்டிற்குரிய பூசைப்பொருள்கள் அனைத்தும் கிடைக்கும் கடைகள்; கடந்து சென்றால், வடக்கு நோக்கி எழுந்தருளியுள்ளது மாணிக்கவிநாயகர் சந்நிதி. மாணிக்க விநாயகரை வணங்கி பக்தர்கள் மேலே மலைக்கோட்டைக்குச் செல்வார்கள். மலையுச்சியேறி வேண்டுதலுக்காக உச்சிப்பிள்ளையாரிடம் தேங்காய் உடைக்க

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இயலாதவர்களுக்கு மாணிக்க விநாயகர் சன்னிதி அருகில் தேங்காய் உடைக்கும் இடம் அமைக்கப்பட்டுள்ளது. மாணிக்க விநாயகர் சன்னிதி எதிரில் உள்ள மண்டபத்தில் அற்புதமான நின்ற கோலத்தில் உள்ள விநாயகர் சன்னிதி உள்ளது. அவரையே விழாக் காலங்களில் ஊர்வலத்தில் எடுத்துச் செல்கின்றனர்.

அவரை தரிசித்த பின்னர், மாணிக்க விநாயகர் சந்நிதிக்குத் திரும்ப வந்து மேலே மலையேறும் பயணத்தைத் தொடர்ந்தால், சிலபடிகள் ஏறியதும் ஒருவீதி அதைக்கடந்தால் மலையுச்சிக்குச் செல்லும் படிக்கட்டுப்பாதையை அடையும் முன்புற வாயிலை அடையலாம். அங்கே இடப்புறம் கோயில் யானை கட்டிப் போடப்பட்டுள்ளது நினைவு கூறத்தக்கது. விநாயகப் பெருமானின் யானையிடம் வாழ்த்துப்பெற்று படிக்கட்டு வாயிலாக மேலே சென்றால் வலதுபக்கம் அமைந்துள்ள மண்டபத்தில் விநாயகரின் புராணக் கதைகளின் காட்சிகள் ஓவியங்களாகத் தீட்டப் பட்டிருக்கின்றன. ஒவ்வொரு புராணக் கதைக்கும் ஏற்ப விநாயகர் பெயர் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. பக்தர்கள் புராணக்கதைகளையும் விநாயகரின் சிறப்பினையும் கண்டு மகிழ்ந்து போகிறார்கள். அங்கிருந்து படிஏறி மேலே சென்றால் இடப்புறம் அருள்மிகு மட்டுவார் குழலி அம்மையார் உடனுறை தாயுமானவர் சந்நிதிகள் மிகச்சிறப்பாக அமைந்துள்ளன. வலப்புறம் சென்றால் உச்சிப்பிள்ளையார் சந்நிதி செல்லும் படிக்கட்டுகள் காணலாம்.

இடப்புறம் சென்றால் பெரிய மண்டபம்; மண்டபத்தில் நுழைவாயில் வலப்புறம் நவகிரக சந்நிதி

In Public domain, Digitization Muthulakshmi Research Academy
அமைந்துள்ளது. அதைக்கடந்து இடப்புறம் சென்றால் தாயுமானவர் சந்நிதியை அடையலாம்..

தாயுமானவர் சந்நிதி சிறப்பாக அமைக்கப்பட்டுள்ள பெரிய சன்னதியாகும் அவரை வணங்கி வலப்புறமாக வந்தால் மட்டுவார் குழல் அம்மையின் சந்நிதியை அடையலாம். தேவியார் மட்டுவார் குழலியை தரிசித்தபின் உச்சிப் பிள்ளையாரை தரிசிக்க படியேற நுழைவாயிலுக்கே வரவேண்டும். அங்கிருந்து வலப்புறம் உள்ள படிக்கட்டு வாயிலாக உச்சிப்பிள்ளையாரைக் காணச் செல்ல வேண்டும். மணிக்கூண்டைக் கடந்து இடப்புறம் திரும்பி படிகளில் ஏறினால், கிழக்கு நோக்கி கம்பீரமாக கருணையே வடிவமாக அமைந்துள்ள உச்சிப்பிள்ளையார் சந்நிதியை அடையலாம் ஆக மொத்தம் 417 படிகள் ஏறினால் உச்சிப்பிள்ளையார் சன்னதி அடையலாம்.

மலையின் கீழ்புறம் விபீடணன் பாதம் இரண்டு பாறையின் மீது உள்ளது. உச்சிப்பிள்ளையார் சன்னதியும் படிகளின் தோற்றமும் யானையின் துதிக்கை போலவே உள்ளதாகச் சொல்வர். திருச்சியில் எங்கிருந்து நோக்கினாலும் தெரியும் உச்சிப்பிள்ளையார் சன்னதியை மானசீகமாக வணங்கினால் ஆயிரம் கோடிப் பலன்கள் கிடைக்கும் என்கிறார்கள்.

உச்சி பிள்ளையாருக்கு மிகப்பெரிய கொழுக்கட்டை நைவேத்தியம் மற்றுமொரு சிறப்பு எனலாம். ஆம், விநாயகர் சதுர்த்தியன்று, உச்சிப்பிள்ளையாருக்கும், மாணிக்க விநாயகருக்கும் அரிசியால் நூற்றைம்பது கிலோ எடையில் ஆன இரண்டு பெரிய கொழுக்கட்டைகள் நைவேத்தியம் செய்யப்படுகிறது. இது மற்றுமொரு உச்சமில்லையா?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

2. பிள்ளையார்பட்டி-கற்பக விநாயகர் கோயில்

பிள்ளையார்பட்டி பேருந்து நிலையத்தில் இறங்கியவுடன் பக்தர்களை வரவேற்க தோரணவாயில் நுழைவாயிலிருந்து பார்த்தால் கற்பக விநாயகர் கோயில் வடக்குக் கோபுரம் தெரிகிறது. அருகில் சென்றால் மிகப்பெரிய குளம். குளம் நோக்கிச் செல்லும் சாலை இருபக்கத்திலும் பழங்கள், தேங்காய், மலர்மாலை, அருகம்புல் மாலை விற்கும் கடைகள் பிள்ளையார் உயரத்திற்கேற்ப கைப்பிடி அளவு அருகம்புல் இடைவெளிவிட்டு வைத்துக் கட்டிய பெரிய அளவிளான பன்னிரெண்டு முழ அருகம்புல் மாலைகள் - இது ஒரு வித்தியாசமான மாலை எனலாம். இதுபோல் அருகம்புல் மாலை வேறெங்கும் கண்டதில்லை!

கோயில் கிழக்கு கோபுரம் சற்று உயரமாகவும் குளம் நோக்கிய வடக்குக் கோபுரம் உயரம் குறைந்தும் காணப் படுகிறது. மருதுபாண்டியர் காலத்தில் சுமார் ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டதாகக் கூறப் படுகிறது. காலத்தை வென்று கலைநயத்துடன் விளங்கும் அற்புதமான கோயிலில் நுழைந்தால் குளக்கரையில் ஊருணிக்கரை விநாயகர் சந்நிதியைக் காணலாம்.

ஊருணிக்கரை விநாயகர் சந்நிதியைப் பற்றி விளக்கமாக கூறினால் பக்தர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். கிழக்குப் புற நுழைவாயில் படியேறினால் இருபுறமும் இருதூண்கள் இதில் வலப்புறத் தூணில் ஒரு பெண் உருவ விநாயகர் இடதுபுறத்தூணில் ஒரு பெண் உருவ விநாயகர். மொத்தம் பதினான்கு தூண்களால் ஆனது இந்த ஊருணி

In Public domain Digitization Muthulakshmi Research Academy

விநாயகர் சந்நிதி மண்டபம். ஒவ்வொரு தூணிலும் விநாயகர் உருவம் ஒரு அடி உயரத்தில் வடிக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒரு தூணில் உள்ள விநாயகர் நர்த்தன வடிவில் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. மேலே கூறிய இருநுழைவாயில் தூண்கள் தவிர மற்றுமொரு தூணில் பெண் உருவ விநாயகரைக் காணலாம். ஆக மொத்தமுள்ள பதினான்கு தூண்களில் மூன்று தூண்களில் பெண் உருவ விநாயகரைக் காணலாம். இதைப்போன்று தூண்கள் தோறும் விநாயகரை வடிவமைத்து, நடுநாயகமாக ஊருணிக்கரை விநாயகர் மண்டபம் அமைந்திருந்து, பத்திச்சுவை சொட்டச்சொட்ட கலைநயமும் கூட்டி பக்தர்களுக்கு பக்தியுடன் கூடிய கலைவிருந்து படைத்திருப்பது போற்றுதற்குரியது. இது போன்ற மண்டபம் வேறெங்கும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. பிள்ளையார்பட்டி கற்பக விநாயகருக்கு பெருமை சேர்ப்பது இந்த மண்டபம் என்றால் அது மிகையாகாது.

இதைக்கடந்து இடப்புறம் சென்றால் வடப்புறக் கோயில் வாயிலில் கற்பகவிநாயகர் அரங்கம் அமைந்துள்ளது. பக்தர்கள் இளைப்பாறும் இடமாகவும் திகழ்கிறது. கோயில் நுழைவாயிலில் சுமார் இரண்டரை அடி விநாயகர் சுவற்றில் செதுக்கப்பட்டுள்ளது.

அரங்கைக் கடந்து கோயில் உள்ளே நுழைந்தால், சுமர் நூற்றைம்பது அடி தொலைவில் நேரே காட்சியளிப்பவர் - மூலவர் கற்பக விநாயகர். நேரே நடைபாதையில் சென்றால் நுழைவாயிலுக்கும் கற்பகவிநாயகர் மூலவருக்கும் நடுபகுதியில் உள்ள நடைபாதைக்கு இடப்புறம் காளையார் காட்சி தருகிறார்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவருக்கு நேர் எதிரே வலப்புறம் மருதீசர் சந்நிதி அமைந்துள்ளது. மருதீசர் இடப்புறம் வாடாமலர் மங்கை சந்நிதி.

மருதீர்சந்நிதி காளையார் சந்நிதி இடைப்பட்ட நடைபாதை மேல்விதானத்தில் பன்னிரண்டு ராசிகள் கலைநயத்துடன் செவ்வகவடிவில் வடிக்கப்பட்டு, கோயிலுக்கு கலைநயம் கூட்:கிறது.

நடைபாதையில் முன்னேறிச் சென்றால் இடஞ்சுழி கற்பக விநாயகர் மிகமிக வித்தியாசமான தோற்றத்துடன் காட்சி தருகிறார். என்னே அற்புதக் காட்சி!

ஆம் நான்கு கரங்களுக்கு மாறாக இரண்டு கரங்கள், பெரிய வயிற்றுக்கு மாறாக சிறிய வயிறு, ஒரு கால் மடித்து ஒரு கால் தொங்கவிடுவதற்கு மாறாக யோக நிலையில் சமணங்கால்கள் போட்டு அமர்ந்த கோலம். மேலும் தலையில் கீரீடத்திற்குப் பதிலாக சடைமுடியுடன் விளங்குகிறார். இத்தனை மாறுதல் கொண்ட விநாயகர் பெருமான் கி.பி.1500ல் வடிவமைக்கப்பட்டார் என்று கூறுகின்றனர். வயிற்றில் மூன்று பட்டைகள் வலது கரத்தில் சிவலிங்கத்துடன் வலம்புரி சங்கை ஏந்தியுள்ளார். இவருக்கு வெள்ளை ஆடை மட்டுமே அணிவிப்பது மரபு என்றும் மருதுபாண்டியர் காலத்தில் கட்டப்பட்ட திருக்கோயில் என்றும் கூறுகின்றனர். சகஸ்ரநாம அர்ச்சனைக்காக 108 மோதங்கள் படைக்கப் படுகின்றன.

தட்சணாமூர்த்தி சந்நிதி அருகில் கோஷ்ட விநாயகர் சுவற்றில் வடிக்கப்பட்டுள்ளார் என்பது காண்கிறோம். மேலும் இத்திருத்தலத்தில் வள்ளி தெய்வானையுடன் முருகன் சந்நிதி, நவகிரக சந்நிதி, பழனி ஆண்டவர் சந்நிதி, சண்டிகேஷ்வரர் சந்நிதியும் உள்ளன.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy
விநாயகர் சதுர்த்தி விழா மிகப்பிரமாண்டமாக பத்துநாட்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. அதாவது விநாயகர் சதுர்த்தியையொட்டிய பத்து நாட்கள். சென்ற ஆண்டு, விநாயகர் சதுர்த்தி செப்டம்பர் 11ஆம் நாள் என்பதால், செப்டம்பர் 2ஆம் தேதிமுதல் செப்டம்பர் 11ஆம் தேதிவரை சதுர்த்தி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ஆண்டு தோறும் இந்தப்பத்து நாட்களிலும் கற்பக விநாயகர் கிழக்கு வாயிலில் இருந்து பத்துவித வாகனங்களில் ஊர்வலமாகச் செல்வார். அதாவது மூசிகவாகனம், சிம்ம வாகனம், ரிஷப வாகனம், மயில் வாகனம், குதிரை வாகனம் முதலிய பத்துவகை வாகனங்களில் பவனிவருவார். விநாயகர் சதுர்த்தியன்று பதினெட்டுப்படி அரிசியில் ஒரே கொழுக்கட்டையாகச் செய்து படைக்கின்றனர்.

பிள்ளையார் பட்டி கற்பகவிநாயகர் திருக்கோயில் கிழக்கு கோபுரம் வழியே வெளியே சென்றால் இடப்புறம் ஒரு குளம் அமைந்துள்ளது. அக்குளக்கரையில் பாறை மீது ஒரு சிறிய விநாயகர் கோயில் அமைந்துள்ளது. அந்த விநாயகர் பெயர் கோரக்க விநாயகர்.

காரைக் குடியில் இருந்து சுமார் 14 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. பிள்ளையார்பட்டி மதுரையில் இருந்து பேருந்து அடிக்கடி உண்டு.

கலைஅழகும் பக்திச்சுவையும் சேர்ந்து இக் கல்லோவியக் கோயில் தமிழகத்தின் பெருமை சேர்க்கும் கோயிலாகவும் இந்திய அளவில் பெரிய விநாயகர் கோயில்களில் ஒன்றாகவும் திகழ்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3. உச்சிஷ்ட கணபதி கோயில்

விநாயகரின் 32 வடிவங்களில் ஒன்று உச்சிஷ்ட கணபதி. விநாயகர் பிரமச்சாரி என்று புராணங்கள் கூற்று இருக்க, இரண்டு பெண்களை சென்னை பாடியில் உள்ள ஜெகதாம்பிகை உடனுரை திருஎல்லீஸ்வரர் திருக்கோயிலில் விநாயகர் மணந்தார் என்று மற்றொரு புராணக்கூற்றும் உள்ளது. இவ்விருகூற்றும் இருக்க, ஒரு பெண்ணை ஆலிங்கனம் செய்தபடி உள்ள வடிவம்தான் "உச்சிஷ்ட கணபதி" வடிவமாகும். வட மாநிலங்களில் உச்சிஷ்ட கணபதிக்கு விளக்கம் தரும்போது "பெண்ணின் உபஸ்தத்தில் தும்பிக்கையை வைத்தவர்" என்பர். எனவே இந்த உச்சிஷ்ட கணபதியை வணங்கும் பெண்களுக்கு குழந்தை பாக்கியம் உண்டாகும் என்பது ஐதீகம்.

ஆனால் உச்சிஷ்ட கணபதி, எல்லாத் திருக் கோயில்களிலும் ஒரே மாதிரியான வடிவமைப்புடன் இருக்கிறார் என்று கூறமுடியவில்லை. பல கோயில்களில் உச்சிஷ்ட கணபதி பெண் தெய்வத்துடன் சேர்ந்து இருப்பதாய் வடிவமைக்கப் படவில்லை. எனவே ஒரே பெயருள்ள விநாயகர் உருவச்சிலைகள் கோயிலுக்குக் கோயில் மாற்றம் கொண்டுள்ளது என்பது சிந்தனைக்குரிய ஒரு செய்தியாகும். புராண ஆய்வாளர்கள் இதைக் கூர்ந்து நோக்குதல் வேண்டும்.

4. விநாயகர் கோயில் - செகந்தராபாத்

செகந்தராபாத் (ஆந்திராமாநிலம்) இரயில் நிலையத்தில் நுழைவாயிலின் வலது புறத்தில் அமைந்துள்ளது பிரமாண்டமான விநாயகர் கோயில்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விநாயகப் பெருமானை மூலவராகக் கொண்ட இந்த விநாயகர் கோயில் சில ஆண்டுகளுக்கு முன்னர்தான் கட்டப்பட்ட கோயில் என்பதைக் காணமுடிகிறது.

உள்ளே நுழைந்ததும் இடப்புறத்தில் சிவபெருமான் பார்வதித் தாயார் வெளிச் சுவற்றின் மேல் அமைத்துள்ளார்கள். அருகில் நவக்கிரக சன்னிதி அமைந்துள்ளது. நவகிரகசன்னதிக்கு வெளியில் சுவற்றில் திருப்பதி ஏழுமலையான் காட்சி தருக்கிறார். நவக்கிரகம் தாண்டிச் சென்றால், நாகதேவதை சன்னதி அமைந்துள்ளது.

உள்ளே நுழைந்ததும் வலப்புறத்தில் சிவபெருமான் சந்நிதி, துர்க்கை சந்நிதி தனித்தனியே அமைந்துள்ளன.

துர்க்கை சந்திக்குப் பின் புறம் அஷ்டலட்சுமி சிலைகள் ஒரே வரிசையில் அமைந்துள்ளன. சுவற்றில் பன்னிரண்டு லிங்கங்கள், பதினெட்டு தேவிகள் உருவமும் பொறிக்கப்பட்டுள்ளன.

உள்ளே நேராகச் சென்றால் மூலவரான விநாயகர் கிழக்கு நோக்கி அருள்பாலிக்கும் பெரிய சந்நிதி அமைந்துள்ளது. இருபுறம் வரிசையில் நின்று தரிசனம் செய்ய ஸ்டீல் தடுப்புக் குழாய்கள் நீளவாட்டில் அமைந்துள்ளன.

மூலவர் விநாயகர் சந்நிதி வலப்புறம், வள்ளி தெய்வானையுடன் முருகப்பெருமான் சந்நிதி அமைந்துள்ளது. விநாயருக்கு அமைந்துள்ளது போல ஸ்டீல் தடுப்புக்குழாய் கிழக்கு மேற்காக அமைத்துள்ளனர்.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

மூலவர் விநாயகர் சந்நிதி எதிரில் ஆஞ்சநேயர் தனி சந்நிதியில் அமைந்துள்ளார்.

ஆஞ்சநேயர் - முருகப்பெருமான் சந்நிதி முடிவில் உள்ள வெறிச்சுவற்றில் மேல்புறம் பல்வேறு வடிவிலான விநாயகர் உருவச்சிலைகள் அமைந்துள்ளன.

பெரிய அளவிலான விநாயகர் கோயில்களில் இதுவும் ஒரு சிறப்புமிக்க கோயில் எனலாம்.

5. சித்திவிநாயகர் கோயில் - பிரபாதேவி - (தாதர் அருகில்) - மும்பை

மும்பை - தாதர் இரயில் நிலையத்திலிருந்து சுமார் இரண்டு மூன்று கி.மீ. தூரத்தில் பிரபாதேவி என்ற இடத்தில் மும்பையில் மிகமிக பிரசித்தி பெற்ற சித்திவிநாயகர் கோயில் உள்ளது, நுழைவாயிலின் இடப்புறம் சுமார் இருபது கடைகள் உள்ளன. இக்கடைகளில் விநாயகருக்கு படைப்பதற்கான மலர் மாலைகள், அருகம்புல், தேங்காய், மற்றும் இனிப்புகள் விற்கிறார்கள்.

வட்டவடிவமான தங்கமுலாம் பூசப்பட்ட மேல் விதானச் சுற்றுப்புறச் சுவற்றுடன் கருவறையில் மூலவர் சித்திவிநாயகர் செந்தூர நிறத்தில் காட்சிகொடுத்து அருள் பாலிக்கிறார். மூலவர் இடப்புறம் மூலவர்போல தங்கநிறத்தில் விநாயகர் அமைந்து அருள்பாலிக்கிறார். மூலவர் வலப்புறம் சிவபெருமான் லிங்கவடிவில் இருக்கிறார்.

வட்டவடிவில் அமைந்துள்ள கருவறைக்கு, பக்தர்கள் இடதுபுறமாகவும், வலதுபுறமாகவும் செல்ல வசதியாக கருவறைக்கு இரு நுழைவாயில்கள் உள்ளன. கருவறையின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy.
மேற்புறம் தங்கத்தில் ஜொலிக்கிறது: கலைநயம் ததும்பி வழிகிறது. காணக்கண்கோடி வேண்டும் சித்திவிநாயகரைக் காண! மின்னொளியில் மிகமிகப்பிரகாசமான கருவறை!

இப்போது மூலவர் அமைப்பையும் சிறப்பையும் காண்போம்.

அமைப்பு : துதிக்கை வலது புறமாக இருக்கும் மூலவர் சித்தி விநாயகருக்கு சிறிய வயிறு, நான்கு கரங்கள், வயிற்றில் முப்புரி நூலாக படமெடுத்த நாகதேவதை, மூன்று கண்கள், நான்கு கரங்கள் என்று அமைந்துள்ள சிறப்பைக் காண்கிறோம். கருங்கல்லில் அமைந்த சித்திவிநாயகர் செந்தூர நிறத்தில் காட்சிதருவது மற்றொரு சிறப்பாகும்.

நான்கு கரங்களில் மேலிருக்கும் வலக்கரத்தில் தாமரை மலரும் இடதுகரத்தில் அங்குசமும் கொண்டுள்ளார். கீழே இருக்கும் இருகரங்களில் வலதுகரத்தில் உத்தராட்ச மாலையும் இடதுகரத்தில் கொலுக்கட்டையும் கொண்டு விளங்குகிறார். அவர் இருபுறமும் சித்தி புத்தி தேவியர் அமர்ந்த கோலத்தில் உள்ளனர். இத்தகைய சிறப்பான அம்சங்களைக் கொண்டு விளங்கும் சித்தி விநாயகர் சுமார் - 2 1/2அடி உயரத்தில் உள்ளார். மூர்த்தி சிறியதாயினும் கீர்த்தி பெரியது என்ற பழமொழிக்கு ஏற்ப சித்தி விநாயகர் கீர்த்தி மிகமிகப் பெரியதாகும்!

கருவரையில் உள்ள சித்திவிநாயகர் மற்றும் சிபெருமான் ஆகியோரை ஆர அமர்ந்து காண வசதியாக, கருவறை எதிரில் அமர்வதற்கான நீளமான சிறிய திண்ணைகள் படிப்படியாக அமைக்கப்பட்டுள்ளன. அங்கு அமர்ந்து வேண்டும் வரை விநாயகரைக் கண்டு மகிழலாம். இங்கே சரியாக மாலை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy
ஏழுமணிக்கு வாத்தியங்கள் முழங்க, மணிகள் ஒலிக்க நறுமணப்புகை கருவறையை மேகமூட்டமாக சூழ்ந்து கொள்ள, ஆரத்தி நடைபெறுகிறது சித்திவிநாயகப் பெருமானுக்கு! புகை மண்டலத்தில் விநாயகர் தங்கமயமான மேல்விதானத்தோடு ஆகாயத்தில் மிதந்து வருவது போன்று தோற்றமலிக்கிறார், கண்கொள்ளாக் காட்சியது!

விநாயகரின் வாகனமான மூசிகத்திற்கு மிகமிக சிறப்பு தருகின்றனர் பக்தர்கள். ஆம் அவர் வாயிலாகத்தான் தங்கள் வேண்டுதல்களை சித்திவிநாயகருக்குத் தெரிவிக்கின்றனர். அத்தகு சிறப்புமிக்க மூசிகத்திற்கு இக்கோயிலில் இரு இடங்களில் சந்நிதி உள்ளது எனலாம். ஆம் நகர்த்தக் கூடிய மூசிகம் அது. காலை பதினொன்றறை அளவில் கருவறையில் இடப்புறம் அமைந்திருந்த மூசிகம் இப்போது மாலையில் வீரஆஞ்சநேயர் சந்நிதானத்துக்கு மேலே அமைத்திருந்தனர். இரு பின்னங்கால்களில் அமர்ந்து இருமுன்னங்கால்களை தூக்கி மோதகம் தாங்கி இருக்கிறது. அதன் உயரம் சுமார் மூன்று மூன்றறை அடி இருக்கலாம். பக்தர்கள் அதன் அருகில் சென்று ஒரு காதை ஒரு கையில் மூடி, மறுகாதில் தங்கள் வேண்டுதல்களைத் தெரிவிக்கின்றனர். இவ்வளவு சிறப்பாக நான் மூசிகத்தின் பெருமையை மற்றக் கோயில்களில் கண்டதேயில்லை.

6. மணக்குளவிநாயகர் கோயில் - பாண்டிச்சேரி

பிரசித்தி பெற்ற விநாயகர் கோயில்களில் பாண்டிச் சேரியில் உள்ள மணக்குள விநாயகர் கோயிலும் ஒன்று. மிக அற்புதமான கோயில். புவனேச விநாயகர் கோயில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்பதுதான் முதலில் இருந்த பெயர் என்றும், மணல் சூழ்ந்த பகுதியில் சிறுகுளம் அமைந்த இடத்தில் விநாயகர் கோயில் அமைந்ததால் மணக்குள விநாயகர் எனப்பெயர் பெற்றர் என்றும் தற்போது கோயில் அமைந்துள்ள இடம் முன்பு மணல் குளமாக இருந்ததால் மணக்குள விநாயகர் எனப்பெயர் பெற்றார் என்றும் கூறுகின்றனர்.

சிறப்புமிக்க இக்கோயில் அமைப்பினையும் சிறப்பினையும் காண்போம்.

கோயில் முன்புறம் கோயில் நுழைவாயில் மண்டபம் சிறப்புற அமைக்கப்பட்டு அங்கே கோயில் யானை கட்டப்பட்டுள்ளது. நுழைவாயில் மேல் விநாயகர் சிலை அமைக்கப்பட்டு அதன் இருபுறமும் காளை சிலைகள் மற்றும் பூதகணங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மண்டபத்தின் கீழ்புறம் மணக்குள விநாயகர் கோயில் அமைந்துள்ளது.

முந்நூறு ஆண்டுகள் பழமையான இக்கோயில் அமைக்க, பிரஞ்ச ஆதிக்கத்தால், பாண்டிச்சேரி மக்கள் மிகுந்த தொல்லைகளை எதிர்கொள்ள நேர்ந்தது. இறுதியில் பிரஞ்சுக்காரர்களின் ஆதரவுடன் இக்கோயில் அமைக்கப் பட்டது.

ராஜகோபுர நுழைவாயிலுக்கு நேரே தங்கமுலாம் பூசிய கொடிமரமும் மணக்குள விநாயகர் கருவறையும் சிறப்புற அமைக்கப்பட்டுள்ளன. ராஜகோபுரத்தில் மூன்றடுக்கில் சிலைகள் அமைந்துள்ளன. மேல்புறத்திலிருந்து முதல் வரிசையில் இடப்புறம் முருகப்பெருமான் தன் வாகனமாகிய மயிலுடன் நின்கிறார். வலதுபுறம் விநாயகர் நின்ற கோலத்தில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy
உள்ளார். முருகன் அருகிலும் ஒரு மூசிகம்: விநாயகர் அருகிலும் ஒரு மூசிகம் மூன்றாவது அடுக்கில் இருபுறமும் காளையும் பூதகணங்களும் உள்ளன. நடுப்பகுதியில், நடுநாயகமாக, வட்டவடிவ பின்னணி அமைப்பில், நர்த்தன விநாயகர் சிறப்புற வடிவமைக்கப்பட்டுள்ளார்.

ராஜகோபுரத்திற்கு அருகில் அமைந்துள்ள சிறிய வாயிலின் மேல்புறம், அமர்ந்த கோலத்தில் விநாயகரும் பூதகணங்களும் வடிவமைக்கப்பட்டு உள்ளன.

உள்ளே நுழைந்து வரிசையில் சென்று மூலவர் மணக்குள விநாயகரை தரிசிக்க வேண்டும். மூலவரை தரிசிக்க நுழையவும் வெளியில் வரவும் தனித்தனி வழிகள் உள்ளன.

மூலவர் இருக்கும் கருவறை சுமார் இருபது இருபந்தைந்து சதுர அடியில் அமைந்திருக்கிறது. விமானம் தங்கத்தால் ஆனது. மணக்குள விநாயகர் அமர்ந்த நிலையில் மேல்புறமுள்ள இரு கரங்களில் அங்குசமும் பாசமும் கொண்டுள்ளார். கீழே உள்ள இரு கரங்களில், வலதுகரம் அபயமுத்திரையுடனும், இடது கையில் விரதன முத்திரையுடனும் விளங்குகிறார். கருவறையில் மற்றுமொரு சிறிய கணபதியையும் நாகர்களின் திருவுருவங்களையும் காணலாம். மூலவர் மணக்குள விநாயகருக்கு தங்கக் கவசமும், வெள்ளிக் கவசமும் சாத்தி முக்கிய விழா நாட்களில் வழிபாடு செய்யப்படுகிறது. நாங்கள் தரிசனம் செய்த அந்தநாள் 2010 ஏப்ரல் 14ஆம் நாள் தமிழ் புத்தாண்டு, ஆகையால் தங்கக்கவசம் சாத்தியிருந்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. மூலவரை வணங்கி வெளியில் வரும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

போது, "இன்று புத்தாண்டு இன்று புத்தாண்டு இன்று புத்தாண்டு இறைவனை வணங்கி, இன்று தொடங்கு இனிய நல்லாண்டு" என்று மனது பாடியது. கோயிலில் முன்கோபுர நடை, மூலவர் கருவறை, உற்சவ மூர்த்தி சந்நிதி, கல்யாண மண்டபம், மகா மண்டபம், மடப்பள்ளி, மற்றும் அலுவலகம் ஆகியவை உள்ளன. விநாயகர் பள்ளியறை கண்ணாடியால் ஆனது கண்டு மகிழலாம்.

மூலவரை வணங்கி வெளியில் வந்தால், மேற்குப் பிரகாரத்தின் இடதுபுறம் பாலவிநாயகர். அதாவது, வெள்ளி விமானத்தில் கீழ் பாலவிநாயகர் சந்நிதியும், கிழக்குப் பிரகாரம் வலதுபுறம் பாலசுப்பிரமணியம் சந்நிதியும் வெள்ளி விமானத்தின் கீழ் அமைந்துள்ள சிறப்பினைக் கொண்டுள்ளது. மூலவர் விமானம் தங்கத்தால் அலங்கரிக்கப்பட்டிருப்பதைக் காணும் போது, தங்கக்கூரை வேய்ந்த சிதம்பரம் நடராசர் சந்நிதி, திருவரங்கம் அரங்கநாதர் சந்நிதி ஆகியவை ஞாபகத்திற்கு வருவது இயல்பானதொன்று. மேலும் தங்க விமானத்தின் சிகரம் மேற்கூரையிடையில் அமைக்கப்பட்ட அற்புதமான விநாயகர் சிலைகளையும் கண்டு மகிழலாம்.

இனி ஆலயத்தின் பிரகாரங்களின் சுவற்றில் அமைந்துள்ள ஓவியம் மற்றும் சிலைகளைப் பற்றி காணலாம்.

கோயில் தெற்குப் பிரகாரம் சுவற்றின் மேல்புறம் மூன்று வரிகளில் விநாயகர் உருவங்கள் உள்ளன. விநாயகர் ஓவியங்களும் உள்ளன. இது தவிர விநாயகர் பற்றிய பாடல்கள் உள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy
முன் மண்டபத்தின் விதானத்தில் விநாயகர் பற்றிய ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. விநாயகர் சித்தி, புத்தி ஆகியோரை மணந்தது, விநாயகரின் பிறப்பு பற்றியது, காயாமுகாசுரனைக் கொன்றது போன்ற ஓவியங்கள் அங்குள்ளன.

இனி விநாயகர் கோயிலின் வியப்பான மற்றும் சிறப்பானவற்றைக் காண்போம்.

வியந்து பார்த்த விநாயகர் சிலைகள்

1/2 அடி உயர மிகச்சிறிய விநாயகர் - உற்சவ மூர்த்தி விநாயகர் இவரே!

- திவிமுக விநாயகர் - இருமுகம், ஒன்று வலஞ்சுழி, ஒன்று இடஞ்சுழி

- திரிமுக விநாயகர் - மூன்று முகங்கள்

- சதுர்முக விநாயகர் - நான்கு முகங்கள், நான்கு கரங்கள்

- பஞ்சமுக கணபதி - ஐந்து முகம், எட்டு கரங்கள், மூன்று முகம் ஒரு வரிசை, நான்காவது இரண்டாவதின் மேல்புறம், ஐந்தாவது காணமுடியாது.

- சண்முக கணபதி - ஆறுமுகங்களும் ஒரே வரிசையில் பன்னிரெண்டு கரங்களுடன் அமைந்துள்ளார்.

- பிரம்ம கணபதி - அன்னப்பறவை மீது அமர்ந்த கோலம், மூன்று முகம், நான்கு கரங்கள்

- மயூரேச கணபதி - மயில் மீது அமர்ந்த கோலம் நான்கு கரங்கள், ஒரு முகம்.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

இதுதவிர பல்வேறு நாடுகளில் அமைத்து வழிபடும் விநாயகர் திருவுருவங்கள் - குறிப்பாக, இந்தோனேசியா, தாய்லாந்து, சைனா, பர்மா ஆகிய நாடுகளில் வழிபடுகிற விநாயகர் ஓவியங்களும் அவற்றை பரிசளித்தவர் பெயருடன் வைக்கப்பட்டுள்ளன.

தங்கரதம் விநாயகருக்கு உள்ளது. முக்கிய விழா நாட்களில் பொதுவாக கோயில் உள்ளே மட்டும் இந்த இரதம் இழுத்து செல்லப்படுகிறது. வருடத்தில் ஒரு முறை - அதாவது விசயதசமி நாளில் மட்டும் தங்கரதம் கோயிலுக்கு வெளியில் மாடவீதியில் மட்டும் இழுத்துவரப்படுகிறது.

7.அருள்மிகு வரசித்தி விநாயகர் திருக்கோயில் காணிப்பாக்கம்

அமைப்பு : திருக்கோயில் எதிரில் மிகமிகப் பெரிய குளம் அமைந்துள்ளது. மிக அற்புதமான ராஜகோபுரம். இக்கோயில் மூலவர் விநாயகர் அருள்மிகு வரசித்தி விநாயகர். விநாயகப் பெருமானை மூலவராகக் கொண்ட பெரிய கோயில்களில் சித்தூர் (ஆந்திரமாநிலம்) காணிப்பாக்கம் கோயில் மிகமிக பிரசித்தி பெற்றது ஆகும். இக்கோயிலில் உள்ள விநாயகர் சுமார் 500 ஆண்டுகள் பழமையானவர் என்கின்றனர்.

மூலவர் அருள்மிகு வரசித்தி விநாயகர் கருவறை அமைப்பு :

வரிசையில் நின்று கருவறை அருகில் சென்றால் அருள்மிகு வரசித்தி விநாயகர் தண்ணீரில் மிதப்பது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy
தெரியவரும் அவ்வாறு அமைந்திருப்பதன் தல வரலாற்றைக் காண்போம். மூன்று மாற்றுத்திறனாலிகள்- சகோதரர்கள், அதாவது வாய்ப்பேசுதல், பார்த்தல் மற்றும் கேட்டல் என்ற இயல்பான ஐம்புலன் உணர்வுகள் இல்லாதவர்கள் விவசாயத்தொழில் செய்து வந்தனர்.

இவர்கள் ஒருவர்க்கொருவர் தங்களுடைய எண்ணங்களைப் பரிமாறி விவசாயத் தொழில் செய்வதில் சொல்லொண்ணாத் துயரடைந்தனர். இதனைப் பார்த்து இவர்களுக்கு எப்படி உதவி செய்வது என்று விநாயகப் பெருமான் யோசித்துக் கொண்டிருந்தார். அப்போது இந்த மூவரும் கிணற்றில் வயலுக்கு நீர் இறைத்துக் கொண்டிருந்தனர் நீர்வற்றிப் போனது. தோண்டிக் கொண்டே போனார். அப்போது ஓரிடத்தில் ரத்தம் வெளிப்பட்டது. மூவரும் கூர்ந்து கவனித்தனர். கிணற்றின் உள்ளே யானை முகக் கடவுள் விநாயகர் இரத்த வெள்ளத்தில மிதந்தார். ஊர்மக்கள் அனைவரும் திரண்டு விநாயகப் பெருமானை வணங்கி, கிணற்றிலிருந்து வெளியே எடுக்க எல்லா முயற்சிகளையும் செய்தனர். அது முடியாமல் போகவே விநாயகரை கிணற்றுக்குள் இருந்த வாரே வைத்து, ஆயிரக்கணக்கான இளநீரை வெட்டி இளநீர் தண்ணீரை ஊற்றி விநாயகரை அபிஷேகம் செய்தனர். அந்த நீர் அருகில் இருந்த காணிநிலத்தில் பாய்ந்தது. எனவே அவ்வூருக்கு காணிப்பாக்கம் என்ற பெயர் ஏற்பட்டது. பின்னர் கிணற்றை சுற்றி சன்னதி எழுப்பினர். பல ஆண்டுகளுக்குப் பின்னரே இப்போது உள்ள கோயில்களும் மற்ற சன்னதிகளும் உருவாயின.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மற்ற சன்னதிகள் : மூலவர் வரசித்தி விநாயகர் முன்புறத்தில் நவகிரக சன்னதியும், விநாயகர், வலதுபுறம் (சற்று முன்புறத்தில்) வீர ஆஞ்சநேயர் சன்னதியும் மற்றும் நாகர் சன்னதியும் அமைந்து இருக்கின்றன.

8. வினைதீர்த்த விநாயகர் கோயில் - முகப்பேர் சென்னை.

சென்னை முகப்பேரில், கிருஷ்ணா நகரில், ஃரண்டியர் லைஃ லைன் மருத்துவமனையருகில் திருமங்கலம் அம்பத்தூர் சாலையில் அமைந்துள்ளது வினைதீர்த்த விநாயகர் கோயில். சென்னையில் விநாயகருக்காகக் கட்டப்பட்ட கோயில்களில் ஒன்று. வினைதீர்த்த விநாயகரை மூலவராகக் கொண்டு விளங்கும் இக்கோயில் 20 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டது. கோயிலின் ராஜகோபுரம் மற்றும் அநுமான் சன்னதி கட்டி முடிக்கப்பட்டு, 7-9-2009 அன்று மஹா கும்பாபிஷேக விழா சிறப்பாக நடைபெற்றது. சீருடனும் சிறப்புடனும் நடந்த அந்த விழாவில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு வினைதீர்த்த விநாயகரின் பேரருளைப் பெற்றனர்.

இனி அக்கோயில் அமைப்பினைக் காண்போம். கோயிலில் வடக்கு நோக்கி உள்ள ராஜகோபுர நுழை வாயிலில் நுழைந்து சென்றால், வலப்புறம் மூலவர் வினைதீர்த்த விநாயகர் சந்நிதி சிறப்புற அமைந்துள்ளதைக் காணலாம். அவர் சந்நிதி சுற்றிலும் பிரம்மா, தட்சிணாமூர்த்தி, மகாவிஷ்ணு ஆகிய மூவரும் மூன்று புறங்களில் அமைக்கப் பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

In Public domain. Digitization: Muthulakshmi Research Academy

அவருக்கு நேரே ராஜகோபுர நுழைவாயிலின் இடது புறம் நவக்கிரக சந்நிதி உள்ளது. விழாக்காலங்களில் வினை தீர்த்த விநாயகருக்கு வெள்ளிக்கவசமும், தங்கமுலாம் பூசப் பட்ட தங்கக் கவசமும் அணிவித்து பூவலங்காரம் செய்வித்த சமயம் தரிசனத்துக்கு செல்வோர் மிக்க மகிழ்ந்து போவார்கள்.

பக்தியும், கலையுணர்வும் சேர்ந்து ஆனந்தத்தில் திளைப்பவர்களுக்கு விநாயகரின் அருள் கிடைப்பது நிச்சயம். மூலவர் விநாயகரின் இடப்புறம் கனக துர்க்கை சந்நிதியும், வலப்புறம் முருகப்பெருமானுக்கு தனிசந்நிதியும் அமைந்து சிறப்புறுகிறது. முருகப்பெருமான் வள்ளி, தெய்வானையுடன் காட்சியளித்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார். முருகப் பெருமான் நுழைவாயில் இருபுறமும் முறையே, இடப்புறம் ஐயப்பன் திருவுருவச் சிலையும் வலதுபுறம் அருள்மிகு வலஞ்சுழி விநாயகர் திருவுருவ சிலையும் அமைந்துள்ளன.

வினைதீர்த்த விநாயகர் சந்நிதி மண்டபத்தின் இடதுபுறத்தின் நுழைவாயிலில் அநுமன் சந்நிதி அமைந்துள்ளது. அருள்மிகு முருகன் சந்நிதி வலப்புறம் காமாட்சியம்மன் சந்நிதியும், ஏகாம்பரேஸ்வரர் சந்நிதியும் உள்ளன. ஏகாம்பரர் சந்நிதி எதிரில் நாகர் அரசமரத்தடியில் அமைந்துள்ளது.

உள்ளே சரியாக ராஜகோபுர நுழைவாயிலுக்கு நேராக, கோயில் இறுதிச் சுற்றுச்சுவர் முன்புறம் விழாக்கள் நடக்கும் மேடை உள்ளது. விழாக்காலங்களில் இம்மேடையில் விழாவைப் பற்றிய ஆன்மிக சொற்பொழிவு நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

In Public domain. Digitized by Muthulakshmi Research Academy

11. அதிசயப் பிள்ளையார்கள்

1. வயிறு வெடித்த விநாயகர்:

இயல்பாக விநாயகருக்கு பெரிய வயிறு இருப்பது எல்லா கணபதி உருவங்களிலும் காணலாம். ஆனால் அம்பா சமுத்திரத்தின் அருகில் உள்ள ஜாக்கையா நல்லூர் திருத்தலத்தில் கணபதியின் பெரியதாக இருக்கும் வயிறு வெடித்த நிலையில் காட்சிதருவது அதிசயமாக உள்ளது.

2. பிரளயம் காத்த விநாயகர் :

திருப்புறம்பயம் சிவன் கோயிலில் (கும்பகோணம் அருகில்) உள்ள விநாயகர் கடல் நுரையால் செய்யப்பட்டவர். எனவே இந்த விநாயகருக்கு வருடத்தில் ஒருமுறை விநாயகர் சதுர்த்தியன்று மட்டுமே தேனபிஷேகம் நடைபெறுகிறது. தேன் திருமேனியில் இறங்கும் ஆனால் வெளியில் வராது என்பது மற்றுமொரு அதிசயம்.

3. பஞ்சமுக விநாயகர் :

நாகப்பட்டினம் காயா ரோகணேஸ்வரர் திருக்கோயிலில் பிள்ளையார் சிங்க வாகனத்தில் (மூஷிக வாகனத்தில் இருப்பது இயல்பு) நான்கு திசைகளில் நான்கு தலைகளும் மேலே ஒரு தலையுமாக பஞ்சமுக விநாயகராக அமர்ந்த நிலையில் அருள்பாலிக்கிறார். மேலும் பல கோயில்களில் இவ்வாறு பஞ்சமுக விநாயகர் சிங்கம் மீது அமர்ந்த கோலம் காணலாம்

4. தலையைத் திருக தனம்தரும் விநாயகர் :

திருவண்ணாமலை கிரிவலப்பாதையில் பக்தர்களுக்கு அருள்புரியும் விநாயகர்களில் ஒருவர்தான் இவர். இவர் உருவத்திலிருந்து தலையைத் தனியாக எடுக்க முடியும்.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

தலையை எடுத்த இடத்தில் உள்ளே ஒருமுழம் அளவுக்கு உள்ள பள்ளத்தில் காசுகளைப் போட்டு மீண்டும் எடுத்தால் செல்வம் சேர்கிறது என்பது பக்தர்களின் நம்பிக்கை.

5. **.பாதாளப் பிள்ளையார் :**

திருகாளஹஸ்தீஸ்வரர் திருக்கோயிலின் நுழை வாயிலில் நுழைந்து சென்று சுமார் 100 மீட்டர் தொலைவில் இடப்புறத்தில் அமைந்துள்ளது. இந்த வியப்புமிக்க விநாய்கர் சந்நிதி. ஆம் இங்கு விநாயகர் பாதாளத்தில் அமர்ந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்கிறார். அதாவது, கிட்டத்தட்ட முப்பது அடி பள்ளத்தில் விநாயகர் எழுந்தருளியுள்ளார். கீழே இறங்க இரும்பு கைப்பிடியுடன் கூடிய குறுகிய படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. நுழைவாயில் மிக மிக உயரம் குறைவு; அதாவது மண்டியிட்டு தான் உள்ளே செல்ல வேண்டும்; மண்டியிட்டுத்தான் வெளியில் வரவேண்டும். மேற்கூறிய காரணங்களால், பக்தர்கள் பத்துப்பேருக்கு மேல் ஒருமுறை உள்ளே செல்ல அனுமதி இல்லை. சென்ற பத்து பக்தர்கள் திரும்பிவந்த பிறகுதான், அடுத்த பத்து பக்தர்களுக்கு உள்ளே அனுமதி.

இந்த பாதாளப் பிள்ளையாருக்கு அர்ச்சனை செய்வதோ, தேங்காய் உடைப்பதோ தவிர்க்கப்படுகிறது. பிள்ளையார் வாகனமான பெருச்சாளியின் காதுகளில் வேண்டுதலை இரகசியமாகக் கூறினால் அவை உடனே நிறைவேறிவிடும் என்பது ஐதீகம். அதை மட்டுமே பக்தர்கள் செய்கிறார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

6. **மனித உருவில் விநாயகர் :**

மாயவரம் - திருவாரூர் சாலையில் பூந்தோட்டம் என்ற ஊர் அருகில் அரசலாற்றின் கரையில் உள்ளது ஆதிவிநாயகர் சந்நிதி. இதன் எதிரில் அமைந்த சிவன் கோயிலில் விநாயகர் தன் இயல்பான யானை முகம் கொண்ட உருவத்திலிருந்து வேறுபட்டு மனித உருவுடன் அருள் பாலிக்கிறார். மேலும் ஆதிவிநாயகர் எனும் திருப்பெயரோடு மனித முகத்தோடு, நரமுக கணபதியாய் அருள்புரிகிறார். திலதர்ப்பணபுரி என்கிற திலதைப்பதியில் (திருவாரூர் மாவட்டம்) இவர் மேற்கு நோக்கிய சந்நிதியில் பாசம், அங்குசம் ஏந்தி ஆனந்த முத்திரை, ஊருஹஸ்த முத்திரை இரண்டையும் தரித்து ஒருகால் மடித்து, மற்றொரு காலை தொங்கவிட்ட திருக்கோலத்தில் அருள்கிறார்.

7. **திரிசூலம்** - (சென்னை) :

சென்னை விமானநிலையம் திரிசூலம் என்ற இடத்தில் அமைந்துள்ளது. திரிசூலத்தில் திரிபுரசுந்தரி உடனுறை திரிசூலநாதர் திருக்கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலில் எழுந்தருளியுள்ள நாகயக் ஞோபவீத கணபதி, நாகத்தையே புரிநூலாக அணிந்துள்ளார்.

8. **இடுக்குப்பிள்ளையார்** :

திருவண்ணாமலை கிரிவலம் சாலையில் அமைந்துள்ளது. இந்த அதிசயப் பிள்ளையார் கோயில். பிள்ளையாரை பிள்ளையார் உருவில் காணமுடியாத அதிசயம் ஆம், இடுக்குப் பிள்ளையார் பிள்ளையார் வடிவில் காணமுடியவில்லை. கோயிலின் முன்புறம் இரண்டு பாதங்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy
அமைந்துள்ளன. கோயிலின் பின்புறம் மண்டியிட்டுப்படுத்து, சர்க்கஸில் இரும்பு வளையத்தில் நுழைவது போல, நுழைந்து முன்புறமாக வெளிவருவதுதான் இக்கோயிலில் செய்யும் பிரார்த்தனை, வணங்குதலை இப்படி வித்தியாசமான கோயிலில் வித்தியாசமான தரிசனம் செய்யும் பக்தர்களுக்கு உடல்வலி, பில்லி சூனியம் போன்றவை அகலுதல் ஆகிய பலன்கள் கிடைக்கும் என்பது பக்தர்கள் நம்பிக்கை.

பிள்ளையார் உருவமே இல்லாமல் பிள்ளையார் கோயில் இருப்பது அதிசயம்தானே!

9. **சித்தலட்சுமி விநாயகர்** :

இவர், இராமேஸ்வரம் இராமேஸ்வரஸ்வாமி ஆலயத்தில் துவஜஸ் தம்பத்தினருகே 18 கரங்களுடன் காணப்படும் கணபதி. ராவணனைக் கொன்ற பிரம்மஹத்தி தோஷம் நீங்க, ராமர் இந்த கணபதியை பூசித்த பின்னரே லி ங்கத்தை பிரதிஷ்டை செய்து பூஜித்தார் என்பது புராணக்கதை.

10. **நிறம் மாறும் விநாயகர்:**

கன்னியாகுமரி அருகில் கேரளபுரம் (நாகர் கோயிலிருந்து 16 கி.மீ) உள்ளது. இங்குள்ள ஸ்ரீமகாதேவர் கோயிலில் அமைந்துள்ள விநாயகரின் நிறம் மாறும் அதிசயம் நிகழ்கிறது. ஆடி அமாவாசை முதல் தை அமாவாசை வரை கருப்பாகவும், தைமாத அமாவாசை முதல் ஆடி அமாவாசை வரை வெள்ளையாகவும், விநாயகர் நிறம் மாறுகிறது. விநாயகர் திருவுருவம் சந்திரகாந்தக் கல்லில் அமைந்துள்ளதால் இவ்வாறு நிறம் மாறுகிறது. அதாவது சந்திரகாந்தக் கல்லில் சூரிய ஒளி படுவதால் இம்மாற்றம் நிகழ்வதாகக் கூறுகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

11. **கடல்நுரை விநாயகர் :**

திருவலஞ்சுழியில் உள்ள விநாயகர் கடல்நுரையால் செய்யப்பட்டதாகக் கருதப் படுவதால் அவருக்கு பச்சைக் கற்பூரம் அபிஷேகம் மட்டுமே நடைபெறுகிறது.

12. **விரகணபதி :**

நின்ற கோலம் பதினாறு கைகள், ஒரு யானை முகம், பதினாறு கைகளில் 16 ஆயுதங்கள். 1 .வேதாளம் 2. வேல் 3. பாணம் 4 .வில் 5. சபீராயுதம் 6. கத்தி 7. கேடயம் 8. சம்மட்டி 9. கதை 10. மாவெட்டி 11. நாகம் 12. கயிறு 13. சூலம் 14. குந்தம் 15. கோடாரி 16. கொடி - மதுரை மீனாட்சியம்மன் தெற்குக் கோபுரத்தில் காணலாம்.

13. **சம்பந்த விநாயகர் :**

ஆஞ்சநேயருக்கு செந்தூரம் பூசி அலங்கரித்து வணங்குவது எல்லோரும் அறிந்த ஒன்று. ஆனால் திருவண்ணாமலையில் உள்ள திருஅருணாச் சலேஸ்ரர் கோயிலில் உள்ள விநாயகருக்கு செந்தூரம் பூசி வழிபடுகிறார்கள் காரணம் இதுதான்:-

சம்பந்தாசுரன் என்னும் அரசனை விநாயகர் வதம் செய்தபோது, அவனது இரத்தத்திலிருந்து அசுரர்கள் உருவாகினர். எனவே விநாயகர் அவனது இரத்தத்தை உடலில் பூசிக்கொண்டார். இதன் அடிப்படையில் சித்திரைப் பிறப்பு, விநாயகர் சதுர்த்தி, திருக்கார்த்திகை மற்றும் தை மாதத்தில் ஒருநாள் என்று வருடத்தில் நான்கு நாட்கள் மட்டும் இவருக்கு செந்தூரம் சாத்தும் வைபவம் நடைபெறுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

14. சுயம்பு செல்வ விநாயகர் கோயில் - சேண்பாக்கம் - வேலூர் :

கோயில் என்றால் கோபுரம் என்பது அனைவரும் அறிந்த ஒன்று. சுவாமியை வணங்க முடியாதவர், கோபுரத்தைத் தரிசனம் செய்தாலே போதும் என்றும் ஆன்மிகப் பழமொழி நாம் கேட்டிருக்கிறோம். ஆனால் கோபுரமே கூடாது என்னும் கருத்தில் கோயில் கட்டியுள்ளது அதிசயம் தானே. ஆம், வேலூர் அருகில் உள்ள ஊர் சேண்பாக்கம். இங்கே உள்ளது சுயம்பு செல்வ விநாயகர் கோயில். இதற்கு மேற்கூரையும் கோபுரமும் இல்லை. ஆம் ஆலயம் அமைத்த அரசன் கனவில் இறைவன் தோன்றி, வானில் செல்லும் சித்தர்கள் என்னை வணங்க ஏதுவாக மேற்கூரை இல்லாமல் கோயில் அமைக்க வேண்டும்; கோபுரம் கூடாது என்று கூறியதால், அவ்வாறு மேற்கூரையும் கோபுரமும் இல்லாமல் அமைந்துள்ளன என்பது புராணக்கதை.

மேலும் ஒரு அதிசயம் இக்கோயிலில் உள்ளது. அதாவது வான்பார்த்த திறந்தவெளி வாசலில், பதினோரு சுயம்பு விநாயகர்கள் ஓம் என்ற வடிவத்தினுள் அமர்ந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றனர். இவ்விநாயகர்களை ஏகாதச பிள்ளையார் என்று கூறுகின்றனர்.

15. சிரட்டைப் பிள்ளையார் கோயில்- திருநெல்வேலி:

திருச்செந்தூர் சாலையில் பாளையம் கோட்டை அருகில் உள்ளது சிரட்டைப் பிள்ளையார் கோயில். இங்கு வேண்டுதலுக்காக தேங்காய் விடலை கீழே போட்டு உடைத்தால், சிரட்டை (கொட்டாங்குச்சி) தனியாகவும் தேங்காய் தனியாகவும்

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

சிதறும் என்கின்றனர். அதன் காரணமாக, இங்குள்ள விநாயகர் சிரட்டைப் பிள்ளையார் எனப் பெயர் பெற்றார் என்றும் கூறுகின்றனர்.

16.தும்பிக்கை ஆழ்வார்:

சென்னை பெங்களூரு நெடுஞ்சாலையில் காவிரிப் பாக்கம் என்ற ஊரிலிருந்து மூன்று கி.மீ தொலைவில் உள்ளது. திருப்பாற்கடல் கிராமம். இங்கு சைவரும் வைணவரும் வணங்கும். பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருத்தலம் அமைந்துள்ளது. இங்கு சிவலிங்கம் மேல் பெருமாள் எழுந்தருளியுள்ளார். (மதநல்லிணக்கத்திற்கும் சமயப் பொறைக்கும் நல்ல உதாரணம்)

பன்னிரு ஆழ்வார்கள் திருவுருங்கள் எல்லா வைணவத் திருத்தலங்களிலும் அமைந்துள்ளது இயல்பு. இங்கு பதின்மூன்றவதாக, தும்பிக்கை ஆழ்வார் என்று விநாயருக்குப் பெயரிட்டு, திருநாமம் மூன்று சாத்தி வழிபடுவது, அதிசயமாகவும் சமயப் பொறைக்குச் சான்றாகவும் காண்கிறோம். இதைப் போல, மதுரை கள்ளழகர் சுந்தரராஜப் பெருமாள் திருக்கோயில் உட்பிரகாரத்தில், தும்பிக்கை ஆழ்வார் என்று பெயரிட்ட விநாயகர் அருள் பாலிப்பதைக் காணமுடிகிறது. ஆனால், பன்னிருஆழ்வார்கள் வெளிப்பிரகாரத்தில் அமைந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்கின்றனர்.

17. ஆதியந்தப் பிரபு

ஆதியென்றால் முதல் - முதல்வழிபாட்டிற்குரிய முதல்வர் விநாயகர்- அந்தம் என்றால் நிறைவு - நிறைவு வழிபாட்டுக்குரியவர் - அனுமான்

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

வழிபாட்டின் தொடக்கத்தில் விநாயகரையும் நிறைவில் அனுமானையும் வழிபடுவது மரபு. பிள்ளையார் பிடிக்க குரங்காய் முடிந்தது என்ற பழமொழி வழக்கில் இருப்பது தொனிப்பொருளாய் மேற்சொன்ன உண்மையைப் புலப்படுத்துகிறது என்று கூறுகின்றனர் சமயப்பெரியார்கள்.

விநாயகர்வலப்பக்கமும் அனுமன் இடப்பக்கமும் இணைந்த திருமேனி ஆதியந்தப் பிரபு. சென்னை அடையாறு மத்திய கைலாயம் கோயிலிலும் சேலம் கந்தகிரியிலும் ஆதியந்தப் பிரபு. திருமேனியைக் கண்டு தரிசித்து விநாயகர், அனுமன் இருவரின் அருளை ஒருங்கே பெறலாம்.

18. நவகிரகங்களைக் கண்காணிக்கும் பிள்ளையார் திருவாரூர் தியாகராசர் கோயில்

திருவாரூரில் உள்ள தியாகராசர் எழுந்தருளியுள்ள திருக்கோயில் பல அம்சங்களில் பெரியது. எனவே தான் இத்திருக்கோயிலை பெரிய கோயில் என்றும் அழைக்கின்றனர்.

அதாவது இங்கே 9 ராசகோபுரங்கள், 80 விமானங்கள் 12 பெரிய மதில்கள், 13 மிகப் பெரிய மண்டபங்கள், 15 தீர்த்தக் கிணறுகள், 3 நந்தவனங்கள், 3 பெரிய பிரகாரங்கள், 365 லிங்கங்கள் 100க்கும் மேற்பட்ட உட்கோபுரங்கள் என பிரமாண்டமான விளங்குகிறது இத்திருக்கோயில். மேலும் 86 விநாயகர் சிலைகள் இக்கோயிலுக்கு பெருமை சேர்க்கின்றன.

சனிதோசம் பிடித்த சதயகுப்தன் என்ற அசுரன் நவகிரகங்களை எதிர்த்துப் போரிட்டான். பயந்த நவகிரகங்கள் திருவாரூர் தியாகராசப் பெருமானிடம் முறையிட, அவர்களை அசுரனிடமிருந்து காப்பாற்றினார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தியாகராசர் பெருமான் அதனால் இங்கு நவகிரகங்கள் நேர்கோட்டில் சிவபெருமானை நோக்கி அமைந்துள்ளன. நவகிரகங்கள் பக்தர்களுக்கு தொல்லை கொடுக்கின்றனவா என்பதைக் கண்காணிக்க, விநாயகர் சிலையும் இந்த நவகிரக சன்னதியில் உள்ளது. அதனால் தான் திருநள்ளாறு சென்றாலும் திருவாரூர் செல்ல வேண்டும் என்று பக்தர்கள் கூறுகின்றனர்.

19. தூம கேது விநாயகர் திருநீர்மலை

திருநீர்மலையை சென்னை திருப்பதி என்றும் சொல்வார்கள். திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்த 108 திருப்பதிகளில் சென்னையை அடுத்த திருநீர்மலையும் ஒன்று. இங்குள்ள குலத்தின் பெயர் மணிகர்ணிகாதடாகம் ஆகும். கங்கைக்குச் சமம் என்றும் கூறுவர். தூமம் என்றால் ராகு, ராகு கேது ஆகிய இரண்டு வடிவமும் இணைந்து விளங்குகிறார் தூம கேது விநாயகர். இவர் திருநீர்மலையில் மணிகர்ணிகா தடாகத்தின் கிழக்குக் கரையில் எழுந்தருளியுள்ளார். இவரை வெள்ளி, சனி, ஞாயிறு, செவ்வாய் போன்ற நாட்களில் தரிசிக்கலாம்.

திருமணமாகாத பெண்கள் இக்கோயிலுக்கு வந்து வழிபடும்போது, அவர்களது ராகு, கேது தோஷம் நீங்கி திருமணம் நடந்து விடுவதாக கூறுகிறார்கள்.

விநாயகர் சதுர்த்தியன்று சிறப்பு யாகம் நடைபெறுகிறது. குழந்தைப் பாக்கியம் வேண்டுவோருக்கு கணபதி யாகம் நடத்தப்படுகிறது. வலம்புரிச்சங்கு கொண்டு பால் அபிஷேகம் செய்யப்படுகிறது. ஒவ்வொரு சனிக்கிழமையும் மற்ற விஷேசநாட்களிலும் வலம்புரிச்சங்கு தீர்த்தம் பிரசாதமாக

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

வழங்கப்படுகிறது. இதைப் போலவே திருச்சியிலிருந்து மேற்கு புறம் முப்பத்தைந்து கி.மீ தொலைவில் காவிரியின் தென் கரையில் அமைந்துள்ள அருள்மிகு கடம்பனேஸ்வரர் திருக்கோயிலிலும், ராகு கேது இருபுறம் இருக்க, நடுவில் இடஞ்சுழி விநாயகராாக நின்ற கோலத்தில் வன்னிமரத்தடியில் மேடையில் வீற்றிருக்கிறார். மக்கள் தங்கள் தோஷம் நீங்க நெய்விளக்கேற்றி வழிபடுவதைக் காணலாம். !

20. ஒரு செ.மீட்டர் உயரமுள்ள விநாயகர் - இலுப்பைக் குடி

இலுப்பைக்குடி என்ற ஊரில் உள்ளது. ஸ்ரீ சுயம்பிரகாத ஈசர் கோயில். இக்கோயில் தூண் ஒன்றில் உள்ள விநாயகர் திருவுருவம் ஒரு செமீ உயரம்தான். ஆம், இவரை அர்ச்சகர்களது உதவியுடன் தான் நாம் தரிசிக்க இயலும்.

21. நான்குமுக விநாயகர் - வேளச்சேரி (சென்னை)

சென்னை, வேளச்சேரியில் உள்ள ஸ்ரீமத் சிதம்பரசுவாமி ஜீவசமாதி ஆலயம் உள்ளது. இங்கு மூன்று அடி உயரமுள்ள நான்கு திருமுகங்கள் கொண்ட விநாயகர் அருள் பாலிக்கின்றார்.

நான்முக விநாயகரை சதுர்முக விநாயகர் என்றும் அழைக்கின்றனர். இந்த சதுர்முக கணபதியை பாண்டி மணக்குள விநாயகர் கோயில் வெளிப்பிரகார சுவற்றில் காண முடிகிறது.

இவரை வழிபட்டால் மும்மூர்த்திகளின் அருள் கிடைக்கும் என்பது பக்தர்கள் நம்பிக்கை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

22. நாக கணபதி

வைணவத் திருக்கோயில்களில் பெருமாள் காளிங்க நர்த்தனம் செய்யும் திருவுருங்களைக் காணலாம். அதைப்போல, சர்ப்பத்தின் மீது நின்று நடனமாடும் விநாயகரை திருவான் மியூரில் மருந்தீஸ்வரர் கோயில் தூண் ஒன்றில் காணலாம்.

மேலும் ஐந்து தலை நாகம் குடைபிடித்த விநாயகர் நாகப்பட்டினத்திலும் பாபநாசத்திலும் காணலாம்.

23. சிம்ம வாகனத்தில் விநாயகர்

அசுரர்களை அழிக்க புறப்பட்ட கணேசருக்கு அன்னை பராசக்தி தன் பிள்ளைக்கு துணையாக சிம்ம வாகனத்தை அளித்தார். அப்படி சிம்ம வாகனத்தில் சித்தி-புத்தியுடன் வடசென்னை கச்சாலீஸ்வரர் திருத்தலத்தில் அருள் பாலிக்கிறார்.

மேலும் சிம்ம வாகனத்தில் அமர்ந்து அருள்பாலிக்கும் விநாயகரை திருவானைக் கோயில் அகிலாண்டேஸ்வரி கோயில் மற்றும் சேலம் கந்தகிரி, புதுக்கோட்டை ராஜ ராஜேஸ்வரி கோயில்களிலும் காணலாம்.

24. நீர் உறிஞ்சும் விநாயகர் - திருமணிக்கூடம்

சீர்காழிக்கு கிழக்கே திருமணிக் கூடம் என்ற வைணவத் திருத்தலத்தில் நாலாயிரத்தொரு விநாயருக்கு செய்யும் அபிஷேக நீர் வெளியே வராது. எனவே அவருக்கு நீர் உறிஞ்சும் பிள்ளையார் என்ற பெயர் ஏற்பட்டது.

25. ஒங்கார விநாயகர் - காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் பஞ்சகப்பேட்டை - திருவோண - காந்தன் தனி என்ற திருக்கோயில் கணபதி சிலையில் காது வைத்தால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy
ஓங்கார ஒலி ஒலிப்பதைக் கேட்கலாம். எனவே அவர் ஓங்கார விநாயகர் என்றழைக்கப்படுகிறார்.

26. **ஆறுமுக விநாயகர் (பல்முக விநாயகர்)**

பாண்டிச் சேரியில் உள்ள பிரசித்தி பெற்ற மணக்குள விநாயகர் ஆலயத்தில் ஆறு முகங்கள் கொண்ட விநாயகர் அருள் பாலிக்கிறார்.

27. **பெண்கள் மட்டும் வழிபடும் விநாயகர்**

கோவை அப்பனாயக்கன் பட்டியில் பெண் விநாயகர் கோயில் உள்ளது. இக்கோயிலில் உள்ள விநாயகரை பெண்கள் மட்டுமே வழிபடுகின்றனர்.

ஆண்கள் இக்கோயிலுக்குச் செல்வது கிடையாது.

28. **பெண் உருவில் விநாயகர் திருக்கோலம் - மதுரை**

மீனாட்சியம்மன் திருக்கோயில் மற்றும் சுசீந்திரம் தாணுமாலயன் திருக்கோயில் (கன்னியாகுமரி மாவட்டம்)

பிள்ளையாரை பலவடிவங்களில் தொழுகின்ற மரபினை இந்தப்பகுதியில் காண்கிறோம். பெண் வடிவில் விநாயகரை வழிபடுகின்ற மரபும் இருந்திருக்கிறது என்பதை, திருக்கோயில்களில் வடித்துள்ள பெண்வடிவ விநாயகர் சிலைகள் நிருபனம் செய்கின்றன. பெண்வடிவ விநாயகரை கணேசினி என்றும் கஜானனி என்றும் பெயரிட்டு வணங்குகின்றனர்.

மீனாட்சியம்மன் திருக்கோயில் சுந்தரேஸ்வரர் சன்னதி நுழைவாயிலில், வலப்புறத்தில் ஒரு தூணில் பெண்வடிவ விநாயகரைக் காணலாம். கால்கள் புலிக்கால்களாக அமைந்திருப்பதால் வியாக்ரபாத கணேசினி என அழைக்கப் படுகிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதைப்போல் சுசீந்திரம் தாணுமாலயன் கோயில் தூணிலும் நர்த்தனமாடும் பெண் விநாயர் உருவம் பொறிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். இரு கரங்களில் அபய, வரத முத்திரைகளைக் கொண்டு திகழ்கிறார்.

29) மூசிகம் மீது நடனமிடும் விநாயகர் - திருப்பூர்

விநாயகப் பெருமானின் பல விதமான திருக் கோலங்களில் நடனமாடும் திருக்கோலம் அற்புதமானதாகும். அவ்வாறு நடனமாடும் கோலத்திலிருக்கும் விநாயகரை நர்த்தனவிநாயகர், நடனவிநாயகர், நிருத்த விநாயகர் என்றெல்லாம் பெயரிட்டு வணங்கிவருகிறோம். நடனமாடும் கோலத்தில் விநாயகர் இருக்கும் சில திருத்தலங்களை நாம் நூலின் மற்ற பகுதியில் கண்டோம்.

பொதுவாக நடனமிடும் விநாயகர் ஒரு காலை தரையில் ஊன்றி நின்று மறுகாலைத் தூக்கி நடனமிடுவது போலத்தான் எல்லாக்கோயில்களிலும் காணலாம். ஆனால் திருப்பூரில் உள்ள பெரியநாயகி உடனுறை கைலாசநாதர் திருக்கோயிலில், சற்று அதிசயமாக, விநாயகரின் வாகனமான மூசிகத்தின் மீது ஒருகாலை ஊன்றி நின்று நடனமாடும் கோலத்தில் காட்சிதந்து அருள்கிறார்.

30) மூசிகவாகனத்தில் அமர்ந்த கோலம்

மதுரை மீனாட்சியம்மன் கோயில் தெற்குக் கோபுரத்தின் மேல் ஒரு பெண் தெய்வத்துடன் மூசிக வாகனத்தின் மீது பத்துக் கரங்களுடன் அமர்ந்து காட்சிதருவது அதிசயப் பிள்ளையார்களில் ஒன்று எனலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

12. ஐம்பெரும்சக்தி - விநாயகர்

பஞ்சபூதங்களின் மொத்த உருவம்தான் விநாயகப் பெருமான். ஆம் அவர் உடலின் ஒவ்வொரு பாகமும் ஒரு பெரும் சக்தியை உணர்த்தும். நிலம், நீர், காற்று, நெருப்பு மற்றும் ஆகாயம் ஆகியன ஐம்பெரும் சக்திகள். பஞ்சபூதங்களை நம்முன்னோர்கள் வணங்குவதற்குக் காரணம் அவை மனிதர்களால் அடக்கமுடியாத மாபெரும் சக்திகள் ஆகும். ஆக அத்தகைய ஐம்பெரும் சக்திகளையும் உள்ளடக்கிய விநாயகர், தன்னெரில்லாத் தலைவன், கணங்களுக்கெல்லாம் ஈசன் என்றெல்லாம் சொல்லுதல் மிகையாகாது.

நிலம் (பூமி) - விநாயகரின் மடித்து வைத்துள்ள ஒரு பாதம், பூமியைக் குறிப்பதாகும்.

நீர் - சரிந்த அவரின் தொந்தி, நீரைக் குறிக்கும்.

நெருப்பு - அவரது மார்பு, நெருப்பைக் குறிக்கும்.

காற்று - இரண்டு புருவங்களும் சேர்ந்த அரைவட்டம், காற்றைக் குறிக்கும்.

ஆகாயம் - இருபுருவங்களின் அரைவட்டம் நடுவில் வளைந்திருக்கும் கோடு, ஆகாயத்தைக் குறிக்கும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

13. விநாயகப் பெருமானின் அறுபடை வீடுகள்

முருகப்பெருமானுக்குரிய ஆறுபடை வீடுகள் மிகப் பிரசித்தி பெற்ற சைவத்திருத்தலங்கள். பழனி, பழமுதிர்ச்சோலை, திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், சுவாமி மலை, திருத்தணி ஆகிய ஆறு முருகப்பெருமான் திருக்கோயில்களே அவை.

அதைப் போலவே விக்னம் களையும் விநாயகப் பெருமானுக்கும் ஆறுபடை வீடுகள் உண்டு. அவை 1) திருவண்ணாமலை 2) விருத்தாச்சலம் 3) திருக்கடவூர் 4) மதுரை 5) பிள்ளையார்பட்டி 6) திருநாரையூர் ஆகியன.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

14. ஐங்கரன் உணர்த்தும் அரிய உண்மைகள்

விநாயகப் பெருமான், துதிக்கையும் சேர்த்து ஐந்து கரங்களையும் ஒரு தந்தத்தையும் யானை முகத்தையும் கொண்டு விளங்குகிறார். ஐந்து கரங்களும் ஐந்து உண்மைகளை உணர்த்துவதாக அமைந்துள்ளன.

ஐங்கரனின் ஒருகரம் பாசத்தை ஏந்தியுள்ளது. எனவே இது படைத்தலைக் குறிக்கிறது. ஆகையால் விநாயகர் பிரம்மாவாகிறார்.

ஐங்கரனின் ஒரு கை, தந்தம் ஏந்திய கை, இது காத்தலைக் குறிக்கிறது. எனவே கஜானன் மகா விஷ்ணு ஆகிறார்.

விநாயகரின் மற்றொருகை அங்குசம் ஏந்தியுள்ளது. அது அழித்தலைக் குறிக்கிறது. எனவே அவர் ருத்திரனாகிறார்.

வேழ முகத்தானின் மற்றொரு கை மோதகம் ஏந்தியுள்ளது. அது அருளைக் குறிக்கிறது. எனவே விநாயகர் கருணை வடிவமான பராசக்தியுமாகவும் இருக்கிறார். தும்பிக்கை - மறைத்தலைக் குறிக்கிறது. எனவே சர்வ சக்திபடைத்த பரமேஸ்வரராகவும் இருக்கிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

15. விநாயகர் விரதங்கள்

வெள்ளி - வைகாசி வளர்பிறை வெள்ளிக்கிழமை துவங்கி, தொடர்ந்து 52 வெள்ளிக் கிழமைகளில் அனுஷ்டிக்கும் விரதம் இவ்விரதத்தால் ஆயுள் பலம் அதிகரிக்கும்.

செவ்வாய் - தை அல்லது ஆடி முதல் செவ்வாய் தொடங்கி, 52 வாரங்கள் அனுஷ்டிக்கும் விரதம். இவ்விரதத்தால் செல்வம் பெருகும்.

சதுர்த்திவிரதம் -ஆவணி வளர்பிறைசதுர்த்தியில் தொடங்கி, அடுத்த ஆண்டு புரட்டாசி வளர்பிறை சதுர்த்தி வரை தொடர்ந்து அனுஷ்டிப்பது. இந்த விரதத்தால் செய்யும் தொழில் விருத்தியாகும். தொழிலில் வளர்ச்சி ஏற்படும்.

பிள்ளையார் நோன்பு -(குமாரசஷ்டி விரதம்) கார்த்திகை தேய்பிறை பிரதமை திதிமுதல் மார்கழி வளர்பிறை சஷ்டி வரை 21 நாட்கள் அனுஷ்டிப்பது. இந்த விரதத்தால் தைரியம் அதிகரிக்கும்.

சங்கடஹர சதுர்த்தி - மாசி தேய்பிறை சதுர்த்தி துவங்கி, ஒரு ஆண்டில் ஒவ்வொரு தேய்பிறை சதுர்த்தியிலும் அனுஷ்டிப்பது. எப்படிப்பட்ட துன்பமும் இவ்விரத்தால் விலகி விடும்.

தை வெள்ளி விரதம் - தை மாதம் செல்வ விருத்திக்காக எல்லா வெள்ளிக் கிழமைகளிலும் பெண்கள் மட்டும் அனுஷ்டிக்க வேண்டடிய விரதம். இவ்விரதத்தால் மாங்கல்ய பாக்கியம் கிடைக்கும்.

In Public Domain, Digitization by Muthulakshmi Research Academy

விநாயகர் நவராத்திரி சதுர்த்தியன்று தொடங்கி தொடர்ந்து ஒன்பது நாள் இரவு 8 மணிக்கு திருவிளக்கு ஏற்றி அருகம்புல் மாலை அணிவித்து வணங்க வேண்டும். கன்னிப் பெண்களுக்கு சிறந்த வரன் அமைய ஏற்ற விரதம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

16. விக்னம் களையும் விநாயகர்

விக்னம் என்றால் தடைகள் அல்லது இடையூறுகள் எனலாம். எந்த ஒரு செயலையும் நாம் செய்ய ஆரம்பிக்கும் முன் விநாயகரை வணங்கி அவருடைய அருளை வேண்டுகிறோம். கணபதியே ஓங்கார ஸ்வரூபி. அவர் விக்னங்களை அகற்றுபவர். குழந்தை முதல் முதியோர் வரை அவரை வணங்கி எல்லா இடையூறுக்களையும் களைய பிரார்த்திக்கின்றனர்.

லலிதா ஸஹஸ்ர நாமத்தில் மஹா கணேச நிர்பிண்ண விக்னயந்த்ர ப்ரஸர்ஷிதா என்ற நாமம் வருகிறது. அதாவது தேவி விண்டாசுரனை வதம் செய்த போது விநாயகர் பேருதவி செய்தார் என்று பொருள். வியாகர் தனது விநாயக யந்திரத்தால் அசுரனும் அவனுடைய சகாக்களும் விடுத்த அத்தனை பாணங்களையும் வீழ்த்தி, தேவியை வெற்றிபெறச் செய்தார். இதனால் தேவி மகிழ்ச்சி அடைந்தாள். தடைகளைப் போக்கி நம்மை காத்து அருளுபவர் என்பது இதனால் தெரிகிறது.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

17. கரன்சி நோட்டில் கணபதி

மலேசியாவில் பிள்ளையார் படம் போட்ட 20 மலேஷிய டாலர் மதிப்புள்ள கரன்சி நோட்டுகளை அந்நாட்டில் பலரும் நன்றியுணர்வோடு பாதுகாத்து வருகின்றனர். ஏனென்றால் சில ஆண்டுகளுக்கு முன்னர் அங்கு பணவீக்கம் ஏற்பட்டு, அந்நாட்டு கரன்சியின் மதிப்பு சரியத் தொடங்கியது. அப்போது மலேசிய அரசுக்கு பிள்ளையார் ஞாபகம் வந்தது. ஆம் விக்னங்களை களைபவரல்லவா விநாயகர். எனவே கரன்சி நோட்டில் பிள்ளையார் படத்தை அச்சிட்டனர். வினைதீர்த்தார் விநாயகர்

18. வெளிநாடுகளில் விநாயகர் சிலைகள்

In Public domain: Digitization Muthulakshmi Research Academy

தமிழகத்தில் தெருவுக்குத் தெரு விநாயகர் கோயில்கள் நிறைந்து விளங்குவது அனைவரும் அறிந்த ஒன்று. விநாயகருக்கு பூசைகளும் சிறப்பு வழிபாடுகளும் விழாக்களும் மகிழ்ச்சியாகக் கொண்டாடுகிறார்கள்.

இந்தியர்கள் கல்வி, விஞ்ஞானம், தொழில் நுணுக்கம், கணிணி மென்பொருள், கணிணி திடப்பொருள் என பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குவதால், உலகின் பல்வேறு நாடுகளில் வேலை செய்கிறார்கள்; பலர் அங்கேயே தங்கி வாழ்கிறார்கள்.அவ்வாறு அயல்நாட்டில் வாழும் இந்தியர் அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, ஆஸ்திரேலியா மற்றும் அரேபிய நாடுகளில் அதிகமாக வாழ்கிறார்கள். அங்கு வாழும் நம் இந்திய மக்கள், நம் கலாச்சாரம் பண்பாடு மறக்காமல் நம் சமயங்களையும் வழிபாடுகளையும் போற்றி, இந்திய நாட்டில் வழிபடும் விநாயகர், முருகர், சிவன், கிருஷ்ணன் போன்ற தெய்வங்களை அங்கே கோயில் கட்டி வழிபடுகின்றனர்.

இதைப்போல ஸ்பெயின் நாட்டிலுள்ள லலல்டுரோ (Lladro) என்ற நிறுவனம் மிக உயர்தர பீங்கானில் கணேசர் சிலைகளை வடிவமைத்து விற்பனை செய்தனர். ஆம் 2009 ஆம் ஆண்டு வரை நான்கு வகையான விநாயகர் சிலைகளை வடிவமைத்து விற்பனை செய்தனர். இந்த வரிசையில் நான்காவதாக, 2009 ஆம் ஆண்டு, "இசைக்கணேசர்" என்ற வரிசையில் மிருதங்கம் வாசிப்பது போலவும், புல்லாங்குழல் வாசிப்பது போலவும், வீணை வாசிப்பது போலவும் மற்றும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy
பன்சூரி (Bansuri Ganesh) வாசிக்கும் கணேசர் சிலையும் விற்பனை செய்தனர். 2009 ஆம் ஆண்டில் செய்த மிருதங்க விநாயகர் சிலை ஒன்றின் விலை ரூ.98,500.- ஆகும். இசைவரிசை விநாயகர் சிலைகளில் இதுவே இறுதியாகும் என்று அந்த நிறுவனம் கூறியிருக்கிறது.

இதுதவிர உலகில் பல்வேறு நாடுகளின் மக்கள் விநாயகரை வழிபட்டு வந்தனர் என்பது பல்வேறு நாடுகளின் விநாயகர் சிலைகள் / ஓவியங்கள் பாண்டிச்சேரி மணக்குள விநாயகர் திருக்கோயிலில் வைக்கப்பட்டுள்ளதால் அறிகிறோம். உருவத்தில் சிறுசிறு மாற்றங்கள் கொண்டு அச்சிலைகளும், ஓவியங்களும் விளங்குகின்றன. குறிப்பாக, சீனா, ஜப்பான், தாய்லாந்து ஆகிய நாடுகளில் வழிபடுகிற விநாயகரைக் காணலாம். இதிலிருந்து விநாயகர் உலக நாடுகளின் தெய்வமாக விளங்குகிறார் என்பது தெளிவாகிறது.

In Public domain: Digitization Muthulakshmi Research Academy

19. விநாயகர் பெயர்க் காரணங்கள்

ஒரு மனிதனை மற்றொரு மனிதன் மனித நேயத்துடன் பார்க்க சமயம் உதவுகிறது. மக்களை நல்வழியில் நடத்த சமயம் உதவுகின்றது. யாரும் தம்மை பார்க்காத இடத்திலிருந்து தீச்செயல் செய்ய முற்படும் போது, எங்கும் இருக்கும் இறைவன் தன்னை பார்க்கிறார் என்ற எண்ணம் வரும்போது ஒருவன் தவறு செய்வதை தவிர்க்கிறான். இதனை சமுதாய இயல் அறிஞர்களும் (Sociologist) ''சமயமும் சமுதாயக் கட்டுப்பாடும்'' என்ற தலைப்பில் உடன்பட்டு எழுதியிருக்கிறார்கள். மிருகத்தனம் கொண்டவனை மனிதனாகவும், மனிதனை தெய்வமாகவும் சமயம் மாற்றுகிறது என்று கூறுகிறார் விவேகானந்தர்.

நாம் விநாயகர் பொருமானின் பெயர்களை கூர்ந்து நோக்கினால், தங்களை நல்வழிப்படுத்திக் கொள்ள விநாயகப் பெருமானுக்கு பல்வேறு கருத்தாழம் மிக்க பெயர்களைச் சூட்டி வழிபட்டு, தங்களையும் தங்களுக்குப் பின்வரும் நாளைய தலைமுறைக் குழந்தைகளையும் விநாயகப் பெருமானின் கருத்தாழம் மிக்க திருப்பெயர்களைச் சொல்லி வழிபடச் செய்து நல்வழிப்படுத்தியிருப்பது உள்ளங்கை நெல்லி க்கனியாக விளங்கும்.

- பொய் சொல்லாத விநாயகர்
- பொய்யாமொழி விநாயகர்
- வெள்ளை விநாயகர்
- வெற்றி விநாயகர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

- வீர விநாயகர்
- ஓங்கார விநாயகர்
- சக்தி விநாயகர்
- தாயினும் நல்ல விநாயகர்
- வித்யா விநாயகர்
- கண்திருஷ்டி விநாயகர்
- வேத விநாயகர்
- மங்கள விநாயகர்
- கல்யாண விநாயகர்
- நர்த்தன விநாயகர்
- தியான விநாயகர்
- சிற்ப விநாயகர்
- சிம்ம விநாயகர்
- சுந்தர விநாயகர்
- அன்பு விநாயகர்

விநாயகரின் பெயர்கள் சிலவற்றை மட்டுமே மேலே குறிப்பிட்டுள்ளோம். இன்னும் பல விநாயகர் பெயர்கள். அது போல கருத்தாழம் மிக்கவையாக, மக்களை நல்வழிப்படுத்தும் நோக்கில் உள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

20. விநாயகர் சதுர்த்தி விழா

விநாயகர் பிறந்தது ஆவணி மாதம் பூர்வபட்ச சதுர்த்தி, விசாக நட்சத்திரம் நாள். இந்த நாளை விநாயகர் சதுர்த்தியாக நாடெங்கிலும் சிறப்புறக் கொண்டாடி வருகிறோம். எல்லா மாநிலங்களிலும் விநாயகர் சதுர்த்தி சிறப்பாகக் கொண்டாடினாலும், விநாயகர் சதுர்த்தியை மிக மிக சிறப்பாகக் கொண்டாடும் மாநிலம் மகாராஷ்டரா மாநிலம் ஆகும். ஆம். எப்படி மேற்கு வங்காளம் காளி பூசையைச் சிறப்பாகக் கொண்டாடுகிறதோ, எப்படி ஒரிஸ்ஸா மாநிலம் பூரி இரத யாத்திரையை சிறப்புறக் கொண்டாடு கிறதோ அதைப்போல் மிக மிக சிறப்பாக விநாயகர் சதுர்த்தியைக் கொண்டாடும் மாநிலம் மகாராஷ்டிரா மாநிலம்.

இவ்வாறு மாகாராஷ்டிரா மாநிலம் சிறப்புற விநாயகர் சதுர்த்தியைக் கொண்டாட வரலாற்றுப் பின்னனியும் இருக்கிறது. இம்மாநிலத்தின் மிகச் சிறந்த மன்னர் சத்ரபதி சிவாஜி. அவர் காலத்தில் இவ்விழா மிகமிக சிறப்புறக் கொண்டாடப்பட்டது. இருப்பினும் காலப் போக்கில் வேற்று நாட்டவர்கள் இம்மாநிலத்தை ஆக்கிரமித்து ஆட்சிசெய்த நிலையில், அத்தனைச் சிறப்புற இவ்விழா கொண்டாடப்படவில்லை. இருப்பினும், பின்னாளில் 1893ல் பாலகங்காதர திலகர் இந்த விநாயகர் சதுர்த்தி விழாவை மக்கள் அனைவரையும் ஒற்றுமையாக்கி, அந்நியரை எதிர்த்துப் போராடும் ஒரு கருவியாக்கினார். காரணம் விநாயகரை வழிபடுவதில் இனம், மொழி, மாநிலம் என்ற பாகுபாடே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy
இல்லாமல் அனைவரும் ஒன்றாகக் கொண்டாடிய ஒரு ஒப்பற்றத் திருவிழா விநாயகர் சதுர்த்தி ஆகும். இத்தகைய மத நல்லினக்கச் சூழலை, மதிநுட்பத்தால் நாட்டின் சுதந்திரப் போராட்டத்தின் ஒரு அங்கமாக விநாயகர் சதுர்த்தி பொண்டாட்டத்தை அறிவித்து இவ்விழாவை எல்லா மாநில மக்களும் ஒற்றுமையாகச் சேர்ந்து மிகமிக சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்வித்தார். ஆக மாநிலங்கள் ஒற்றுமை உருவாக்கும் சின்னமாக இவ்விழா அமைந்தது.

பத்து நாட்களுக்குக் கொண்டாடப்படும் விநாயகர் சதுர்த்தி விழாவின் போது, மிகப்பெரிய விநாயகர் சிலையிலிருந்து சிறிய அளவிலான சிலைகளை ஆங்காங்கே தெருவீதிகளின் முக்கிய மையப் பகுதியில் அலங்கரித்த பந்தல்களில் அமைத்து., தினந்தோறும் பூசைகள் நடத்தி மகிழ்வர். பத்தாம் நாளில் வாத்திய இசைகள் முழுங்க, ஊர்வலமாக விநாயகர் சிலைகளை ஊர்திகளில் வைத்து எடுத்துச் சென்று, கடல்களிலும், ஏரிகளிலும், குளங்களிலும், ஆறுகளிலும் மூழ்கச் செய்கின்றனர்.

தொலைக்காட்சி மற்றும் செய்தித்தாள்கள், கணிணி மயம் காரணமாக இன்று ஒவ்வொறு மாநிலத்திலும் விநாயகர் சதுர்த்தி விழாவின் போது போட்டி போட்டுக் கொண்டு பெரிய பெரிய சிலைகளை வடிவமைத்து, சிறப்புற அலங்கரித்து வணங்கி மகிழ்ந்து போகிறார்கள் மக்கள்.

இனி இவ்விழாவின்போது, விநாயகரை எப்படி தமிழகத்தில் வணங்குகிறார்கள் என்று காண்போம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விநாயகர் சதுர்த்தியன்று அதிகாலையில் எல்லோரும் எழுந்து குளித்து முடித்து, வீட்டை சுத்தம் செய்து முடித்ததும் வாழைக்கன்று வாசலில் கட்டி, மாவிலைத் தோரணம், தென்னைக்கீற்றுத் தோரணம் எல்லாம் வாயிலில் கட்டிமுடிப்பார். பின்னர் அங்காடி சென்று, களிமண்ணில் செய்த பிள்ளையாரை வாங்கி வருவார்கள். அப்பிள்ளையாரை, சுத்தம் செய்து அலங்கரிக்கப்பட்ட பூசையறையில் அல்லது வீட்டின் ஒரு அறையில் அல்லது வீட்டின் கூடத்தில் விநாயகரை ஒரு சிறிய முக்காலியிலோ அல்லது சற்று உயரமான மரப்பலகையிலோ வைப்பார்கள். அச்சிலையின் மீது விநாயகர் சதுர்த்திக்காக பிரத்யேகமாகக் கட்டிய எருக்கு மாலை அணிவிப்பார்கள். பின்னர் சந்தனம், குங்குமம் குழைத்து விநாயகர் உடல் முழுதும் பொட்டு வைத்து அலங்கரிப்பர்.

அவருக்கு படையலில் வைப்பதற்கான உணவு வகைகளை தயாரிப்பார்கள். அவை, மோதகம், கொழுக்கட்டை, சுண்டல் இவை தவிர வடை, பொரி உருண்டை, அப்பம், எள்ளுருண்டை, பாயசம், அவல், பொரி ஆகியவற்றையும் படையலில் வைப்பர். மேலும் வாழை, கொய்யா, நாவல், பலா, ஆப்பிள், மாதுளை, விளாம்பழம் போன்ற பழவகைகளையும் இயன்ற வரையில் படையலில் வைத்து வழிபடுகின்றனர்.

தற்போது மத நல்லிணக்கம் எல்லா மாநிலங்களில் இருந்தாலும், சில சமுதாய விஷமிகள் கெட்ட எண்ணத்துடன் இரு மதத்தினர் இடையே கலவரம் ஏற்படுத்தி விடுவதை அறிந்து, அரசாங்கம் இவ்விழாவின் போது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பதட்டமான இடங்களைக் கண்டறிந்து, நகரத்தின் அப்பகுதியில் மிகுந்த காவல்துறை பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்கின்றனர். குறிப்பாக விநாயகர் ஊர்வலமாக எடுத்துச் செல்லும் போது மிகமிக அதிக அளவில் பாதுகாப்புகள் கொடுக்கப்படுகிறது.

எது எப்படி இருந்தாலும், நாளுக்கு நாள் இந்த விநாயகர் சதுர்த்தி விழாவின் போது விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக, அற்புதமான மிகப்பெரிய அளவிலான விநாயகர் சிலைகளை எல்லா மாநிலத்திலும் வடிவமைத்து வணங்கி மகிழ்கின்றனர் என்றால் அது மிகையாகாது.

சென்ற ஆண்டு விநாயகர் சதுர்த்தி விழாவின் போது நடந்த நிகழ்சிகளில் சிலவற்றை இங்கு காண்போம்.

திருச்சி மாவட்டத்தில் மாநகரப் பகுதியில் 149 சிலைகளும், புறநகர் பகுதிகளில் 418 சிலைகளும் சதுர்த்தி விழாவின் போது ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டன. மாநகரப் பகுதிகளில் மட்டும் சுமார் ஆயிரம் காவலர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். செப்டம்பர் 13ஆம் நாள் இரவு மாநகரச் சிலைகள் காவிரி ஆற்றில் கரைக்கப்பட்டன.

திண்டுக்கல் பாறைப்பட்டி காளிகோயிலில் வைக்கப்படும் விநாயகர் சிலையை பேகம்பூர் பள்ளி வாசல் வழியே கொண்டு செல்ல எவ்வித எதிர்ப்புமின்றி விநாயகர் சிலை ஊர்வலம் சென்றதோடு, ஊர்வலத்தில் சென்ற முக்கிய பிரமுகர்களுக்கு பேகப்பூர் பள்ளி வாசல் நிர்வாகிகள் சால்வை அணிவித்து வரவேற்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பழனியில் இந்து மக்கள் கட்சி சார்பில் நடந்த விநாயகர் சதுர்த்தி ஊர்வலத்தின் போது, பழனி கோட்டை அமீர் சாகுல் அமீது தலைமையில் முஸ்லிம்கள் வரவேற்பு கொடுத்தனர்.

கோவையில் விநாயகர் சிலைவைக்க சில இடங்களில் ஒரு தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்ததால் மோதல் ஏற்பட்டது. மதுக்கரையில் இந்து முன்னணி தொண்டரின் கடையை அடித்து நொறுக்கியது. இதனால் பதட்டம் ஏற்பட்டு காவலர் குவிக்கப்பட்டனர். இதேபோல் குனிய முத்தூர் குறிஞ்சி நகரில், பொதுமக்கள் சார்பில் விநாயகர் சிலை வைக்கப்பட்டது. இதற்கு ஒரு தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்தனர். காவலர் அச்சிலையை அப்புறப்படுத்தினர். ஆனால் அன்று இரவே மீண்டும் சிலை வைக்கப்பட்டது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஒரு தரப்பினர் அங்கு குவிந்தனர். இதனால் இருதரப்பினருக்கும் மோதல் ஏற்பட்டது. விநாயகர் சிலைவைத்த நபர்களை காவலர்கள் பிடித்துச் சென்றனர். இதனால் அங்கு இருதரப்பினருக்கும் காவலருடன் மோதல் ஏற்பட்டது. கோவை நகர போலீஸ் ஆனையரால் நிலைமை கட்டுக்குள் வந்தது.

பிள்ளையார் பட்டியில், பத்துநாள் விழா செப்டம்பர் 2ஆம் நாள் கொடியேற்றத்துடன் துடங்கி 11ஆம் தேதி வரை சிறப்பாக நடைபெற்றது. தினமும் காலை வெள்ளி வாகனத்திலும் இரவு மூசிய, சிம்ம, பூத, கமல, ரிஷப, யானை, மயில் ஆகிய வாகனங்களிலும் சுவாமி வீதி உலா வந்தார். விநாயகருக்கு இச்சதுர்த்தி விழாவின் 9ஆவது நாள் மட்டுமே

In Public domain : Digitization Muthulakshmi Research Academy

சந்தனகாப்பு அலங்காரம் செய்யப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

விநாயகர் சதுர்த்தி நாகை நீலாயதாட்சி அம்மன் கோயிலில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அங்கு முப்பத்திரண்டு அடி விசுவரூப விநாயகர் (நின்றகோலம்) அமைத்து விழா கொண்டாடினர்.

கரூர் மாவட்டத்தில் 126 இடங்களில் விநாயகருக்கு சிலை வைத்து விநாயகர் சதுர்த்தி விழா கொண்டாடப் பட்டது. இவையனைத்தும் காவிரி ஆற்றில் பல பகுதிகளில் கரூர், வாங்கல், மாயனூர், திருமுக்கூடலூர், குளித்தலை ஆகிய இடங்களில் கரைக்கப்பட்டன. குளித்தலை பகுதியில் மட்டும் 51 இடங்களில் சிலைகள் வைக்கப்பட்டன.

சென்னையில் விழா வழக்கம் போல் பலத்த காவல் துறையினர் பாதுகாப்போடு சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. சுமார் 600 இடங்களில் சென்னை மாநகரில் சிலைகள் வைக்கப்பட்டு பத்து நாள் விழாவாகக் கொண்டாடப்பட்டது. சிலைகள் காசிமேடு, பட்டினப்பாக்கம், நீலாங்கரை, திருவான்மியூர், எண்ணூர் ஆகிய ஐந்து இடங்களில் மட்டுமே கடலில் கரைக்கப்பட் வேண்டும் என்று காவல் துறை உத்தரவு பிறப்பித்திருந்தது. சுற்றுப்புறச் சூழலுக்கு மாசுபடாத வரையில் சிலைகள் அமைக்க காவல்துறை உத்தரவு பிறப்பித்தனர் இதனால் சென்ற ஆண்டில் கிழங்குமாவில் விநாயகர் சிலைகள் செய்யப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. சென்னை அண்ணா சாலையில் உள்ள பூம்புகார் கைவினைப்பொருள் விற்பனைக் கூடத்தில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விதவிதமான புதுவகை விநாயகர் சிலைகள் வைக்கப் பட்டிருந்தன. யானை மீது அமர்ந்திருந்த விநாயகர் சிலை ரூபாய் மூன்றாயிரம் ஆகும். சாய்ந்து உட்கார்ந்து இருக்கும் விநாயகர் சிலை ரூபாய் ஆயிரத்து எண்ணூறு ஆகும். புதிதுபுதிதாக வடிவமைக்கும் கலைஞர்களை பாராட்டு வதோடு இச்சிலைகள் கண்டு மிக்க மகிழ்ந்தனர் சென்னை வாசிகள்.

வெளிநாடுகளில் விநாயகர் சதுர்த்தி விழா

கனடாவின் டொரான்டோவில் உள்ளது வரசித்தி விநாயகர் கோயில் இங்கு ஆண்டு தோறும் விநாயகர் சதுர்த்தி விழா சிறப்பாக நடைபெறுகிறது. சென்ற ஆண்டும் இவ்விழா பத்து நாட்கள் சிறப்புறக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் விநாயகப் பெருமான் நாள்தோறும் பல்வேறு அலங்காராங்களில் தோன்றி பக்தர்களுக்கு அருள்பாலித்தார். ஓங்கார வடிவம், மயூர வாகனம், சூரிய பிரபை, திருஊஞ்சல் உற்சவம், முத்துட்டு மணவரல், கைலாச வாகனம், தண்டிகை, கப்பல் வாகனம், அனந்த சயனம் என்பன அவை. தமிழகத்திற்கு உரிய இசைக்கருவிகளான நாதஸ்வரம், தவில் ஆகிய இசை வாத்தியங்கள் முழங்க விநாயகர் திருத்தேரில் வீதிகளில் உலாவந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

இந்து ஸ்வயம்சேவக் சங்க் என்ற அமைப்பு அமெரிக்காவில் இநது திருவிழாக்களை கொண்டாடி வருகிறது.

இங்கிலாந்தில் இரண்டாயிரத்து ஐந்திலிருந்து லண்டனில் உள்ள விஸ்வ இந்து கோயிலில் அங்கு வாழும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்தியர்கள் அமைப்பு - இந்து பாரம்பரிய மற்றும் கலாச்சார சங்கம் மூலமாக விநாயகர் சதுர்த்தி விழா கொண்டாடப் படுகிறது. விழாவின் பின்னர் விநாயகர் சிலைகள் தேம்ஸ் நதியில் கரையில் கரைக்கப்படுகிறது.

மொரீஷியஸ் நாட்டில் பிவாஜு குடும்பத்தாரால் 1896லிருந்து, விநாயகர் சதுர்த்தி விழா ஹென்றியெட்டாவில் உள்ள கேஸ்கேடஸ் பள்ளத்தாக்கில் கொண்டாடப்பட்டு வருகிறது. மொரீஷியஸ் அரசாங்கம் இத்திருவிழா நாளை பொது அரசாங்க விடுமுறை நாளாக அறிவித்திருக்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

21. வித்தியாசமான வழிபாட்டு முறைகள்

(1) திருவலஞ்சுழி திருக்கோயில்

பொதுவாக பெரிய சிவாலங்களில் மூலவராக சிவபெருமானும், பரிவார மூர்த்திகளாக விநாயகர் பிரம்மா, மகா விஷ்ணு, தட்சணாமூர்த்தி உள்ளிட்ட பிற தெய்வங்களும் திகழ்வார்கள். அங்கு, சிவபெருமானுக்கு மட்டுமே பிரமோற்சவம் என்னும் பெருவிழா நடைபெறுவது வழக்கம். விதிவிலக்காக, திருவலஞ்சுழி என்ற பாடல் பெற்ற சிவதலத்தில் விநாயகருக்குத்தான் பத்து நாட்கள் பிரமோற்சவம் நடைபெறுகிறது.

(2) சுசீந்தரம் ஆஞ்சநேயர் கோயில்

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள சுசீந்தரம் ஆஞ்சநேயர் கோயிலில் முதல் வழிபாடு தட்சணா மூர்த்திக்கும் கடைசி வழிபாடுதான் விநாயகப் பெருமானுக்கும் செய்யப்படுகிறது. முதல் வணக்கம் விநாயகருக்கு என்ற முறை மாறியிருக்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

22. எலியின் மீது யானை தத்துவம் என்ன?

யானை வடிவம் கொண்ட விநாயகர் ஒரு எலியின் மீது அமரமுடியும் என்ற சந்தேகம் எழுவது இயல்பே!

ஒரு பெரிய உருவம் ஒரு சிறிய பிராணியின் மீது ஏறி அமர்கிறது என்றல்ல பொருள். அணுவுக்கு அணுவாக பெரிதுக்கும் பெரிதானவனாக இறைவன் இருக்கிறார் என்பதே இதன் தத்துவம். இறைவனை நம்மால் புரிந்துகொள்ள முடியாது என்பதையும் இது உணர்த்துகிறது.

இறைவனை இன்னாரென்று வரையறுத்துக் கூற முடியாது. அவரது குணநலன்களை அறிந்து கொள்ள முடியாது. எலியின் மீது யானை ஏறுவது என்பது எப்படி கற்பனைக்குக் கூட சாத்தியமில்லையோ அதுபோல் இறைவனும் நம் கற்பனையெல்லாம் கடந்தவன் என்பதே இதன் தத்துவம்.

எப்படி இந்த மூசிகம் விநாயகருக்கு வாகனமானது? ஒவ்வொரு இறைவனுக்கும் ஒரு வாகனம் உண்டென்பது அனைவரும் அறிந்ததே. முருகனுக்கு மயில்வாகனம், சிவனுக்கு பசுவாகனம், பெருமாளுக்கு கருடவாகனம், காளிக்கு சிம்மவாகனம், சனிஸ்வரனுக்கு காகம் வாகனம். விநாயகருக்கு மூசிக வாகனம் துவபாரர் யுகத்தில் இருந்தது என்றும் மேலும் மற்ற யுகங்களில் வேறுவாகனங்கள் விநாயருக்கு உண்டு என்றும் புராணங்கள் கூறுகிறது.

விநாயகருக்கு கிருத்த யுகத்தில் சிம்மவாகனம், திரீத்த யுகத்தில் மயில் வாகனம், கலியுகத்தில் குதிரைவாகனம் என்று கூறும் புராணங்கள், மேலும் அவருக்கு ரிஷபம் மற்றும் யானை வாகனமும் உண்டு என்று கூறுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

23. விநாயகர் வழிபாடும் பயனும்

எந்த நாளில், என்ன பூசைப் பொருட்களைக் கொண்டு வணங்கினால், என்னென்ன பலன்கள் கிடைக்கும் என்பதை கீழே காணலாம்.

வெள்ளிக்கிழமை அருகம்புல், தேங்காய் ஆகியவற்றைக் கொண்டு கணபதி ஹோமம் செய்தால் பெருஞ்செல்வமும் நீண்ட ஆயுளும் வாய்க்கும்.

நாயுருவி கொண்டு கணபதி ஹோமம் செய்ய, கிரகங்களின் தீய தாக்கங்கள் விலகும்.

செந்தாமரையால் ஹோமம் செய்ய, பெரும் பொருள் சேரும்.

வெண்ணிறநீர்நொச்சி கொண்டு ஹோமம் செய்ய, உயர்வை பெறலாம்.

கெட்டி பதம் தயிரால் ஹோமம் செய்ய, வளம் பெருகும்.

நீலோற்பவ மலரால் ஹோமம் செய்ய, அனைத்து மக்களும் வசியமாவர்.

வெல்லம், வாழைப்பழம், பாயசம், நெய் கலந்த தேங்காய் ஆகியவற்றால் ஹோமம் செய்தால் எண்ணியவை திண்ணமாக நிறைவேறும்.

விநாயகரை செவ்வாய்க்கிழமைகளிலும் சண்டியை வெள்ளியிலும் வழிபட்டால் ராகு, கேது ஆகிய கிரகத்தின் தாக்கங்களில் இருந்து விடுபடலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

24. விநாயகர் திருக்கோலங்கள்

விக்னம் களையும் விநாயகப் பெருமானை பலவிதமான திருக்கோலங்களில் கண்டு மகிழ்கிறோம். மற்ற தெய்வத் திருவுருவங்கள் இத்தனை வகையான எழிற் கோலங்களில் பக்தர்களுக்கு காட்சியளிப்பதில்லை எனலாம். விதவிதமான திரு உருவ அமைப்புகள், விதவிதமான ஆடை ஆபரணங்கள் என்று எத்தனை சிறப்புடன் பற்பல வடிவங்களில் கணபதி நம் கண்களுக்கும் மனத்திற்கும் விருந்தளித்து நன்மை பல புரிகிறார். பற்பல வடிவங்களில் பக்தர்களுக்கு அருள்பாலிக்கும் உருவங்களை இப்போது காண்போம்.

1 பொதுவான திருக்கோலம்

நான்கு கைகள், தும்பிக்கையுடன் இடதுகால் மடித்து வலதுகால் குத்துக்காலிட்டு அமர்ந்த திருக்கோலம் தான் பொதுவாக இருக்கும் விநாயகப் பெருமான் திருக்கோலம். பெரும்பாலும் இந்தக்கோலமே எல்லாத் திருக்கோயில்களிலும் நாம் தரிசித்து வழிபடுகின்றோம்.

2 நர்த்தன திருக்கோலம்

நடனவிநாயகர், நர்த்தன விநாயகர் நிருத்ய கணபதி என்று அழைக்கப்படும். விநாயகர் இடதுகாலை ஊன்றி வலது காலைத் தூக்கி நடனமாடும் திருக்கோலத்தில் காட்சியளித்து அருள் பாலிக்கிறார். பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் திருக்கோயில், மயிலை கபாலீஸ்வரர் திருக்கோயில், வடபழனி வேங்கீஸ்வரர் திருக்கோயில், மதுரை மீனாட்சியம்மன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy
திருக்கோயில்களில் நர்த்தன விநாயகர் திருவுருவத்தைக் காணலாம். இதுபோன்ற நர்த்தன விநாயகரின் திருவுருவங்களை மேலும் பல திருத்தலங்களில் காண முடிகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

3 நின்ற திருக்கோலம்

ஒவ்வொரு இறைவன் இறைவிக்கு ஒவ்வொரு விதமான திருக்கோலம் உள்ளதைக் காண்கிறோம். சிதம்பரம் - சிவபெருமான் நடனமிடும் கோலம். திருமால் பாம்பணையில் பள்ளி கொள்ளும் திருக்கோலம். நின்ற சீர்நெடுமால் நிழற்குடையுடன் நிற்கும் திருக்கோலம் சிவபெருமான் - ருத்ர தாண்டவமாடும் கோலம். முருகப் பெருமான் வள்ளி தெய்வானையுடன் நின்ற திருக்கோலம். சரஸ்வதி வெள்ளைத் தாமரையில் வீணையுடன் வீற்றிருக்கும் திருக்கோலம். ஆனால் பொதுவாக அமர்ந்த கோலத்தில் இருக்கும் விநாயகர் பெருமானும் சில திருக்கோயில்களில் நின்ற கோலத்தில் காட்சி தருவதைக் கண்டு வணங்கமுடிகிறது. சூன் 2010ல் திருவாரூர் அருகில் கோயில் திருப்பணிக்கு பள்ளம் தோண்டிய போது பழமை வாய்ந்த பஞ்சலோக சிலைகள் கண்டெடுத்தனர். அதில் ஒரு அடி உயரத்தில் நின்ற கோலத்தில் உள்ள விநாயகர் சிலையும் ஒன்று. இந்தச் சிலைகள் 800 ஆண்டுகள் பழமை வாய்ந்தது என்கின்றனர் அகழ்வாராய்ச்சி அறிஞர்கள். திருச்சி அருகில் குளித்தலையில் உள்ள முற்றிலா முலையம்மை உடனுறை கடம்பவனேஸ்வரர் திருக்கோயில் சென்னை-புரசைவாக்கம் கங்காதீஸ்வரர் கோயில் வடபழனி வேங்கீஸ்வரர்கோயில்களில் விநாயகரின் நின்ற திருக்கோலம் காணலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

4 ஒரு துணைவியுடன் விநாயகர்

வரதகணபதி அமர்ந்த நிலையில் பொதுவான கோலத்தில் ஒரு துணைவியுடன் அருள்பாலிக்கிறார். மேலும், மகாகணபதி ஒரு மனையாளை இடது துடையில் அமர்த்தி இருப்பார். எட்டுக்கரங்களும் மூன்று கண்களும் கொண்டிருப்பார். அமர்ந்த நிலையில் உள்ள பொதுவான திருக்கோலம். சக்திகணபதியும், நான்கு கரங்களுடன் தனது சக்தியை துடையில் அமர்த்திய திருக்கோலத்தில் அருள் பாலிக்கிறார். ஆறு கரங்களுடன் தனது ஒரு மனைவியை இடது துடையில் அமர்த்திய திருக்கோலத்தில் அருள்புரிபவர் - உச்சிஷ்ட கணபதி.

5 இரு துணைகளுடன் விநாயகர்

சித்தி, புத்தி இருவரையும் இருதுடைகளில் அமர்த்தி பொதுவான அமர்ந்த கோலத்தில் காட்சியளிப்பவர் லட்சுமி கணபதி, எட்டுக்கரங்களுடன் காட்சியளிப்பவர்.

6. மூசிக வாகனம் மீது அமர்ந்த திருக்கோலம்

மூசிகம் குட்டியாக சிறியதாக காலடியில் இருப்பதான திருக்கோலம்தான் நாம் பொதுவாகக் காணும் திருக்கோலம். ஆனால், சிவபெருமான் காளை வாகனத்திலும், முருகப்பெருமான் மயில் வாகனத்திலும் அமர்ந்திருப்பது போல பெரிய அளவிலான மூசிக வாகனத்தில் பொதுவான அமர்ந்த திருக்கோலத்தில் அருள்பாலிக்கும் விநாயகர் விஜய கணபதி அவர் நான்கு கரங்களுடன் திகழ்கிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேலும் ஏகாசஷர கணபதி மூசிக வாகனத்தில் பத்மாசானத் திருக்கோலத்தில் அருள்பாலிக்கிறார். மூன்று கண்கள், பிறை நிலவு இத்திருக்கோலத்தின் முக்கிய அம்சங்கள்.

இதுதவிர, ஸ்ருஷ்டி கணபதியும் மூசிகத்தின் மேல் பொதுவான அமர்ந்த திருக்கோலத்தின் அருள்பாலிக்கிறார்.

7. இடஞ்சுழி விநாயகர், வலஞ்சுழி விநாயகர் :-

விநாயகரின் உருவங்கள் முப்பத்தி இரண்டு என்று சமயப் பெரியார்கள் கூறுகின்றனர். இவற்றில் இருவகை அதாவது, வலஞ்சுழி, இடஞ்சுழி விநாயகர் உருவங்களைக் காணலாம். இந்த முப்பத்திரண்டு திருவுருங்களில் பெரும்பாலான விநாயகத் திருவுருவங்களில் விநாயகப் பெருமானின் துதிக்கை இடஞ்சுழியாகவே அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

க்ஷிப்ரகணபதி, ஸ்ருஷ்டிகணபதி, ஏகதந்த கணபதி, ஹரித்ர கணபதி ஆகியன சில வலஞ்சுழி கணபதி உருவங்கள் ஆகும். எனினும் வலஞ்சுழி, இடஞ்சுழி உருவங்கள் நூற்றுக்கு நூறு சரியானதாகக் கொள்ள முடியவில்லை; காரணம் ஒரு பெயருள்ள திருவுருவங்களை ஒரு இடத்தில் வலஞ்சுழியாகவும் மற்றுமொரு இடத்தில் இடஞ்சுழியாகவும் சித்தரித்துக் காட்டுகின்றனர் சமயப் பெரியவர்கள். எது எவ்வாறாயினும் விநாயகர் நம் வினைகளைத் தீர்த்து அருள்புரிவார் என்பது நிச்சயம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

25. எண்களும் விநாயகரும்

1. 7- மதுரை - திருப்புவனம் தேங்காய்ப்பிள்ளையார். 7 தேங்காய்களை மாலையாக அணிவித்து 7 எலுமிச்சை வைத்து 108 முறை வலம் வந்து வழிபட்டால் ஆயுள் கூடும் என்கிறார்கள்.
2. 8 - அஷ்ட விநாயகர்கள் - புனே மகாராஷ்டிரா
3. 13 - தும்பிக்கை ஆழ்வார் - விநாயகர் பதின்மூன்றாவது ஆழ்வாராக மதுரை கள்ளழகர் சுந்தர்ராஜப் பெருமாள் திருத்தலத்தில் திகழ்கிறார். (12 ஆழ்வார்களே உள்ளனர் வைணவத்தில்).
4. 16 - கணபதி பதினாறு என்று ஒரு வழக்கு நடைமுறையில் உள்ளது.
5. 18 - பிள்ளையார் பட்டியில் விநாயகர் கோயிலில் விநாயக சதுர்த்தி அன்று 18 படி அரிசியில் ஒரே கொழுக்கட்டையாகச் செய்து படைக்கின்றனர். இதைப்போலவே, சிதம்பரம் நடராசப் பெருமான் கோயில், மதுரை மீனாட்சியம்மன் கோயில்களில் முக்குறுணிப் பிள்ளையாருக்கு 18படி அரிசிமாவில் மோதம் செய்து படைக்கின்றனர்.
6. 32 - விநாயகர் மூல உருவங்கள் - 32. 32 அடி விஸ்வரூப விநாயகர் நாகை நீலாயதாட்சி கோயிலில் 11/9/2010 அன்று விநாயகசதுர்த்தியில் உருவாக்கினர்.
7. 75 - 75 கிலோ கொழுக்கட்டை உச்சிப்பிள்ளையாருக்கு விநாயகர் சதுர்த்தி அன்று படைக்கப்பட்டது.
8. 86 - திருவாரூர் தியாகராஜர் கோயிலில் 86 விநாயகர் சிலைகள் உள்ளன.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

9. 100- தஞ்சை திருப்புறம்பியம் சாட்சிநாதர் சுவாமி கோயில் பிரளயம் காத்த விநாயருக்கு 100 லிட்டர் தேனாபிஷேகம் 11/9/2010 ல் விநாயகச்சதுர்த்தியன்று செய்யப்பட்டது.

10. 105 - கர்நாடகாவைச் சேர்ந்த விடுதலை தியாகிகள், சென்ற ஆண்டு (2010), 105வது ஆண்டு பிள்ளையார் விழா. விநாயகர் சதுர்த்தியன்று கொண்டாடினர். 1905ல் ஆங்கிலேய அரசை எதிர்த்து பிள்ளையார் விழா கொண்டாடியதை இந்திய வரலாறு தெரிவிக்கிறது.

11. 108 - பிள்ளையார்பட்டி கற்பக விநாயருக்கு அர்ச்சனைக்காக 108 மோதகங்கள் படைக்கப்படுகிறது.

108 - விநாயகர்கள் 108 - கோவை

12. 150 - விநாயகர் சதுர்த்தியன்று திருச்சி உச்சிப் பிள்ளையாருக்கும், மாணிக்க விநாயகருக்கும் சேர்த்து 150 கிலோ கொழுக்கட்டைகள் நைவேத்தியம் செய்யப் படுகிறது. (75 + 75 = 150)

13. 1500 - சிதம்பரம் - செழும் கழனிப்பிள்ளையார் 1500 ஆண்டுகள் பழமையானது

14. 4001 - சீர்காழியைச் சுற்றி பதினொரு வைணவத் திருத்தலங்கள் அமைந்துள்ளன. அதில் ஒன்று திருமணிக்கூடம். இங்கு சுயம்பு மூர்த்தியாக எழுந்தருளி அருள் பாலிக்கிறார் விநாயகர். இவர் நாலாயிரத்தொரு விநாயகர் என்றழைக்கப்படுகிறார் நாலயிர திவ்விய பிரபந்தம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

15. 11 இலட்சம் கொழுக்கட்டைகள் : மத்தியபிரதேசம் கஜரானா என்கிற பிரசித்தி பெற்ற கோயிலில் பிரதானமாக உள்ள விநாயகருக்கு புதன்கிழமை தோறும் 11 இலட்சம் கொழுக்கட்டைகள் நைய்வேத்தியமாக படைக்கிறார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாகம் இரண்டு

(புராணக்கதைகள்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

1. இராவணன், ஆத்மலிங்கம், விநாயகர்

இராவணன் ஒரு அசுரனாக இருப்பினும் மிகச்சிறந்த சிவபக்தன், எனவே, அவன் சிவபெருமானை வேண்டி இலங்கையை அழிவிலிருந்து காப்பாற்ற கயிலைமலை சென்றான். இலங்கை எப்போதும் அழியாமல் இருக்க சிவனை வேண்டினான். சிவபெருமான் அவனிடம் ஆத்மலி ங்கத்தைக் கொடுத்து, கீழே எங்கும் வைக்காமல் கால்நடையாக நடந்து இலங்கைக்கு எடுத்துச் செல்லுமாறு பணித்தார். மேலும், தவறி எங்காவது சிவலிங்கத்தை கீழே வைத்துவிட்டால், பின்னர் அந்த லிங்கத்தை எடுக்க முடியாது என்று கூறி ஆத்மலிங்கத்தைக் கொடுத்து அனுப்பினார்.

இதைக்கண்டு அஞ்சிய தேவர்கள், ஆத்ம லிங்கத்தால் இராவணின் பலம் அதிகமாகிவிடும் என்றும் அவனை அழிக்கவே முடியாதென்றும் தோன்றியதால் விநாயகரை அணுகி உதவி வேண்டினர். கணேசர், இராவணனுடைய வயிறு அதிகத் தண்ணீரால் நிறையுமாறு செய்து, வயிற்றுப் பாரம் கொடுத்தார். எனவே இராவணன் சிறுநீர் கழிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டான். அப்போது, கணேசர் அவன்முன் சிறு பையனாகத் தோன்றி நின்றார். அப்போது இராவணன் அப்பையனிடம் லிங்கத்தைக் கொடுத்துவிட்டு சிறுநீர் கழிக்கச் செல்வதாகக் கூறியதைக் கேட்ட சிறுவன் இராவணனிடம், தான் மூன்று முறை இராவணனை அழைக்கப் போவதாகவும், அப்படி மும்முறை அழைத்தும் இராவணன் வந்து தன்னிடம் லிங்கத்தைத் திரும்பப் பெறாவிடில் லிங்கத்தைக் கீழே வைத்துவிட நேரிடும்

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

எனவும் கூறினான். இராவணன் அதற்கு ஒப்புக் கொண்டு சிறுநீர் கழிக்கச் சென்றுவிட்டான். அப்போது விநாயகர் வேண்டுமென்றே மும்முறை இராவணனைக் கூப்பிட்டார். அது அவன் காதில் விழவில்லை. எனவே லிங்கத்தை இராவணிடம் கூறி கீழே வைத்துவிட்டு பையன் சென்று விட்டான்.

திரும்பி வந்த இராவணன் திகைத்து, கீழே வைத்த லிங்கத்தை எடுக்க முற்பட்டான். தன் இருபது கரங்களின் முழுபலத்தை உபயோகப்படுத்தியும் லிங்கத்தை மேலே தூக்க முடியாமல் வருந்தினான். அப்படி பெயர்த்த பொழுது லி ங்கம் வளைந்து போனதேயொழிய பெயர்த்தெடுக்க முடியவில்லை. எனவே அந்த லிங்கம் மகாபலீஸ்வர் (மிகப்பலம் பொருந்திய ஈசன்) என்றும் கோக்கர்ணம் (கோ - பககர்ணம்) என்றும் பெயர் பெற்றது.

லிங்கத்தைக் கீழே வைத்துவிட்டுச் சென்ற பையனை துரத்தினான் இராவணன். அவனைப் பிடித்து தலையில் ஒரு குட்டும் வைத்தான். அப்போது விநாயகர் தோன்றி இராவணனுக்கு அருள்பாலித்தார். எனவே விநாயகர் தலையில் ஒருபுறம் குட்டுப்பட்ட இடம் தாழ்ந்து இருத்தலைக் காணலாம்.

இராவணன் குட்டியதும் விநாயகர் அவனுக்கு அருள் பாலித்ததால், இன்றும் தலையில் பக்தர்கள் குட்டி, விநாயகர் அருளை பெற வணங்குகிறோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

2. மகாபாரதம் எழுதிய விநாயகர்

வியாசமுனிவர் இமயமலையில் தவம் செய்து கொண்டிருந்தார். அவர்முன் பிரம்ம தேவன் தோன்றி, வியாச முனிவரை எல்லோருக்கும் பயனளிக்கக் கூடிய மகாபாரதம் எழுதும்படி கூறினார். அப்போது, மகாபாரதம் எழுத தான் தயாராக இருக்கிறேன்: ஆனால் பாடல்கள் மனதில் உருவாக்கிக்கொண்டு நானே எழுதுவது என்பது எளிதில்லை. எனவே எனக்கு ஒருவர் எழுத உதவி செய்தால் நலமாக இருக்கும் என்றார். அதைக்கேட்ட பிரம்ம தேவன் விநாயகரை வேண்டுமாறு கூறினார். விநாயகர் தனக்கு மிக அதிகமான வேலை இருப்பதாகவும் வியாசமுனிகள் வேகமாகப் பாடல்களை சொன்னால் மட்டுமே தன்னால் எழுதுவதை ஒத்துக்கொள்ள இயலும் என்றார். வியாசரும் அதற்கு ஒத்துக்கொண்டு, தன் பாடல்களின் பொருளை முழுமையாக உணர்ந்த பின்னரே எழுதவேண்டும் என்று விநாயகரை வேண்டினார். இவ்வாறு பேசி முடிவு செய்த பின்னர், வியாசமுனிவர் சொல்லச் சொல்ல மிகவேகமாக விநாயகர் எழுதத் தொடங்கினார். அவர் வேகத்திற்குப் பாடல்கள் சிந்தனையில் உருவாகாத நேரத்தில் கடினமான பாடல்களை சொன்னார் வியாசமுனிவர். எனவே அதனைப்புரிந்து கொள்ள விநாயகர் நேரம் எடுத்துக்கொள்ளும் சமயத்தில், பல பாடல்களை வியாச முனிவர் மனதில் சிந்தித்து வைத்துக் கொண்டார்.

இவ்வாறாக, மகாபாரதத்தை அறுபது இலட்சம் கிரந்தங்களில் சொல்லி முடித்தார் வியாச முனிவர். இதில் கந்தபுராணம், ராமாயணம், சாவித்திரி புராணம், நலபுராணம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மற்றும் பல புராணங்கள் அடங்கும். இவையாவும் விநாயகர் தன் ஒரு தந்தத்தை ஒடித்து மேருமலை மீது எழுதினார் என்பது புராண வரலாறு.

அவ்வாறு எழுதிய அறுபது இலட்சம் கிரந்தங்களில், முப்பது இலட்சம் தேவலோகத்திலும் பதினைந்து இலட்சம் கிரந்தங்கள் யாட்ச லோகத்திலும் பதினான்கு இலட்சம் கிரந்தங்கள் அசுர லோகத்திலும் இருப்பதாக புராண வரலாறு கூறுகிறது. இதில், ஒரு இலட்சம் கிரந்தங்கள் மட்டுமே பூமியில் இருப்பதாக நம்பப்படுகிறது. வியாசமுனிவர் எழுதிய கிரந்தங்களில் 8.800 கிரந்தங்களின் பொருட்களை விநாயகர் முழுமையாக உணரமுடியவில்லை என்பது வியாசமுனிவரின் கூற்று. மேலும் அந்த 8800 கிரந்தங்களின் பொருளை வியாசமுனிவர், விநாயகர், வியாசமுனிவர் மகன் சுகன் ஆகிய மூவர் மட்டுமே அறிவார்கள் என்பதும் முனிவர் வியாசரின் கூற்று. ஆக இவ்வாறு வியாசர் சொல்ல விநாயகர் எழுதிய மகாபாரதம் ஐந்தாவது வேதமாகக் கருதப்படுகிறது. (மற்ற நான்கு வேதங்கள் - ரிக், யஜுர், சாமம் மற்றும் அதர்வணம்)

3. காவிரி கடலில் கலந்த புராணக்கதை

திருவையாறு திருத்தலத்தில் அருள்புரிகிறார். அபீஷ்ட வரத கணபதி. திருவையாரின் எழில்மிக்க தோற்றத்தில் மயங்கிய காவிரி, திருவையாறிலே தங்கிவிட்டது அறிந்த சமுத்திரராசன், திருவையாறில் அருள்பாலிக்கும் அபீஷ்ட வரத கணபதியை வணங்கி, வழிபட்டு, காவிரி சமுத்திரத்தில் சங்கமம் செய்யுமாறு வேண்டினான். அவ்வேண்டுதலை ஏற்று, அபீஷ்ட வரத கணபதி, காவிரி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy
சமுத்திரத்தில் சங்கமிக்கச் செய்தார் என்று புராணம் கூறுகிறது. எனவே, சமுத்திரத்திராசன் அபீஷ்ட வரத கணபதியை வேண்டியதால் காவிரி சமுத்திரத்தில் சங்கமித்ததைப் போல, அபீஷ்ட வரத கணபதியைத் தரிசித்தால், திருமணத்தடை நீங்கும் என்பது ஐதீகம்.

4. விநாயகர் சீற்றம்

அச்சிறுபாக்கம் அல்லது அச்சரப்பாக்கம் என்ற ஊரில் எழுந்தளியுள்ள (அச்சு+இறு+பாகம் - அச்சு முறிந்து இருபாகம் ஆனது) விநாயகர் பெருமானை வணங்காது சிவபெருமான் திரிபுரம் எரிக்க புறப்பட்ட போது தேர் அச்சு முறிந்தது. பின்னர் விநாயகர் அருள்புரிந்து திருவதிகையில் சிவபெருமான் வென்றார்.

இவ்விநாயகர், ஆட்சீஸ்வரர் கோயில் அருகில் அமைந்து அருள்பாலிக்கிறார்-(இளங்கிளியம்மை உடனுறை ஆட்சீஸ்வரர் கோயில்).

5. உஜ்ஜையினியில் கணபதி வழிபாடு

இல்வாழ்க்கையில் உள்ளவர் பஞ்சபூத அதிபதிகளாகிய பஞ்ச தேவர்கள் உபாசனைகளைக் கடைபிடிப்பது உத்தமம். அதிலும் பரப்பிரம்ம ஸ்வரூபியாக வணங்கும் விக்ன விநாயகரின் வழிபாடு அதில் முதன்மையானது.

உஜ்ஜையினியில் ஷட்விநாயகர் என ஆறு கணபதிகள் துதிக்கப்படுகின்றனர்.

இடையூறுகளைக் களைபவர் கணபதி. புத்தி, சித்திகளுக்கு அதிபதி. அவந்திகாவில் கணபதி உபாசனை

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

அநேக முறைகளில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. சிவபஞ்சாயதன் வழி முறையில் சிவன், பார்வதி, கணபதி, கார்த்திகேயன், நந்தி என ஐவருக்கும் பூசைகள் நடத்தப் படுகின்றன.

இச்சாமன் என்ற விநாயகரும், அதன் அருகில் கணபதி தீர்த்தமும் உள்ளன. இவை இலக்குவனால் ஸ்தாபிக்கப்பட்டது.

தாந்திரிக வழிபாட்டில் குருவிற்கு அடுத்தபடியாக கணபதி வழிபாடு அமைக்கப்பட்டுள்ளது.

6. குழந்தைகள் மணலில் விளையாடக் கூடாது ஏன்?

பஞ்சபாணம் என்னும் மலர்க்களையே சிவபெருமான் மீது தொடுத்த மன்மதனை எரித்தார் நெற்றிக்கண்ணன். கயிலாயத்தில் மன்மதனை எரித்த சாம்பலை, விநாயகப் பெருமான் தன் இருகைகளிலும் எடுத்து குழைத்து உருவம் போல செய்து விளையாடினார். விநாயகர் தொட்ட சாம்பல் தவம் செய்தது. அப்போது அவ்வழி வந்த பிரம்ம தேவன் விநாயகரின் விளையாட்டுத் தனத்தைப் பார்த்து "நல்லது" "நல்லது" என்னும் பொருளில் "பண்ட" "பண்ட" என்று கூறிச் சென்றவுடன், தவம் செய்த சாம்பல் ஆற்றல் பெற்று பண்டாகரன் என்ற அரக்கனாகி, தேவர்களைக் கொடுமைபடுத்தினான். இடையூறுகளைத் தாங்க முடியாத தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட, அவரோ தேவியைக் கடைக்கண்ணால் பார்த்தார். தேவி, லலிதாம்பிகையாகக் கோலம் கொண்டு சக்கரராஜ ரதத்தில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy
ஏறி அசுரனிடம் யுத்தத்திற்குச் சென்று, பாசுபதாஸ்திரத்தை அவன் மீது ஏவி பண்டாசுரனை அழித்தாள். எனவே தான் குழந்தையை மணலில் விளையாடாதே என்று கூறுவது வழக்கமானது.

7. விடம் தீர்த்த விநாயகர் - திருமருகல் -திருவாரூர் மாவட்டம் - மாணிக்கவண்ணர் திருக்கோயில்

மருகல் என்பது ஒருவகை கல்வாழை. பாம்பு கடித்து இறந்த செட்டி மகளை, சம்பந்தர் சடையர் எனுமால் பதிகம் பாடி உயிர்ப்பித்தார். செட்டிப் பெண்ணோடு பின் திருமணம் செய்வித்தார். சித்திரைப் பெருவிழாவில் 6–ஆம் நாள் இந்த விடம் தீர்த்தார் என்பது ஐதீகம். எனவே விடம் தீர்த்த விநாயகர் சந்நிதி இங்கே இக்கோயிலில் உள்ளது விடம்தீர்த்த விநாயகரை சிறுத்தொண்டர் மகன் சீராளன் வணங்கியது, இவ்வூர் தலவரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கோயிலின் (வண்டுவார்குழலி உடனுறை மாணிக்கவண்ணர்) தெற்கு வீதியில், பாம்பு அறிது என்றும், பாம்பு கடிப்பதும் இல்லை என்றும் அப்படி கடித்தாலும் இறப்பது இல்லை என்று கூறுகின்றது வழக்கு.

8. விநாயகரை வணங்க மறந்த இந்திரன் பட்டபாடு

அமிர்தகடேஸ்வரர்-திருக்கோயில்-மேலக்கடம்பூர் ஓமாம் புலியூரிலிருந்து காட்டுமன்னார்குடி சாலையில் அமைந்துள்ளது.

விநாயகரை வேண்ட மறந்து, இந்திரன் தன் முதிய தாயாருக்காக கருவறையை குதிரைகளைப் பூட்டி இழுக்க விநாயகர் ஊன்றிய இடம். அங்காரகன் வழிபட்ட தலம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

9. திரௌபதி வழிபட்ட வலம்புரி விநாயகர்

பழ மண்ணிப்படிக்கரை இலுப்பைப்பட்டு நீலகண்டேஸ்வரர் - அமிர்தகரவல்லி திருக்கோயில் பஞ்சபாண்டவர் வழிபட்ட தலமாகும். யார் எத்தெய்வங்களை வணங்கினர்? விடை இதோ:

1. தருமர் - நீலகண்டர்
2. பீமன் - மகதீஸ்வரர்
3. அர்ச்சுனன்-படிக்கரைநாதர்
4. நகுலன்-பரமேசர்
5. சகாதேவன்-முத்தீசர்
6. திரௌபதி-வலம்புரி விநாயகர்

பிரமன், கண்வ மகரிஷி - வழிபட்ட ஊர் இதுவே.

10. குளம் வெட்டி விநாயகர் -

திருப்பூன்கூர் வைத்தீஸ்வரன் கோயில் அருகில் உள்ள திருத்தலம் திருப்பூன்கூர் சிவலோகநாதர்-சொக்கநாயகி திருக்கோயில். நந்தனாருக்காக நந்தியை விலகச் செய்த இந்த திருக்கோயிலில், பிரமாண்டமான நந்தி விலகியிருக்கிறது காணலாம்.

ஆலயத்தின் மேல்புறத்தில் உள்ள ரிஷபதீர்த்தத்தை வெட்டி சீர்படுத்த எண்ணினார் நந்தனார். தனக்கு யாரும் உதவவில்லை. எனவே நந்தனார் சிவபெருமானை வேண்ட, சிவபெருமான் விநாயகப் பெருமானை குளம் வெட்ட உதவிக்கு அனுப்பி வைத்தார். நந்தனாருடன் சேர்ந்து விநாயகர் பெருமான் குளம் வெட்டினார். எனவே இங்குள்ள விநாயகர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குளம் வெட்டி விநாயகர் என்று பெயர் பெற்றார். அந்த தீர்த்தம் கணபதி தீர்த்தம் எனப்பெயர் பெற்றது.

ஏயர்கோன் கலிக்காம நாயனார் தோன்றிய பெரு மங்கலம் வடக்கே அமைந்துள்ளது. வைஸ்தீஸ்வரன் கோயில்-திருப்பானந்தாள் வழியில் 3 கி.மீ. தொலைவில் திருப்பூன்கூர் அமைந்துள்ளது.

11. காதலை நிறைவேற்றிய கணபதி

திருமாலின் கண்மலரில் தோன்றிய சுந்தரவல்லி சரவணப் பொய்கையில் நீராடி முருகனையே தன் கணவனாக அடைய வேண்டும் என்று தவம் செய்து வந்தாள். முருகப்பெருமான், வள்ளிமலையில் பிறந்து தன்னை அடையுமாறு சுந்தரவல்லிக்கு வரம் தந்தார். வள்ளி மலையில் குறவன் இனத்தில் பிறந்த வள்ளியுடன் காதல் புரிந்தார் முருகன். வேடன், கிழவன் என பல வேடம் பூண்டு வள்ளியுடன் விளையாடினார். இறுதியில் தன் அண்ணன் விநாயகரை யானையாக வரும்படி அழைத்தார். அவ்வாறே விநாயகர் யானை உருவில் வந்தார். பயந்து போன வள்ளி முருகனைத் தஞ்சம் அடைந்தாள். முருகன் வள்ளியை மணந்து அருள் பாலித்தார்.

"அக்குற மகளுடன் அச்சிறு முருகனை அக்கண மணமுரும் பெருமானே" என இந்நிகழ்வை திருப்புகழில் அருணகிரிநாதர் பாடியுள்ளார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

12. காவிரியை அகத்தியர் அடைத்ததும், விநாயகர் விடுவித்தலும்

செல்வத்தின் தலைவன் குபேரன். அவன் புதல்வி காவேரி. காவேரியின் கர்வத்தை அடக்க எண்ணிய அகத்தியர், அவளைத் தன் கமண்டலத்தில் அடைத்தார். விநாயகர் காக்கை உருவில் வந்து கமண்டலத்தைக் கவிழ்த்து, காவேரியை மக்கள் நன்மைக்காகப் பெருக்கெடுத்து ஓடச் செய்தார்.

அவ்வாறு உருவான காவிரிக்கு நடைபெறும் விழாதான் ஆடிப்பெருக்கு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாகம் மூன்று

(பிள்ளையார் எத்தனை பிள்ளையார்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிள்ளையார் எத்தனை பிள்ளையார்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

1. உச்சிப் பிள்ளையார் - திருச்சிராப்பள்ளி - மலைக்கோட்டை
2. கற்பக விநாயகர் - பிள்ளையார்பட்டி
3. வீர விநாயகர்
4. வடக்கு விநாயகர்
5. மாப்பிள்ளை விநாபகர்
6. மாஜிஸ்திரேட் விநாயகர் (அல்லது) நீதிவிநாயகர் - திருப்பூர் நீதிமன்ற வளாகம்
7. மகாகணபதி - (கோகர்நா - கர்நாடகா)
7. (அ) மகாகணபதி - Ashta Vinayak - Ranjangaon)
8. வெள்ளைப் பிள்ளையார் - திருவலஞ்சுழி, சென்னை புது ஆவடி சாலையும், கீழ்பாக்கம் தோட்டச்சாலை சந்திக்கும் இடம்.
9. கூப்பிடு பிள்ளையார் - திருமுருகன் பூண்டியிலிருந்து அவிநாசிக்குப் போகும் வழியில் அமைந்துள்ளார்.
10. பொங்கல் பிள்ளையார் - பள்ளத்தூர் அருகில் வேலாங்குடி - முனீஸ்வரர் அம்சமாக வழிபடுதல் நிகழும்.
11. முந்தி விநாயகர் புலியகுளம் - கோவை - ஆசியாவில் மிகப்பெரிய விநாயகர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

12. சக்தி விநாயகர் - பழனி அருகில் தட்டான்குளம் - பராசக்தி மடிமீது அமர்ந்த கோலம்

13. பஞ்சமுக விநாயகர் - திருவொற்றியூர் தியாகேஸ்வரர் கோயில் - வலஞ்சுழி சிந்தாமணி விநாயகர் கோயில் - வடபழனி, மணக்குள விநாயகர் கோயில் - பாண்டிச்சேரி

14. ஓங்கார விநாயகர் - காஞ்சிபுரம் திருவோணகாந்தன் கருவறை மண்டபத்தின் நுழைவாயிலில் உள்ளார்

15. பொல்லாப் பிள்ளையார் - திருநாரையூர்

16. மிளகு பிள்ளையார் - திருநெல்வேலி - சேரன்மகாதேவி

17. கரும்பு விநாயகர் - மதுரை திருப்பரங்குன்றம்

18. திருக்கருத்து விநாயகர் - நாகர் கோயில் - வடசேரி

19. ஞானசம்பந்தப் பிள்ளையார் - தேரழுந்தூர், திருஞானசம்பந்த விநாயகர் - தொட்டியம் (திருச்சி மாவட்டம்)

20. மாற்றுரைத்தப் பிள்ளையார் - திருவாரூர்

21. ஈச்சநாரி பிள்ளையார் - கோவை

22. வெயில் காத்த பிள்ளையார் - ஆவுடையார் கோயில்

23. படிக்காசுப் பிள்ளையார் - திருவீழிமிழலை

24. செவிசாய்த்த விநாயகர் - லால்குடி, அன்பில்

25. காளிங்கநர்த்தன விநாயகர் - மருதீசர் கோயில், திருவான்மியூர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

26. கண்திருஷ்டி விநாயகர்

27. விசுவரூப விநாயகர்

28. வெற்றி விநாயகர்

29. முக்குருணி விநாயகர் - சிதம்பரம் நடராசன் கோயில் - மதுரை மீனாட்சியம்மன் கோயில்.

30. பிரசன்ன விநாயகர் - கீழ்பாக்கம் கார்டன் சாலை

31. வேத விநாயகர் - நுங்கம்பாக்கம் - சென்னை அகத்தீஸ்வரர் கோயில் குளக்கரையின் கீழ்புறக் கரை குளம் நுழைவாயில் வலப்புறம் அமைந்து அருள்பாலிக்கிறார்.

32. செல்வ கணபதி

33. வினைதீர்த்த விநாயகர் - கிருஷ்ணாநகர், முகப்பேர்

34. வரசித்தி விநாயகர் - குண்டூர் ஆந்திரமாநிலம்

35. சர்வசித்தி விநாயகர் - திருமுல்லைவாயில்

36. நர்த்தன விநாயகர் - மயிலை கபாலீஸ்வரர் கோயில் (தெற்கு கோபுர நுழைவாசல் எதிரில் அமைந்துள்ள சந்நிதியில் அருள்பாலிக்கிறார்.)

37. மங்கள விநாயகர்

38. சிந்தாமணி விநாயகர் - அண்ணாநகர் கிழக்கு

39. வாதாபி கணபதி - திருச்செங்காட்டங்குடி

40. பழிக்கு அஞ்சிய விநாயகர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

41. பிரளயங்காத்த விநாயகர் - திருப்புறம்பயம் சாட்சிநாதர் திருக்கோயில் கும்பகோணத்திலிருந்து 10 கி.மீ

42. ஆபத் சகாய விநாயகர் - திருத்தணி முருகன் கோயில்

43. ஏகாதச ஸ்வயம்பு விநாயகர்

44. ஸ்வாநந்தேச கணபதி

45. கல்யாண விநாயகர் - அண்ணாநகர் மேற்கு விரிவாக்கம் டிவிஎஸ் அவின்யூ சிவாவிஷ்ணு ஆலயம். வள்ளி, தெய்வானையுடன் கல்யாண காட்சி அளிக்கும் முருகர் சந்நிதியின் எதிரில் உள்ள சந்நிதியில் அருள்பாலிக்கிறார்.

46. வல்லப கணபதி

47. வலம்வந்த விநாயகர்

48. கைகாட்டி விநாயகர்

49. கடுக்காய்ப் பிள்ளையார்

50. நாகாபரணப் பிள்ளையார்

51. பால கணபதி - சென்னை நுங்கம்பாக்கம் அகத்தீஸ்வரர் - அகிலாண்டேஸ்வரி திருக்கோயில் கருவறையின் இடப்புறம் அமைந்து அருள்பாலிக்கிறார்.

52. தருண கணபதி

53. பக்த கணபதி

54. த்விஜ கணபதி

55. உச்சிஷ்ட கணபதி - மதுரை அருகில் தாமிரபரணி ஆற்றின் நதிக்கரையில் ஆசியாவின் மிகப்பெரிய கணபதி கோயில் உள்ளது. அங்கு உள்ளவர் இக்கணபதி.

In Public domain. Digitization: Muthulakshmi Research Academy

56. விக்ந கணபதி

57. க்ஷிப்ர கணபதி

58. ஹேரம்ப கணபதி

59. நிருத்த கணபதி

60. ஊர்த்தவ கணபதி

61. காவிரிகண்ட கணபதி - கரூர் அருகில் கொடுமுடியில் மகுடேஸ்வரர் வீரநாராயணன் திருக்கோயிலில் உள்ளவர்.

62. முச்சந்தி விநாயகர் - கோடம்பாக்கம்

63. நவசித்தி விநாயகர் - அண்ணாநகர் சிந்தாமணி அருகில்

64. வலம்புரி விநாயகர் - திருவலஞ்சுழி

65. மாணிக்க விநாயகர் - திருச்சி மலைக்கோட்டை வடக்கு நுழைவாயிலில் உள்ளவர்.

66. திருப்பள்ளி விநாயகர் - சூளைமேடு, சென்னை

67. சுமுக விநாயகர் சென்னை புரசைவாக்கம் கங்காதீஸ்வரர் கோயில் அருகில் (புரசை குளம் முனையில்)

68. தாண்டவ விநாயகர் - அயனாவரம் சென்னை ஜாயிண்ட் ஆபீஸ் பேருந்து நிலையம் அருகில்.

69. சிவசக்தி விநாயகர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

70. சுந்தர கணபதி - ஏர்வாடி, திருமுல்லைவாயில்

71. நாரதர் வழிபடும் விநாயகர்

72. வில்லேந்திய விநாயகர்

73. பர்லசக்தி விநாயகர்

74. ஏகாட்சர கணபதி

75. வர கணபதி

76. திரயா சஷ்ரகணபதி

77. சனீஸ்வரனை ஏமாற்றிய கணபதி

78 இராவணனை பந்தாடிய கணபதி

79. சிவனை வழிபடும் விநாயகர்

80. நளன் வழிபடும் விநாயகர்

81. தசமுக கணபதி

82. காம குரோதம் வதம் செய்த கணபதி

83. கம்பத்தடி விநாயகர் - திருச்சி மலைக்கோட்டை தாயுமானவர் சந்நிதி அருகில் அமைந்து அருள்புரிகிறார்.

84. செவ்வந்தி விநாயகர்

85. அமிர்த கலச கணபதி

86. சத்திப்டைத்த கணபதி

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

87. சித்திவிரி விநாயகர்

88. தியான கணபதி

89. அக்காசாமி சாலையின் பிள்ளையார் - பாண்டிச்சேரி

90. நவசித்தி சுயம்பு விநாயகர் - விநாயகபுரம் சித்தூர் அருகில் - ஆந்திரமாநிலம்

91. மணக்குள விநாயகர் - பாண்டிச் சேரியில் மிகப் பிரசித்தி பெற்ற கோயில்

92. வெய்யில் உகந்த விநாயகர் - உப்பூர் இராமேஸ்வரம் அருகில்

93. சுயம்பு செல்வவிநாயகர் - செம்பாக்கம் வெள்ளூர்

94. ஆதி விநாயகர் - திலதர் பணபுரி - திருவாரூர்

95. சுயம்பு பொய்யாமொழி விநாயகர் - தேவனூர் - திண்டிவனம் அருகில்

96. பொய் சொல்லாத விநாயகர் - திருத்துறைப்பூண்டி

97. சித்தி அரசு விநாயகர் - குருவபுலம் விநாயகர் வேதாரண்யம் அருகில்

98. சாந்தி விநாயகர் - நெல்லை பாளையங்கோட்டை காவலர் குடியிருப்பு சாந்தி நகரில் உள்ள விநாயகர்.

99. பாசிக்குளம் விநாயகர் - எடுத்துக் காட்டி - சாத்தானூர் திருக்கடையூர் அருகில்

100. சர்ப்ப விநாயகர் - பாபநாசம் கும்பகோணம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

101. சுயம்பு விநாயகர் - காணிப்பாக்கம் சித்தூர் மாவட்டம் ஆந்திரமாநிலம் பெரிய விநாயகர் கோயில்.

102. விக்னராஜ கணபதி

103. துண்டி விநாயகர் - காசி

104. சங்காஸ்தா கணபதி - கொடுமலாயி - (மகாலார் -கர்நாடகா)

105. சசிவேகாலு கணபதி - (ஹம்பி - கர்நாடகா)

106. காசவா கணபதி - பூனே மகாராஷ்டிரா

107. துக்தோ சத் ஹல்வாய் கணபதி

108. தித்வாலா கணபதி - மும்பை

109. சரஸ்பாக் கணபதி - பூனே

110. சிந்தாமி விநாயக் - சிந்தாமி (ஆஸ்தா வினாயக் தேவூர்)

111. மோரேஸ்வர் வினாயக் - மோரேஸ்வர் (ஆஸ்தா வினாயக் மோரிகான்)

112. சித்தி வினாயக் - (ஆஸ்தா விநாயக் - சித்தா தேக்)

113. விக்னேஸ்வர் - அஷ்தாவினாயக் - ஓசர்

114. கிரிஜத்மாஜ் வினாயகர்- லென்யாத்ரி

115. வரத் விநாயக் - மகாத்

116. பல்லாலீஸ்வர் - பாலி

117. சிற்ப கணபதி

In Public Domain Digitization Muthulakshmi Research Academy

118. ஏகாக்சரா கணபதி

119. திரையாட்சரா கணபதி

120. சிப்ரபிரசாத கணபதி

121. ஹிரித்ரா கணபதி

122. ஏகதந்த கணபதி

123. சிரிஸ்தி கணபதி

124. ஊத்தாண்ட கணபதி

125. ருனமோசன கணபதி

126. இரட்டை முக கணபதி

127. மும்முக கணபதி

128. சிம்ம கணபதி

129. யோக கணபதி

130. துர்க்கா கணபதி

131. சங்கதஹரா கணபதி

132. காஞ்சி தார்த்த விநாயகர்

133. வேம்படி விநாயகர் - சென்னை புரசைவாக்கம்

134. ஆழத்துப்பிள்ளையார் - ஆழத்து விநாயகர் - விருத்தாசலம் - இரயில்நிலையம் அருகில் "பெருகும் ஆழ்த்துப் பிள்ளையைப் பேணுவாய்" என்கிறது விருத்தாச்சலப்புராணம்

In Public domain: Digitization Mothulakshmi Research Academy

135. குணாலய பேரம்பன் விநாயகர்

136. தாயிலும் நல்ல விநாயகர் - பெரம்பலூர் மாவட்டம் - ஊர்கல்பாடி

137. வசந்தறாய பிள்ளையார் - திருச்சி திருஜெம்பு கேசுவரர் ஆலயம் நவக்ரகத்திற்கு வலதுபுறம்

138. சூர்ப்பிள்ளையார் - திருச்சி மலைக்கோட்டை தாயுமானவர் சந்நிதி நுழைவாயிலில் - சித்திபுத்தி இரு நங்கையுடன்

139. நாவற்கனி விநாயகர் - சூலூர்பேட்டை ஆந்திரமாநிலம்

140. சித்தலட்சுமி விநாயகர் - ராமேஸ்வரம் ராமஸ்வாமி ஆலயம்

141. செந்தூர விநாயகர் - திருவண்ணாமலை - திருவண்ணாமலையார் திருக்கோயில்

142. பேட்டை சர்க்கரை விநாயகர் - நெல்லையிலிருந்து ஐந்து கி.மீ தொலைவில் உள்ளது.

143. பாதாள விநாயகர் - திருகாளத்தி திருக்கோயில்

144. வித்யா கணபதி

145. திருநீற்றுப் பிள்ளையார் (விபூதி விநாயகர்) - மதுரை மீனாட்சியம்மன் கோயில் பொற்றாமைரைக் குளத்தின் அருகில்

146. மகிழமர விநாயகர் - திருவண்ணாமலையார் திருக்கோயில்.

In Public domain Digitization Muthulakshmi Research Academy

147. முத்துமாலை விநாயகர் - திருவண்ணாமலையார் திருக்கோயில்

148. ஸ்ரீ அதிசயப் பிள்ளையார் - கேரளபுரம் - கன்னியாகுமரி - ஸ்ரீ மகாதேவர் கோயில், ஆவடி பேருந்து நிலையம் அருகில்.

149. ஜோதி விநாயகர் - கிரிவலம் சாலை திருவண்ணாமலை

150. ஆதிவிநாயகர் - ஸ்ரீவில்லிபுத்தூர் திருவண்ணாமலை பெருமாள் கோயில் (தென் திருப்பதி)

151. சுதந்திர விநாயகர் - மாயவரம் (மயிலாடுதுறை) 4வது நடைமேடை - இரயில் நிலையம்

152. திருமுறைகாட்டிய விநாயகர் - சிதம்பரம் நடராசர் கோயில் மேற்கு கோபுர நுழைவாயில் - உள்சுற்று ஸ்ரீ விநாயகர் அப்பர் தாயுமானவர் சந்நிதி அருகில் உள்ளார்.

153. குடவரை விநாயகர் - வைத்தீஸ்வர சுவாமி திருக்கோயில் நுழைவாயில் வலப்புறம் அமைந்துள்ளார்.

154. கோள்வினைதீர்த்த விநாயகர் - சூரியன் கோயில் கும்பகோணம்

155. ஸ்ரீ க்ஷேத்திர விநாயகர் - சுக்கிரன் கற்பகாம்பாள் கோயில் (கஞ்சனூர்)

156. குழந்தை விநாயகர் - திருநள்ளாறு பிரம்மதீர்த்தம் குளக்கரை

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

157. வழித்துணை விநாயகர் - திருத்தணி - மலைச்சாலை நுழைவாயிலில் இடப்புறத்தில் அமைந்துள்ளார்

158. ஸ்ரீபாலகைலாச விநாயகர் - மேத்தா நகர், சென்னை

159. ஸ்ரீவலஞ்சுழி விநாயகர் - டிவிஎஸ் அவென்யூ, அண்ணாநகர், சென்னை, மேற்குவிரிவாக்கம், சிவாவிஷ்ணு ஆலயம்

160. கம்பீர விநாயகர் - சென்னை பாடியின் தெருவில் அமைந்து அருள்பாலிக்கிறார்.

161. மங்கள சித்தி விநாயகர் - வல்லம் - தஞ்சை -திருச்சி நெடுஞ்சாலை

162. தோணஹ விநாயகர் - குன்றக்குடி

163. அச்சிருபாக்கம் விநாயகர் - அச்சரப்பாக்கம் - சென்னை - மேல்மருவத்தூர் அருகில்

164. குளம் வெட்டி விநாயகர் - திருப்புன்கூர் சிவலோகநாதர் கோயில்

165. விடம்தீர்த்த விநாயகர் - திருமருகல் - திருவாரூர் மாவட்டம்

166. ருணம் தீர்த்த விநாயகர் - சீர்காழி - திருஞானசம்பந்தர் - கோயில் வெளிப்பிரகாரம்

167. சம்பந்த விநாயகர் - திருவண்ணாமலை அருணாச்சலேசுவரர் திருக்கோயில்

168. ஸ்ரீ கன்னிமூலகணபதி - அண்ணாநகர் - 14வது பிரதான சாலை (சந்தோஷ் ஸ்டோர் அருகில்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

169. அரசடி தங்க விநாயகர் - முகப்பேர் எம்.எம்.எம். மருத்துவமனை அருகில்

170. ஸ்ரீ அம்சவிநாயகர் - குமரன்நகர், மகாத்மா காந்தி சாலை - பாடி

171. சன்னதி விநாயகர் - திருஞானசம்பந்தர் தெருவில் பாடியில் திருவல்லீஸ்வரர் திருக்கோயில் எதிரில் அமைந்துள்ளது.

172. தண்டரை விநாயகர் - ஒவியர் மணியம் செல்வம் கிராமம் தண்டரை. தண்டரையில் சுயம்புவாகத் தோன்றியவர்.

173. நாகயக்ஞோபவீத கணபதி - திரிசூலம் சென்னை - மீனம்பாக்கம் அருகில் திரிசூலநாதர் திருக்கோயில்

174. விஜயராகவ விநாயகர் - உண்ணாமுலையம்மை சந்நிதி நுழைவாயிலின் இடப்புறம் செந்நிறத்தில் (குருதிநிறத்தில்) காட்சியளிக்கிறார். (திருவண்ணாமலை திருக்கோயில்)

175. யானைதிறை கொண்ட விநாயகர் - திருவண்ணாமலை திருக்கோயில் - இவர்தான் இக்கோயில் ஸ்தல விநாயகர் ஆவார்

176. ராஜவிநாயகர் - கற்பகாம்பாள் சந்நிதி நுழைவாயில் அருகில் சுக்கிரன் - கற்பகாம்பாள் கோயில் கஞ்சனூர் (கும்பகோணம்)

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

177. தலையைத் [illegible] தரும் விநாயகர் - கிரிவலம் திருவண்ணாமலை

178. ஆதியந்தப்பிரபு - வலப்புறம் விநாயகரும் இடப்புறம் அனுமனும் இணைந்த திருமேனி - சென்னை அடையாறு மத்திய கைலாயம் திருக்கோயில் சேலம் சந்திரகிரியிலும் இத்திருக்கோலத்தில் வினாயகர் அருள்பாலிக்கிறார்.

179. செங்கழுநீர் விநாயகர் - பார்க் நகர் சென்னை இரயில்வே கோட்டம் - நுழைவாயில் வலப்புறக் கோயிலில் அருள்பாலிக்கிறார்.

180. பழவங்காடி விநாயகர் - திருவனந்தபுரம்

181. அதிர்ஷ்ட விநாயகர் - லோயோலா கல்லூரி அருகில், லோயோலா கல்லூரியிலிருந்து வள்ளுவர் கோட்டம் செல்லும் சாலையில் அமைந்துள்ளது.

182. வில்வ மரத்தடி விநாயகர் - காரைக்குடியில் இருந்து முப்பது கி.மீ தொலைவில் உள்ள பாகம் பிரியாள்-வல்மீகநாதர் திருக்கோயிலில் அருள் பாலிக்கிறார். இங்குள்ள வில்வ மரத்தடி விநாயகரை வணங்கி, பின்னர் மேற்சொன்ன அம்மனையும் சுவாமியையும் வணங்கி வலம் வருவோருக்கு எல்லா தோஷங்களும் விலகி நன்மைகளும் உண்டாகும்.

183. சிரட்டைப் பிள்ளையார் - நெல்லையிலிருந்து திருச்செந்தூர் செல்லும் சாலையில், பாளையங் கோட்டை அருகில் உள்ள பிள்ளையார் சிரட்டைப் பிள்ளையார்.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

184. அபீஷ்ட வரத கணபதி - திருவையாறு

185. சிலம்பணி விநாயகர் - தேவகோட்டையில் உள்ள ஒரு கோயிலில் விநாயகர் காலில் சிலம்புடன் காணப்படுகிறார். இவருக்கு சிலம்பணி விநாயகர் என்று பெயர்.

186. படிக்காசுப் பிள்ளையார் - மதுரை

187. வெள்ளைப் பிள்ளையார் - திருவலஞ்சுழி

188. தான் தோன்றி விநாயகர் - மருதமலை அடிவாரம்

189. ஆதி விநாயகர் (தும்பிக்கையில்லாதவர்) - பூந்தோட்டம் (மயிலாடுதுறை - திருவாரூருக்கு இடையில் உள்ளது).

190. ஆதி விநாயகர் (தும்பிக்கையுடன்) - தானா தெரு - புரசை - சென்னை

191. தேங்காய்ப்பிள்ளையார் - திருபுவனம் - மதுரை

192. தலையாட்டிப் பிள்ளையார் - ஆத்தூர் - சேலம் மாவட்டம்.

193. வாகனப் பிள்ளையார் - ஆத்தூர் - சேலம் மாவட்டம்

194. சுகம் தரும் விநாயகர் - அரசு மருத்துவமனை வளாகம் - குளித்தலை கரூர் மாவட்டம்.

195. மிளகு பிள்ளையார்

196. கல்கி பிள்ளையார்

197. காம தேனு விநாயகர்

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

198. பிரம்ம கணபதி

199. சிரஞ்சீவி விநாயகர் - சன்னதி தெரு - வடபழனி

200. பிணி தீர்க்கும் பிள்ளையார் - துரைசாமி சாலை - (வடபழனி கனராவங்கி கிளை அருகில்) வடபழனி.

201. முத்து விநாயகர் - அசோக் நகர் முத்துமாரியம்மன் கோயில் (கருவறை நுழைவாயில் வலப்புறம்)

202. அன்பு விநாயகர் - சட்டக்கல்லூரி மாணவர் விடுதி எதிரில் புரசை நெடுஞ்சாலை

203. வேண்டுதல் விநாயகர் - ஹால்ஸ் சாலை எதிரில் (கீழ்ப்பாக்கம் கார்டன் அருகில்)

204. காந்தி விநாயகர் தூத்துக்குடி

205. நேரு விநாயகர் - மதுரை ஆலாய சுந்தர விநாயகர் (மறுபெயர் நேரு விநாயகர்)

206. டிரான்ஸ்டர் விநாயகர் - கோவை.

207. மொட்டை விநாயகர் - மதுரை விளக்குத்தூண் அருகில்.

208. ஆவின் விநாயகர் - சென்னை அம்பத்தூர் தொழில் பேட்டையில் உள்ள ஆவின் பால் நிறுவனத்தின் உள்ளே.

209. நியூயார்க் வல்லப விநாயகர் - சென்னை - பெசன்ட் நகர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

210. துவார கணபதி - சென்னை வட பழனி முருகன் கோயில் - மூலவரின் கருவறை நுழைவாயிலில் வலதுபுறம் அமைந்து அருள்பாலிக்கிறார்.

211. பஞ்ச கோஷ்ட கணபதி - செல்வ விநாயகர் கோயில் பாக்கியத்தம்மாள் நகர் - பாடி - சென்னை

212. சுற்றும் விநாயகர் - கரூர்

213. திருவருள் வரசித்தி விநாயகர் - முன்னாள் பல்லவன் தலைமையகம் நுழைவாயில் அருகில் - பெரியார் பாலத்திலிருந்து சென்ட்ரல் செல்லும் வழி

214. சென்ட்ரல் செல்வ விநாயகர் - சென்னை சென்ட்ரல் இரயில் நிலைய வளாகம்.

215. கள்ளவாரணப்பிள்ளையார் - திருக்கடையூர் அமிர்த்த கடேசுவரர் ஆலயம்.

216. சதுர்முக விநாயகர் - மணக்குள விநாயகர் கோயில் - பாண்டிச்சேரி

217. ஆடிவரும் பிள்ளையார் - கோவை

218. நூதன செல்வ விநாயகர் - இளங்கோநகர் பேருந்து நிலையம் அருகில் (அண்ணாநகர் விரிவாக்கம் - மேற்கு)

219. ஊருணிக்கரை விநாயகர் - பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் கோயில் குளக்கரை மண்டபம்.

220. கோஷ்ட விநாயகர் - பிள்ளையார்பட்டி கற்பகவிநாயகர் கோயில்

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

221. மின்சக்தி விநாயகர் - டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை, சென்னை (மின் நிலைய வளாகம்)

222. வெண்ணெய் விநாயகர் - பார்த்தசாரதி கோயில், திருவல்லிக்கேணி, சென்னை

223. தோகையடி விநாயகர் - குன்றகுடி

224. புஷ்ப விநாயகர் - புஷ்பாநகர் - சென்னை

225. விஸ்வகர்ம விநாயகர் - ஐயர்மலை (குளித்தலை அருகில்)

226. வழிவிடும் சித்தி விநாயகர் - வடக்கு வெளிவீதி, மதுரை - 1

227. வழிவிடும் செல்வ விநாயகர் - மதுரை - திருப்பத்தூர் பேருந்து நிலையம் அருகில்

228. கோரக்க விநாயகர் - பிள்ளையார் பட்டி (ஏரிக்கரை)

229. காவாணிப் பிள்ளையார் - சங்கரன் கோயில்

230. குறுங்கைவிநாயகர் - குறுக்கை வீரட்டானம்

231. காப்பி விநாயகர் - திருநாட்டியத்தான் மூடி

232. அகத்திய விநாயகர் - மதுரை

233. தூண்டில் விநாயகர் - ஸ்ரீ வைகுண்டம்

234. பஞ்சமுகி விநாயகர் - நாகப்பட்டினம்

235. பைரவி விநாயகர் - புதுக்கோட்டை

236. வயிறு வெடித்த விநாயகர் - காக்கை நல்லூர்

237. வெள்ளருக்கு விநாயகர் - ஒரகடம்

238. சாளக்ராம விநாயகர் - திருநல்லூர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

239. தூண்டுகை விநாயகர் - திருச்செந்தூர்

240. நாலாயிரத்தொரு விநாயகர் - திருமணிக்கூடம் சீர்காழி அருகில்

241. கறுக்காத விநாயகர் - திருக்கச்சூர்

242. ஓலமிட்ட விநாயகர் - திருவையாறு

243. கடுகு பிள்ளையார் - ஹம்பி

244. பஞ்ச முக விநாயகர் - திருவொற்றியூர் தியாகேஸ்வரர் திருக்கோயில்

245. கணக்கு பிள்ளையார் - கங்கைகொண்ட சோழபுரம் பிரகதீஸ்வரர் ஆலயம்

246. திருஓணவிநாயகர் - கேரளமாநிலம்

247. ஆபத்துகாத்த விநாயகர் - திருச்செங்கோடு நாமக்கல் மாவட்டம்

248. மையடித்த பிள்ளையார் - திருவாரூர், கமலாலயக் குளக்கரையில் உள்ளது. இவர்மீது மையடித்துச் சென்றால் தேர்வில் வெற்றி நிச்சயம் என்கின்றனர்

249. உக்கிரம் தணித்த விநாயகர் - திருவானைக் கோயில் அகிலாண்டேஸ்வரி, ஜெம்புகேஸ்வரர் திருத்தலம்

250. தங்க பிள்ளையார் - திருவாரூர் - தியாகராசர் திருக்கோயில்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy